
தமிழ்நாடு மாநில
சிறுபான்மையினர்
ஆணையம்






# சிறுபான்மையினருக்கான நலத்திட்ட கையேடு


தமிழ்நாடு அரசு
GOVERNMENT OF TAMIL NAD

தமிழ்நாடு மாநில
சிறுபான்மையினர் ஆணையம்

# சிறுபான்மையினருக்கான
## ஒன்றிய, மாநில அரசுகளின் திட்டங்கள் மற்றும் நல உதவிகள் பற்றிய கையேடு


வெளியீடு

**சா. பீட்டர் அல்போன்ஸ்**

தலைவர்

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

**மு.க. ஸ்டாலின்**
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.



நாள்: 7–10–2021

## வாழ்த்துச் செய்தி

அனைத்துத் தரப்பு மக்களின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் உறுதி செய்ய வேண்டியது, மக்கள் நலம் நாடுகின்ற ஒரு நல்ல அரசின் கடமை. அந்த வகையில் தமிழ்நாட்டின் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பிற்கும், நல்வாழ்விற்கும் தேவைப்படுகின்ற பல நல்ல திட்டங்களை நமது அரசு செயல்படுத்தி வருகின்றது. எவ்வளவு சிறப்பான திட்டமாக இருந்தாலும், மக்களது பங்களிப்பும், பங்கேற்பும் இல்லையென்றால் அந்தத் திட்டங்கள் எதிர்பார்த்த பலன்களைத் தருவதில்லை.


சிறுபான்மை இன மக்களுக்காக நாம் செயல்படுத்தி வரும் திட்டங்களை அந்த மக்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்களை அத்திட்டங்களில் முழுமையாகப் பங்கேற்றுப் பயனடையச் செய்ய தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் சார்பாக அதன் தலைவர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் வெளியிடுகின்ற இக்கையேடு மிக்க உதவியாக இருக்கும் என்பது உறுதி.

"தாய் தான் பெற்ற குழந்தைகளில் சற்று பலவீனமாக இருக்கும் குழந்தையின் மீது அதிக கவனம் கொள்வது போல, நான் ஜனநாயகத்தில் பலவீனமான குழந்தையாக இருக்கின்ற சிறுபான்மை மக்கள் மீது கொஞ்சம் அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறேன்" என்று சொன்ன தலைவர் கலைஞர் அவர்களின் அடியொற்றி நடக்கும் நமது அரசு சிறுபான்மையின மக்கள் நலன்மீது மிகவும் கவனமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக ஒரு தனி அமைச்சகத்தையே உருவாக்கியுள்ளோம்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்களை ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் வளர்ச்சியில் ஒருங்கிணைக்கவும் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் எடுத்து வரும் நல்ல முயற்சிகளையும், முன்னெடுப்புகளையும் நான் அறிவேன். அதற்காக ஆணையத்தின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மனமாரப் பாராட்டி, அவர்களது முயற்சிகள் வெற்றிபெற எனது ஆதரவினையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)



"எல்லா மதங்களும் ஒன்றே!
எல்லா மனிதர்களும் ஒன்றே!
உண்மை எல்லாவற்றுக்கும் மேலானது!
ஆனால் அதற்கும் மேலானது ஒன்றுண்டு;
அதுதான் உண்மையின் வழி வாழ்வது."

– கலைஞர்

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான்**
சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009



நாள் 10.10.2021

## வாழ்த்துச் செய்தி

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் ஆகியோரது எண்ணமான சமூக நீதியை எட்டுவதே தமது கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் தளபதியார் அவர்களது எண்ணங்களை செயலாக்கி சமூக படிநிலையில் இன்னும் முன்னேற்றம் காண வேண்டிய சிறுபான்மையின மக்களை முன்னகர்த்திச் செல்லும் செயல் திட்டமாக அவர்களது கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் அவர்களுக்குரிய சமூக நலத் திட்டங்களை எளிதில் கண்டடைதல் ஆகியவற்றிற்கு ஒரு கையேட்டினை வெளியிடும் சிறுபான்மையினர் ஆணையத்தின் செயலை வரவேற்பதுடன், சிறுபாமையின மாணவ–மாணவியர், மகளிர், தொழில் முனைவோர், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களும் இந்த கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி பயனடைவர் என்பதை எண்ணி மகிழ்கிறேன்.

அன்புடன்

**(செஞ்சி கே.எஸ். மஸ்தான்)**

**S. PETER ALPHONSE, B.Sc., B.L.,**
**Chairman**
**State Minorities Commission**
**Member: State Police Board**
**GOVERNMENT OF TAMIL NADU**

735, Anna Salai,
LLA Building (3rd Floor),
Chennai - 600 002,
Phone No: 044-28510303
Fax No: 044-28515255
E-Mail: smcchairmantn@gmail.com

## முன்னுரை



அன்புள்ள சகோதர, சகோதரிகளுக்கு,

**வணக்கம்**

தமிழ்நாடு அரசின் சிறுபான்மை ஆணையத்தின் தலைவராக, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களால் 28.06.2021 அன்று நியமிக்கபட்டேன். தமிழ்நாட்டில் வாழும் மத சிறுபான்மையினர், மொழி சிறுபான்மையினர் ஆகியோரின் நலன், வாழ்வாதாரம் மற்றும் உரிமைகளை பேணி பாதுகாப்பதற்கும், அவைகளை பற்றிய தரவுகளையும், தகவல்களையும் தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சேர்க்கவும், சிறுபான்மையினருக்கான சிறப்பு திட்டங்கள் முறையாக நடைபெறுகின்றனவா என்பதை கண்காணித்து, பிரச்சினைகளை அரசிடம் எடுத்து சென்று அதற்கான தீர்வுகளை பெற்று தரவும், **"சமூகநீதியின் அவதார புருஷர் தலைவர் கலைஞர்"** அவர்களால் இந்த ஆணையம் உருவாக்கப்பட்டது. பின்னர் சட்டமன்றத்தில் நான் வைத்த வேண்டுக்கோளை ஏற்று தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆணையத்தை "சட்டபூர்வ ஆணையமாக" (statutory commission) அங்கீகாரம் தந்தார். அதே ஆணையத்திற்கு நான் ஒரு நாள் தலைவராக நியமிக்கப்படுவேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை. மத சிறுபான்மையினரும், மொழி சிறுபான்மையினரும் தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 35% என் மீது நம்பிக்கை வைத்து அந்த மக்களின் நலம் பேணும் இந்த மாபெரும் பணியினை எனக்கு வழங்கிய **மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு** நான் வாழ்நாள் முழுவதும் நன்றி கடன் பட்டுள்ளேன்.

பெரும்பான்மையினரின் வாக்குகளே, பாராளுமன்ற ஜனநாயகத்தில் ஆட்சியையும், அதிகாரத்தையும் நிர்ணயிக்கின்றன. சிறுபான்மையினரின் உரிமைகளை, நலனை பற்றி சிந்திக்கின்ற அரசியல் கட்சிகளையும், தலைவர்களையும் இன்றைய காலச்சூழலில் விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் எந்த சூழ்நிலையிலும், யார் எதிர்த்தாலும் சிறுபான்மை மக்களது பாதுகாப்பு மற்றும் உரிமைகளில் எவரையும் கைவைக்க ஒருநாளும் அனுமதிக்கவில்லை. அதற்காக அவர் எந்த விலையினையும் கொடுக்க தயாராக இருந்தார். கலைஞர் நடந்த பாதையில் தன் காலடி தடத்தை அழுத்தமாக பதித்து நடக்கும் நமது முதலமைச்சர் அவர்களும் சிறுபான்மையினர் நலம் பேணுவதில் மிக உறுதியாய் நிற்கின்றார். அவரை பொறுத்தவரையில் தமிழகத்தின் எட்டு கோடி மக்களையும் அவர் "தமிழர்களாக" மட்டுமே பார்க்கின்றார். எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் - ஒருவருடைய உரிமைகளில் மற்றொருவர் தலையிடக் கூடாது என்பதிலும்

ஒட்டுமொத்த தமிழகத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் என்பதிலும் அவரும் அவரது அரசும் மிகவும் கவனமாகவும் உறுதியுடனும் செயல்பட்டுவருவதை அனைவரும் பாராட்டுகின்றனர். அந்த அடிப்படையில் சிறுபான்மை மக்களது வாழ்க்கைதரம் மேம்படுவதற்கும், பொருளாதார - கல்வி வளர்ச்சிக்கும் பல சிறப்பான திட்டங்களை அவரது அரசு முன்னெடுத்துள்ளது. ஒன்றிய அரசின் சிறுபான்மை துறை அமைச்சகமும் மாணவர்களுக்கு பல கல்வி உதவி தொகைகளையும், கடன் உதவிகளையும் வழங்குகின்றது. மாவட்ட அளவில் நான் சுற்றுப் பயணம் செய்து ஆய்வு மேற்கொண்ட போது, சிறுபான்மையின மக்களில் பெரும்பாலானோருக்கு இத்திட்டங்களை பற்றிய அறிதலும், புரிதலும் இல்லை என்பதை தெரிந்து கொண்டேன்அத்திட்டங்களை அந்த மக்கள் மத்தியில் எடுத்து செல்லக்கூடிய அச்சமூகங்களின் தலைவர்களுக்கும், அத்திட்டங்களை நிறைவேற்ற பணிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரிகளுக்கும் கூட பல திட்டங்களை பற்றிய விபரங்களும், தகவல்களும் தெரியவில்லை. அநேக திட்டங்களில் ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக செலவிடப்படாமல் இருக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக சிறுபான்மை ஆணையம் முறையாக செயல்படவில்லை. பல திட்டங்களும், பணிகளும் செயலாக்கம் பெறாமல் முடக்கப்பட்டன. அவற்றையெல்லாம் சரிசெய்து பணிகளை முடுக்கிவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை பணித்துள்ளார். சிறுபான்மை மக்களுக்கான திட்டங்களை பற்றிய விபரங்களை அந்த மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் தங்களது கைகளில் இருக்கும் இக்கையேட்டை சிறுபான்மை ஆணையத்தின் சார்பாக வெளியிட்டுள்ளோம். **“சமூகங்களின் தலைவர்களும், பொது நல ஆர்வலர்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இத்தகவல்களை சிறுபான்மை சமூகங்களை சேர்ந்த தகுதியுள்ள பயனாளிகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டும்”.**

ஆணையத்தினுடைய வேண்டுகோளை ஏற்று மாவட்டந்தோறும் சிறுபான்மையினர் நல் அலுவலர்களை நியமனம் செய்ய இசைவு தந்து முதல் கட்டமாக ஐந்து மாவட்டங்களுக்கு அலுவலர்களை நியமிக்க ஆணையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி. அரசினுடைய திட்டங்கள் களத்தில் வெற்றியடைய பொதுமக்களின் பங்களிப்பு மிக அவசியம். அத்தகைய பங்களிப்பினை சம்பந்தப்பட்ட அனைவரும் நமது அரசுக்கு தாராளமாக வழங்க வேண்டும் என்பது எங்களின் பணிவான வேண்டுகோள்.

இக்கையேட்டை அச்சிட்டு, தமிழகம் முழுவதும் வழங்க உதவி செய்த அத்தனை உள்ளங்களுக்கும் எங்களது நன்றி. தகவல்களை திரட்டி தந்த நண்பர்கள் அச்சிட்டுத் தந்த சிகா அச்சகத்தார் ஆகியோருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

**சா. பீட்டர் அல்போன்ஸ்**



## செஞ்சி கே.எஸ். மஸ்தான்

**சிறுபான்மையினர் நலன் மற்றும்**
**வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை**
**அமைச்சர்**



**சா. பீட்டர் அல்போன்ஸ், Ex. M.P**

தலைவர்

தமிழ்நாடு மாநில

சிறுபான்மையினர் ஆணையம்



**Dr. மஸ்தான், Ex. M.P**

துணைத் தலைவர்
தமிழ்நாடு மாநில
சிறுபான்மையினர் ஆணையம்



**ஆ கார்த்திக் I.A.S.**
**A KARTHIK I.A.S.**
Principal Secretary to Govt
BC, MBC & MW Department
Secretariat
Chennai – 600 009
Ph: 25670848
Fax: (044) 25670756



**சி காமராஜ் I.A.S.**
**C KAMARAJ I.A.S.**
Director
Backward Classes
Chepauk, Chennai – 600 005
Ph: 28511124
Fax: 28552642



**முனைவர் சீ சுரேஷ்குமார் I.A.S.**
**Dr S Suresh Kumar I.A.S.**
Director
Minorities Welfare
Chepauk, Chennai – 600 005
Ph: (044) 28515050
Fax: 28544545




**திரு. D. ரவிச்சந்திரன், I.A.S.,**
உறுப்பினர் செயலர்
90033 59009



**திரு. A. B. தமீம் அன்சாரி Ex. Mc**
உறுப்பினர்
94431 71647/ 95789 58647



**திரு. ஹர்பாஜன் சிங்க் சூரி**
உறுப்பினர்
98404 98097 / 2860 0888



**திரு. மஞ்சித் சிங்க் நாயர்**
உறுப்பினர்
99403 42727



**திரு. பிரவீன் குமார் டாட்டியா**
உறுப்பினர்
98400 95050 / 2532 5050



**திரு. P. ப்யாரேலால் ஜெயின்**
உறுப்பினர்
2855 3939 / 2855 0855



**Rev. Fr. Dr. L. டான் போஸ்கோ**
உறுப்பினர்
98840 45674



**Rev. Bro. Dr. M. இருதயம்**
உறுப்பினர்
94431 67971



**திரு. பிக்கு மௌரியர் புத்தா**
உறுப்பினர்
99430 87674

# சிறுபான்மையினர் நல்வாழ்வுக்காக...

சிறுபான்மையின மக்களின் நலனை பேணிக் காப்பதில் முன்னோடியாக விளங்கும் தமிழக அரசு, சிறுபான்மை மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்திடவும், பாரத பிரதமரின் புதிய 15 அம்ச திட்டத்தின் செயலாக்கத்தை கண்காணித்திடவும், சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்பு மற்றும் சட்ட உரிமைகளை பாதுகாப்பதற்கும் நீதியரசர் இராஜேந்திர சச்சார் குழுவின் பரிந்துரைகளுக்குச் செயல் வடிவம் அளிக்கவும், இச்சமூக மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தவும் தமிழ்நாடு அரசால் சிறுபான்மையினர் நல இயக்கம் உருவாக்கப்பட்டு, இந்திய ஆட்சிப்பணி நிலையில் உள்ள அலுவலரைத் துறைத் தலைவராகக் கொண்டு 2007ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

### மாநில மற்றும் மாவட்ட நிர்வாகம்

சிறுபான்மையினர் நல திட்டங்களை செயல்படுத்திட, சிறுபான்மையினர் நல இயக்கத்திற்கும் மற்றும் மாவட்டங்களில் நல திட்டங்களை செயலாற்றிடவும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் சிறுபான்மையிருக்கான நலத் திட்டங்களை செயல்படுத்திட ஏதுவாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### தனி இட ஒதுக்கீடு

தனி இட ஒதுக்கீடு வழங்கக் கோரி சிறுபான்மையின சமுதாயத்தினரிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு மனுக்களின் மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையினை பெற்று பரிசீலித்த அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை 2007–ஆம் ஆண்டு நிறைவேற்றியது. இச்சட்டம் 15.09.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அரசுப் பணிகளில் நேரடி **நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.**

### கல்வி உதவித்தொகை

அரசு / அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு 100 விழுக்காடு ஒன்றிய அரசின் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை திட்டங்களின் விபரம் பின்வருமாறு:

| வ.எண். | திட்டத்தின் பெயர் | வகுப்பு / பாடப்பிரிவு |
|---|---|---|
| 1. | பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை | 1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை |
| 2. | பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை | 11–ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை |
| 3. | தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை | தொழிற்கல்வி / தொழில் நுட்ப கல்வி |

மேற்படி திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை நேரடி பயன் மாற்றுமுறையில் மாணவர் / மாணவியரின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

## கல்வி உதவித்தொகை பெறுவதற்கான நிபந்தனைகள்

மாநிலத்தின் சிறுபான்மையின மக்கள் தொகையின் அடிப்படையில், கல்வி உதவித்தொகை (புதியது) திட்டங்களுக்கு ஒன்றிய அரசால் சிறுபான்மை மதங்கள் வாரியாக ஒதுக்கீடு நிர்ணயிக்கப்படுகிறது.

1. தமிழ்நாட்டினை பிறப்பிடமாகக் கொண்டு தமிழ்நாட்டிலோ அல்லது இந்திய நாட்டின் பிற மாநிலங்களில் படித்தாலும் அவர்களுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.
2. தொடர்புடைய கல்வி உதவித்தொகை திட்டங்களின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவ / மாணவியர் முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு திட்டத்தின் கீழ் மொத்த ஒதுக்கீட்டில் 30 விழுக்காடு மாணவியருக்கென முன்னுரிமை ஒதுக்கீடு செய்யப்படும்.
4. ஒரு குடும்பத்தைச் சார்ந்த இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.
5. அஞ்சல் வழி மூலம் பயில்பவர்களுக்கு இக்கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்பட மாட்டாது.
6. ஒன்றிய அரசின் கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை பெறுபவர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை / பிற துறைகள் / நல வாரியங்கள் ஆகியவற்றில் கல்வி உதவித்தொகை விண்ணப்பித்திருந்தாலும் ஏதேனும் ஒரு துறை / வாரியத்தின் ஒரு திட்டத்தின் மூலமே கல்வி உதவித்தொகை பெற இயலும்.
7. தொழிற் கல்வி, தொழில்நுட்ப கல்வியில் தமிழ்நாடு அரசின் முதல் பட்டதாரி சலுகை (கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்) பெற்றுள்ள மாணவ / மாணவியர் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

## கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்கும் முறை

மாணவ மாணவியர் புதியது / புதுப்பித்தல் கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பங்களை ஆன்லைனில் **www.scholarships.gov.in** என்ற இணையதள முகவரியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். **கல்வி நிலையத்தின் (UDISE / AISHE code)குறியீட்டினை உறுதி செய்தல் வேண்டும்.**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை படியிறக்கம் செய்து கீழ்கண்ட ஆவணங்களுடன் கல்வி நிலையங்களில் உரிய காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும்:–

1) நிழற்படம், 2) கைபேசி எண், 3) இமெயில் (மின்னஞ்சல் முகவரி), 4) ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல், 5) சாதி / மதம் சான்றிதழ் (அல்லது) ரூ.10 மதிப்புள்ள நீதிமன்றம் சாரா முத்திரைத்தாளில் சுய உறுதிமொழி 6) வருவாய் துறையிடமிருந்து வருமான சான்று, 7) இருப்பிட / உறைவிடச்சான்று, 8) ஆதார் எண், 9) கட்டண இரசீது, 10) செயல்நிலையில் உள்ள வங்கிக்கணக்கு எண், IFS Code. (வங்கிக் கணக்கு எண் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்)

**குறிப்பு:** ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ / மாணவர்கள் ரூ.50,000/–க்கு மேற்பட்டு கல்விக்கட்டணம் செலுத்தியிருப்பின் மேற்படி ஆவணங்கள் அனைத்தையும் ஆன்லைன் மூலமாக பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

## கல்வி நிலையங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை

- கல்வி நிலையங்கள் தத்தம் கல்வி நிலையத்தின் பெயர் www.scholarships.gov.in இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். இல்லையெனில், பதிவு செய்வதற்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் அலுவலகத்துடன் உடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

- கல்வி நிலையத்தின் முதல்வர்கள், மாணவ / மாணவியர்களால் ஆன்லைன் மூலம் பதிவு செய்த விண்ணப்பங்களை அனைத்து இணைப்புகளுடன் பெற்று விண்ணப்பங்கள் தகுதிகளின் படி உள்ளதை கூர்ந்தாய்வு செய்து, ஆன்லைன் வழியாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு (Next Level) அனுப்புதல் வேண்டும்.
- மேலும் கல்வி உதவித் தொகை (புதியது மற்றும் புதுப்பித்தல்) அசல் விண்ணப்பங்களுடன் அனைத்து ஆவணங்களையும் கல்வி நிலையங்களின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் வைத்திருத்தல் வேண்டும். இவை ஒன்றிய / மாநில அரசுகளின் தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

## பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

இத்திட்டம் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ–மாணவியர்களுக்கு ஒன்றிய அரசால் 2008 – 2009–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### நிபந்தனைகள்

### மதிப்பெண்

**புதியது** : முந்தைய ஆண்டு இறுதி தேர்வில் (ஒன்றாம் வகுப்பு நீங்கலாக) 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**புதுப்பித்தல் :** இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை (புதியது) ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் முந்தைய ஆண்டின் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு (ஒன்றாம் வகுப்பு தவிர) குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

### வருமானம்

பெற்றோர் (அ) பாதுகாவலர் ஆண்டு வருமானம் (அனைத்து வழிகளிலும்) ரூ. ஒரு இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

### கல்வி உதவித்தொகை விகிதங்கள்

இத்திட்டத்தின் கீழ் சேர்க்கை கட்டணம், கற்பிப்புக் கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணம் ஆகியவை பின்வரும் விகிதங்களின்படி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது:–

| வகுப்பு | சேர்க்கைக் கட்டணம் (அதிகபட்சம்) | கற்பிப்புக் கட்டணம் (அதிகபட்சம்) | பராமரிப்புப்படிகள் (கல்வி ஆண்டில் அதிகபட்சம் 10 மாதங்களுக்கு மட்டும் வழங்கப்படும்) | |
|---|---|---|---|---|
| | | | விடுதியில் தங்கி பயில்பவர்கள் | விடுதி வசதியின்றி பயில்பவர்கள் |
| 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை | – | – | – | ரூ. 1,000 |
| 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை | ரூ. 500 | ரூ. 3,500 | ரூ. 6,000 | ரூ. 1,000 |

செலுத்திய கட்டணம் (அ) அதிகபட்ச கட்டணம் இவற்றில் எது குறைவானதோ அத்தொகை வழங்கப்படும்.

## பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

மேல்நிலைப் பள்ளிக்கல்வி, தொழில்நுட்ப பட்டயப் படிப்பு, தொழிற்பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, இளங்கலை,முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு, ஆகியவற்றைப் பயிலும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஒன்றிய அரசால் 2007–2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு, வாழ்க்கை தொழிற்கல்வி (Vocational Courses) 11 மற்றும் 12–ஆம் வகுப்பு நிலைகளில், ஐடிஐ / ஐடிசி, என்.சி.வி.டி பயிற்சி (NCVT), பாலிடெக்னிக், ஆசிரியர் பட்டயப் பயிற்சி, செவிலியர் பயிற்சி இளங்கலை பட்டப்படிப்பு, முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சி படிப்பு, (தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டத்தில் இடம் பெறாத பாடப் பிரிவுகள்) பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

### நிபந்தனைகள்

### மதிப்பெண்

**புதியது:** முந்தைய ஆண்டு இறுதி தேர்வுகளில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்றிருத்தல் வேண்டும்.

**புதுப்பித்தல்:** புதியது கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் முந்தைய ஆண்டின் தேர்வு / பருவமுறை தேர்வுகளில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

### வருமானம்

பெற்றோர் (அ) பாதுகாவலர் ஆண்டு வருமானம் (அனைத்து வழிகளிலும்) ரூ. இரண்டு இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

### கல்விக் கட்டண விவரம்:

| படிப்பு விவரங்கள் | (*) சேர்க்கை (ம) கற்பிப்புக் கட்டணம் (அதிக பட்சம்) ரூ. | பராமரிப்புப் படி (கல்வி ஆண்டில் 10 மாதங்களுக்கு மட்டும்) | |
|---|---|---|---|
| | | விடுதியில் தங்கி பயில்பவர்கள் ரூ. | விடுதி வசதியின்றி பயில்பவர்கள் ரூ. |
| +1 (ம), +2 வகுப்புகள் | 7,000 | 3,800 | 2,300 |
| +1, +2 வாழ்க்கை தொழிற்கல்வி, ஐடிஐ, ஐசிடி, (NCVT உட்பட), பாலிடெக்னிக், நர்சிங் / ஆசிரியர் பட்டயப் பயிற்சி | 10,000 | 3,800 | 2,300 |
| இளங்கலை / முதுகலை பட்டப்படிப்பு | 3,000 | 5,700 | 3,000 |
| ஆராய்ச்சிப் படிப்பு | – | 12,000 | 5,500 |

**குறிப்பு :** *செலுத்திய கட்டணம் (அ) அதிகபட்சக் கட்டணம் இவற்றில் எது குறைவானதோ அத்தொகை வழங்கப்படும்.

## தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை

அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் தொழில்நுட்பம் / தொழிற் கல்வி பயிலும் தமிழகத்தை சார்ந்த ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட மதவாரி சிறுபான்மையினராக கருதப்படும் இஸ்லாமியர், கிறித்தவர், சீக்கியர், புத்தமதத்தினர் மற்றும் பார்சி வகுப்பை சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் 2007–2008 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் இளங்கலை / முதுகலை தொழில் மற்றும் தொழில் நுட்ப கல்வியில் இளங்கலை / முதுகலை பட்டப்படிப்பில் ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள பாடப்பிரிவுகளின் விவரங்கள் பின்வருமாறு :–.

## TECHNICAL & PROFESIONAL UG & PG COURSES COVERED UNDER MERIT-CUM-MEANS BASED SCHOLARSHIP SCHEME

### I. Engineering & Technology Courses (B.Tech / B.E. / M.Tech)

(1) Aeronautical Engineering (AE)
(2) Agricultural Engineering (AG)
(3) Automobile Engineering (AUG)
(4) Applied Electronics & Instrumentation (AEI)
(5) Automation and Robotics (ARE)
(6) Bio-Medical Engineering (BME)
(7) Bio-Technology (BT)
(8) Ceramic Engineering / Technology (CT)
(9) Chemical Engineering (CH)
(10) Civil Engineering (CE)
(11) Computer Science and Engineering (CS)
(12) Electrical Engineering or Electrical & Electronics Engineering (EEE)
(13) Electronics & Communication Engineering (ECE)
(14) Environmental Engineering (ENE)
(15) Food Technology (FT)
(16) Industrial Engineering and Management (IEM)
(17) Information Technology (IT)
(18) Instrumentation and Control Engineering (ICE)
(19) Leather Engineering (LT)
(20) Marine Engineering (MRE)
(21) Materials Science & Technology (MST)
(22) Metallurgical Engineering (MT)
(23) Mechanical Engineering (ME)
(24) Mining Engineering (MN)
(25) Oil & Paint Technology (OPT)
(26) Polymer Science and Rubber Technology (PSR)
(27) Printing Technology (PT)
(28) Production Engineering (PE)
(29) Pulp & Paper Technology (PPT)
(30) Sugar Technology (ST)
(31) Textile Engineering / Technology (TXT)

(32) Transportation Engineering (TE)
(33) Telecommunication Engineering
(34) Polymer Engineering
(35) Naval Architecture
(36) Petroleum Engineering
(37) Highway Engineering
(38) Power Engineering

**II. B.F. Tech (Design)**

1. Fashion Design
2. Leather Design
3. Accessory Design
4. Textile Design
5. Knitwear Design
6. Fashion Communication
7. Fashion Technology (Degree from NIFT)

**IV. B.F. Tech:**

1. Apparel Production

**V. Me. F Tech:**

1. Management
2. Apparel Production
3. Design Space

**VI. Management**

1. Post Graduate Diploma in Management (PGDM)
2. Post Graduate Certificate in Management (PGCM)
3. Executive Post Graduate Diploma in Management (Exec-PGDM)
4. Master in Business Administration (MBA)
5. Apparel Production Management

**VII. Pharmacy**

1. B. Pharma
2. M. Pharma (PH)

**VIII. Architecture & Town Planning (UG and PG level courses only)**

1. Architecture (AR)
2. Interior Design (ID)
3. Building Construction Technology (BCT)
4. Planning (PL)

**IX. Hotel Management & Catering Technology (UG and PG level courses only)**

1. Hotel Management & Catering Technology (HMCT)

**X. Applied Arts & Crafts (UG and PG level courses only)**

1. Applied Arts & Product Design (APD)
2. Fine Arts / Applied Arts / Fine & Applied Arts (FA / AA / FAA)

**XI. MCA**

1. Master in Computer Application (MCA)

**XII. Design (Degree from National Institute of Design, Ahamadabad)**

1. Graduate diploma in design
2. Post graduate diploma programme in design

**XIII. Medical & Para Medical courses**

1. MBBS
2. Bachelor of Ayurvedic Medicine & Surgery (BAMS)
3. Bachelor of Unani Medicine & Suregery (BUMS)
4. Bachelor of Homeopathic Medicine & Surgery
5. Post Graduate courses
6. Bachelor of Physical Therapy (BPT)
7. Master of Physical Therapy (MPT)
8. Bachelor of Occupational Therapy (BOT)
9. Master of Occupational Therapy (MOT)
10. B.Sc Nursing
11. B.D.S
12. M.D.S

**XIV. Veterinary Sciences and Animal Husbandry**

1. B.VSC. & A.H. (Bachelor of Veterinary Sciences and Animal Husbandry)

**XV. PG Courses Chartered Accountancy / Institute of Cost and Work Accountancy / Company Secretary**

1. CA (Chartered Accountancy)
2. ICWA (Institute of Cost and Work Accountacy)
3. CS (Company Secretary)

**XVI. Law**

1. L.L.B
2. L.L.M

**இக்கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள்**

**மதிப்பெண்**

**புதியது** : தொழிற்கல்வி / தொழில் நுட்பக் கல்வியில் நுழைவுத் தேர்வுடன் / நுழைவுத் தேர்வின்றி சேர்க்கை பெற்றுள்ள மாணவ / மாணவியர்கள் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு (அல்லது) பட்டப்படிப்பு (அல்லது) பாலிடெக்னிக் இறுதி தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்றிருத்தல் வேண்டும்.

**புதுப்பித்தல்** : முந்தைய ஆண்டில் கல்வி உதவித்தொகை (புதியது) ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் முந்தைய ஆண்டின் தேர்வு / பருவமுறை தேர்வுகளில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**வருமானம்**

பெற்றோர் (அ) பாதுகாவலர் ஆண்டு வருமானம் (அனைத்து வழிகளிலும்) ரூ. இரண்டரை இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

## கல்விக் கட்டணம்

இத்திட்டத்தின் கீழ் கல்விக் கட்டணம் (சேர்க்கை கட்டணம், கற்பிப்புக் கட்டணம் நூலகம், தேர்வு (ம) இதர திரும்ப செலுத்தும் கட்டாயக் கட்டணங்கள் உட்பட) மற்றும் பராமரிப்புப் படி ஆகியவை பின்வரும் விகிதங்களின் படி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது:–

| வகுப்பு விவரங்கள் | கல்விக் கட்டணம் ரூ. | பராமரிப்புப்படி (கல்வி ஆண்டில் 10 மாதங்களுக்கு மட்டும்) | |
|---|---|---|---|
| | | விடுதியில் தங்கி பயில்பவர்கள் ரூ. | விடுதி வசதியின்றி பயில்பவர்கள் ரூ. |
| ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட தொழிற் கல்வி / தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் (Listed Institutions) | கட்டண வரம்பு ஏதுமில்லை | 10,0000 | 5,000 |
| இதர கல்வி நிறுவனங்கள் | 20,000 | 10,0000 | 5,000 |

**குறிப்பு :**

- இக்கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் பட்டியலிடப்பட்ட
  1) இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (IIT)–சென்னை
  2) நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (NIT)–திருச்சி
  3) இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் வடிவமைப்பு (ம) தயாரித்தல் (IIT & DM)–காஞ்சிபுரம்
  4) நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் பேஷன் டெக்னாலஜி (NIFT), சென்னை மற்றும்
  5) இந்தியன்இன்ஸ்டிடியூட்ஆப்மேனேஜ்மென்ட்(IIM),திருச்சிஉள்ளிட்ட85கல்விநிலையங்களில் (Listed Institutions) பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கான **கல்விக் கட்டணங்கள் முழுவதுமாக வழங்கப்படும்.** செலுத்திய கட்டணம் (அ) அதிகபட்சக் கட்டணம் இவற்றில் எது குறைவானதோ அத்தொகை வழங்கப்படும்.

## சிறுபான்மையினர் விடுதிகள்

தமிழ்நாட்டில் சிறுபான்மையின மாணவ / மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித இடையூருமின்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 18 விடுதிகள் இயங்கி வருகின்றன. மொத்தமுள்ள 18 விடுதிகளில் 14 கல்லூரி விடுதிகள் மற்றும் 4 பள்ளி விடுதிகளாகும். இவ்விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ / மாணவிகளுக்காக எவ்வித கட்டணமுமின்றி உணவு (ம) உறைவிடம் மற்றும் பல்வேறு வசதிகளுடன் இவ்விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு :

| வ. எண் | மாவட்டம் | விடுதி முகவரி | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|
| **பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகள்** | | | |
| 1. | திருப்பத்தூர் | பள்ளி (ம) கல்லூரி மாணவியர் விடுதி, ஹாஜி தெரு, நியூ டவுன், வாணியம்பாடி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம் – 635 752. | 50 |
| 2. | திருச்சி | பள்ளி (ம) கல்லூரி மாணவியர் விடுதி, பூலோகநாதர் கோவில் தெரு, வைகுண்ட கோஷ்புரம், திருச்சிராப்பள்ளி – 620 008. | 50 |
| 3. | திண்டுக்கல் | பள்ளி (ம) கல்லூரி மாணவியர் விடுதி, குடகனாறு பயணியர் விடுதி பின்புறம், நத்தம்ரோடு, திண்டுக்கல் – 624 001. | 50 |
| 4. | கோயம்புத்தூர் | பள்ளி (ம) கல்லூரி மாணவியர் விடுதி, 57–வது வார்டு, செங்குட்டை, மசக்காளி பாளையம், உப்பிலி பாளையம் (அஞ்சல்), கோயம்புத்தூர் – 641 015. | 50 |
| 5. | திருநெல்வேலி | பள்ளி (ம) கல்லூரி மாணவியர் விடுதி, எண்.19, AG ஜானகி தெரு, காமராஜர் நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி. | 50 |
| **பள்ளி விடுதிகள்** | | | |
| 6. | தென்காசி | பள்ளி மாணவியர் விடுதி, மலம்பேட்டை ரோடு, கடையநல்லூர், தென்காசி – 627751. | 50 |
| 7. | மதுரை | பள்ளி மாணவியர் விடுதி, என்.எம்.எஸ். முத்துலெட்சுமி மாநகராட்சி பெண்கள் உயர் நிலைப்பள்ளி, அமெரிக்கன் மிஷன் சந்து, கீழ்வாசல், மதுரை – 625 009. | 100 |
| 8. | கிருஷ்ணகிரி | பள்ளி மாணவியர் விடுதி, தோடி,அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி – 635 107. | 100 |
| 9. | தேனி | பள்ளி மாணவியர் விடுதி, அரசமேல்நிலைப்பள்ளி வளாகம் (முதல் தளம்), அல்லி நகரம், தேனி – 625 531. | 100 |
| **கல்லூரி விடுதிகள்** | | | |
| 10. | இராணிப்பேட்டை | கல்லூரி மாணவியர் விடுதி, முனிசீப் கோர்ட் ரோடு, இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம் – 632 401. | 100 |

| | | | |
|---|---|---|---|
| 11. | சென்னை | கல்லூரி மாணவியர் விடுதி, லேடி வெலிங்டன் வளாகம், காமராஜர் சாலை, சென்னை – 600 005 | 100 |
| 12. | தஞ்சாவூர் | கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம் – 612 001. | 100 |
| 13. | கன்னியாகுமரி | கல்லூரி மாணவியர் விடுதி, பால்குளம், வாரியூர், அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம் – 629 702. | 100 |
| 14. | இராமநாதபுரம் | அரசு கல்லூரி மாணவியர் விடுதி, பட்டினம் காத்தான், இராமநாதபுரம் – 623 503 | 100 |
| 15. | கடலூர் | அரசு கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர் சிதம்பரம் நெடுஞ்சாலை, சி.முட்லூர் கிராமம், புவனகிரி வட்டம், கடலூர் மாவட்டம் – 608 102 | 100 |
| 16. | சிவங்கை | அரசு கல்லூரி மாணவியர் விடுதி, பூலாங்குறிச்சி திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம். | 100 |
| **கல்லூரி மாணவர் விடுதி** | | | |
| 17. | திருப்பத்தூர் | கல்லூரி மாணவர் விடுதி, பாரத்மஹால், கே.எம்.நகர், ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம் – 635 802. | 100 |
| **தொழிற் பயிற்சி நிறுவனம்** | | | |
| 18. | இராமநாதபுரம் | அரசு பொறியியல் கல்லூரி மாணவியர் விடுதி, இராமநாதபுரம் – 623 503 | 100 |

**விடுதி மாணவ / மாணவியர்கள் சேர்க்கை**

**விடுதிகளில் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு முறை:**

| விடுதி | வகுப்பு | ஒதுக்கீடு சதவிகிதம் |
|---|---|---|
| சிறுபான்மையினர் வகுப்பு | சிறுபான்மையினர் வகுப்பு | 60% |
| | பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 20% |
| | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் | 15% |
| | இதர வகுப்பினர் | 5% |
| | மொத்தம் | 100% |

- **மாற்று திறனாளிகளுக்கான சேர்க்கை:**

ஒவ்வொரு விடுதியிலும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியருக்கு 4 விழுக்காடு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

- **முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்கான சேர்க்கை:**

  ஒவ்வொரு விடுதியிலும் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரை சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. முகாம்வாழ் இலங்கை தமிழர்களின் குழந்தைகளுக்காக ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் 5 விழுக்காடு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **குழந்தை தொழிலாளர்களுக்கான சேர்க்கை:**

  மீட்கப்படும் குழந்தை தொழிலாளர்கள் விடுதிகளில் எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், கல்வி முடியும் வரை தங்கி பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- **தோட்ட தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான சேர்க்கை:**

  தமிழ்நாட்டை பிறப்பிடமாகக் கொண்டு கேரளா எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதிமொழி ஏற்கப்படுகிறது.

### பொதுவான நிபந்தனைகள்

- பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. ஒரு இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- மாணவரது இருப்பிடம் கல்வி நிலையத்திலிருந்து 8 கி.மீ தூரத்திற்கு அப்பால் இருத்தல் வேண்டும். **இந்த நிபந்தனை மாணவியருக்கு பொருந்தாது.**

| | |
|---|---|
| பள்ளி விடுதிகள் | வகுப்பு 4 முதல் 12 வரை பயில்பவர்கள் |
| கல்லூரி விடுதிகள் | இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு, பாலிடெக்னிக் |
| பொறியியல் கல்லூரி விடுதிகள் | தொழிற்கல்வி / தொழில் நுட்பக்கல்வி |

### விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

விண்ணப்பப் படிவங்களை விடுதி காப்பாளர் / காப்பாளினியிடமிருந்து கட்டணமின்றி பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய காலக்கெடுவிற்குள் சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

### விடுதியில் வழங்கப்படும் வசதிகள்

i. விடுதியில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர்களின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் ஒவ்வொரு விடுதிக்கும் தினந்தோறும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் மற்றும் ஓர் ஆங்கில நாளிதழ் வழங்கப்படுகின்றன.

ii. 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காக சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.

iii. நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவிகளுக்கு நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

iv. விடுதியில் தங்கி பயிலும் மாணவ / மாணவியர்களின் கல்வி மேம்பாட்டிற்காக நூலக புத்தகங்கள, பாடக் குறிப்பு புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

v. வேலைவாய்ப்பு பெரும் பொருட்டு மாணவ, மாணவியர்களுக்கு வாழ்க்கை வழிகாட்டி நெறிமுறை பயிற்சி அளிக்கப்படுகின்றன.

vi. ஆண்டுக்கு மூன்று முறை விடுதி மாணவ, மாணவியருக்கு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

vii. அரசு கட்டடங்களில் இயங்கும் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிக்கு இரண்டடுக்கு கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளது.

viii. விடுதிகளுக்கு கணினி, குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், சூரிய ஒளி மூலம் நீரை சூடாக்கும் கருவிகள், மின்தடையற்ற இன்வெட்டர்கள், வண்ண தொலைக்காட்சிப் பெட்டி, தீயணைப்பான் சாதனங்கள், மின்அரைப்பான் வழங்கப்பட்டுள்ளன. மாணவியர் விடுதிகளில் சுகாதார குட்டைதகளி அமைக்கப்பட்டுள்ளன.

ix. விடுதி மாணவ / மாணவியர்களின் நலனுக்காக ஜமக்காளங்கள், பாய்கள் மற்றும் போர்வைகள் வழங்கப்படுகின்றன.

x. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒன்று என்ற வீதத்தில் விடுதி மாணவ / மாணவியருக்கு வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

xi. ஒவ்வொரு மாதத்தின் முதல் (ம) மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் (ம) நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகிறது.

xii. விடுதியில் தங்கி 11 (ம) 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றல் (ம) தனித்திறன் வளர்க்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**உணவு முறை : பள்ளிவிடுதிகள்**

சிறுபான்மையினர் நல பள்ளி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு உணவுக் கட்டணமாக ரூ.1000 /– மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு உணவுக் கட்டணமாக ரூ.1100 /– (10 மாதங்களுக்கு) வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி (ம) கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட பொதுவான உணவு முறையே வழங்கப்பட்டு வருகிறது.

## சிறுபான்மை இன மகளிர் உதவும் சங்கம்

### 1. இஸ்லாமிய பெண்களுக்காக

அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும், சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சி தலைவரை பதவி வழித் தலைவராகவும், திட்ட அலுவலர், மகளிர் திட்டம் (மாவட்ட ஊரக மேம்பாட்டு ஆணையம் – DRDA) அவர்களை பதவி வழி உபதலைவராகவும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அமைப்பாளர் / பொருளாளராகவும், முக்கியமான மற்றும் தலைசிறந்த உள்ளூர் மக்களிடையே இருந்து மாவட்ட ஆட்சியர் மூலம் நியமிக்கப்பட்டு, பின்னர் சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் உறுப்பினர்கள் மூலம் தேர்நதெடுக்கப்படும். கௌரவச் செயலாளர் ஒருவர் கௌரவ இணைச் செயலாளர் இருவர் மற்றும் உறுப்பினர்கள் மூவர் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது. இச்சங்களுக்கு விதைத் தொகையாக ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா ரூ. ஒரு இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. சங்கங்கள் திரட்டும் நன்கொடை தொகைக்கு இணைமானியம் இரட்டிப்பாக ஒவ்வொரு சங்கத்திற்கும் அதிகபட்சமாக ஆண்டிற்கு ரூ. இருபது இலட்சம் வரை 1:2 என்ற விகிதாச்சாரத்தில் (01.04.2012 முதல்) அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

## 2. கிறித்தவ மகளிர் உதவும் சங்கம்

கிறித்தவ மதத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையில் உள்ள ஆதரவற்ற விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட கிறித்தவ மகளிர் நலனுக்காக, முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்களை போன்று, மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட கிறித்தவ மகளிர் உதவும் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா ரூ. ஒரு இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. சங்கங்கள் திரட்டும் நன்கொடை தொகைக்கு இணைமானியம் இரட்டிப்பாக ஒவ்வொரு சங்கத்திற்கும் அதிகபட்சமாக ஆண்டிற்கு ரூ. இருபது இலட்சம் வரை 1:2 என்ற விகிதாச்சாரத்தில் அரசால் இச்சங்கம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

### சங்கத்தின் நோக்கங்கள்:

இச்சங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற வயது முதிர்ந்த முஸ்லீம், கிறித்தவ விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லீம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற 'வயதான முஸ்லீம், கிறித்தவ மகளிருக்கு வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் உதவிகள் மற்றும் தேவைக்கேற்ப தையல், பூ வேலைப்பாடுகள், காலணிகள் செய்வது மற்றும் கைவினைப் பொருட்கள் செய்ய பயிற்சி அளித்தல் மற்றும் சிறு தொழில் துவங்க உதவிடல்.

மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள முஸ்லீம், கிறித்தவ மகளிருக்கு ஒன்றிய மற்றும் இதர மாநில அரசுகளிடமிருந்து சலுகைகள் / உதவித்தொகைகள் கிடைக்க வழி வகை செய்து அவர்களின் வாழ்கைத் தரம் உயரச் செய்தல். ஆதரவற்ற முஸ்லீம், கிறித்தவ விதவைகள் மற்றும் வயதானவர்களுக்கு இருப்பிடம் பெறும் வகையில் அரசு திட்டங்கள் மூலம் கிடைக்க பரிந்துரை செய்தல்.

சுய உதவிக் குழுக்கள் அமைத்து பயிற்சி அளித்து தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் பல்வேறு கடனுதவி வழங்கும் திட்டத்தின் (TAMCO) மூலம் தேவையான பெண்களுக்கு சிறிய வியாபாரம் துவக்க கடனுதவி அளித்தல்.

வியாபாரம், தொழில் மற்றும் கல்வித் துறையில் முஸ்லீம், கிறித்தவ மகளிர் உறுப்பினர்களுக்கு உதவி செய்து அவர்களை அத்துறையில் தேர்ச்சி பெறச் செய்தல்.

வறிய நிலையில் உள்ள முஸ்லீம், கிறித்தவ மகளிர்களுக்கு சங்கம் தகுதியானவர்கள் என்று நினைத்தால், அவர்களின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக உதவி புரிதல்.

## 3. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் சமூக, பொருளாதார மற்றும் கல்வி ஆகிய நிலைகளில் முன்னேற்றத்தை அடைவதற்கென உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 2009 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- தமிழ்நாட்டில் உள்ள இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள், தர்காக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், அஷூர்கானாக்கள் முஸ்லீம் அனாதை இல்லங்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள், முஜாவர் உள்ளிட்ட பணியாளர்கள், உறுப்பினராகவும் நலத்திட்ட உதவிகள் பெற தகுதியுடையவராவர்.
- பதிவு பெற்றவுடன் உறுப்பினர் அமரராகாவிட்டால், அவரைச் சார்ந்த (i) அவரது மனைவி (அ) கணவன் (ii) பிள்ளைகள் (iii) விதவை மகள் மற்றும் அவரது பிள்ளைகள் ஆகியோர் வாரிசுதாரர் (Legal heirs) பட்டியலில் அடங்குவர்.
- குடும்பம் என்பதில் ஆண் உறுப்பினராக இருப்பின், அவரது மனைவி, திருமணமான அல்லது திருமணமாகாத அவரது பிள்ளைகள், சார்ந்துள்ள பெற்றோர், விதவை மருமகள், உறுப்பினரின்

இறந்த மகனின் பிள்ளைகள், ஆகியோர் அடங்குவர். பெண் உறுப்பினராக இருப்பின், அவரது கணவர், பிள்ளைகள் ஆகியோர் குடும்பம் என்ற வரைமுறையில் அடங்குவர்.

- உறுப்பினர் வயது 18 நிறைவு செய்து 60 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.
- பதிவு பெற்ற உறுப்பினருக்கும் ஓர் அடையாள அட்டை கட்டணமின்றி வழங்கப்படும்.
- உறுப்பினர் பதிவு செய்து 5 ஆண்டுகள் முடியும் தருவாயில் பதிவை மீண்டும் புதுப்பிக்க வேண்டும்.
- இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நலவாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**கிறிஸ்தவ தேவாலய உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம் அமைக்க அடிப்படை பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன அந்த விதிகளும் மற்ற தகவல்களும் தனியாக வெளியிடப்படும்**

**இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விவரம்.**

| வ. எண். | நல உதவிகள் விவரம் | உதவித்தொகை ரூ. |
|---|---|---|
| 1. | விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ்<br>அ. விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | 1,00,000/– |
| | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 முதல்<br>1,00,000/– வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | 20,000/– |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | 5,000/– |
| 4. | கல்வி உதவித்தொகை | |
| | அ. 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,000 /– |
| | ஆ. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/– |
| | இ. 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,000/– |
| | ஈ. 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,500/– |
| | உ. 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஊ. முறையான பட்டப்படிப்பு | 1,500/– |
| | எ. மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பு | 1,750/– |
| | ஏ. முறையான பட்ட மேற்படிப்புக்கு | 4,000 /– |
| | ஐ. மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | 5,000 /– |
| | ஒ. தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு (UG level) | 4,000/– |
| | ஓ. மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பு (PG level) | 6,000/– |

| | | |
|---|---|---|
| | ஔ. தொழிற்கல்வி பட்டமேற்படிப்பு (PG level – Day Scholar) | 6,000/- |
| | ஃ. மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டமேற்படிப்பு (PG level – Hosteller) | 8,000 /- |
| | க. ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000/- |
| | ங. மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் | 1,200/- |
| 5. | திருமண உதவித்தொகை | 2,000/- |
| 6. | (i) மகப்பேறு உதவித்தொகை : ரூ. 1,000 வீதம் (6 மாதங்களுக்கு) | 6,000/- |
| | (ii) கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000/- |
| 7 | மூக்கு கண்ணாடி செலவுத் தொகையை ஈடு செய்தல் (அதிகபட்சம்) | 5,00/- |
| 8 | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | 1,000/- |

**குறிப்பு :** உறுப்பினர் வேறு வாரியத்தில் நல உதவிகள் பெற்றிருப்பின் இவ்வாரியத்தில் நல உதவிகளை பெற இயலாது.

**பதிவு பெற்ற வஃக்ப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம் :**

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் வஃக்ப் பதிவு செய்யப்பட்ட 2,814 வஃக்ப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்குவதற்கு மானியம் அளிப்பதில் மூலம் அவர்கள் பணியினை சிறப்பாகவும், செம்மையாகவும் செயல்படுத்துவதற்கு வழிவகுக்கும். வஃக்ப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க மதிப்பீட்டில் ரூ.25,000 /- அல்லது வாகனத்தின் விலையில் 50 சதவிகிதம் இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் வாகனம் பெற்ற பயனாளி வாகனத்தை குறைந்தபட்சம் 5 வருடங்கள் வரை விற்கவோ, வேறொரு நபருக்கு மாற்றவோ உரிமை கிடையாது.

**இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான தகுதிகள்**

i. தமிழ்நாட்டில் வஃக்ப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வஃக்ப் நிறுவனங்களில் மனுதாரர் விண்ணப்பிக்கும் நாளில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்.

ii. தமிழ்நாட்டை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

iii. வயது 18 லிருந்து 40 வயது உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பிக்கும் போது இருசக்கர வாகனம் ஓட்டும் கற்றுணர்வுக்கான (LLR) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

v. கல்வித் தகுதி 8–ஆம் வகுப்பு (தேர்ச்சி / தோல்வி)

vi. பதிவு செய்யப்பட்ட வஃக்ப் நிறுவனத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் மானிய உதவி கோரி விண்ணப்பம் செய்தால் 1. பேஷ் இமாம், 2. அரபி ஆசிரியர்கள், 3. மோதினார், 4. முஜாவர் என்ற முன்னுரிமை அடிப்படையில் ஒருவருக்கு மட்டும் மானியத் தொகை வழங்கப்படும்.

**ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள அரசு நிதி உதவி :**

அனைத்து கிறித்தவ பிரிவினரும் புனிதப் பயணமாக ஜெருசலேம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டிலும் 600 கிறித்தவர்கள் புனித பயணம் மேற்கொள்ளலாம். இவற்றில் 50 கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகள் பயணம் செய்ய அனுமதி அளித்தும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்புனித பயணம் பெத்லஹேம், ஜெருசலேம், நாசரேத், ஜோர்டான் நதி, கலிலேயா சமுத்திரம் மற்றும் கிறித்தவ மத தொடர்புடைய பிற புனித தலங்களையும் உள்ளடிக்கியது. இதற்கென அரசின் நிதி உதவியாக 2020-2021 ஆம் நிதி ஆண்டிலிருந்து நபர் ஒருவருக்கு ரூ.37,000 /- வீதம் உயர்த்தி வழங்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

- விண்ணப்பதாரர் / குடும்பத்தினர் தமிழ்நாட்டில் வசிக்கும் கிறித்தவ மதத்தவராக இருத்தல் வேண்டும்.
- அறிவிப்பு தேதியில் குறைந்தபட்சம் ஓராண்டு செல்லத்தக்க கடவுச்சீட்டு (Passport) உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் போது வெளிநாடு பயணம் மேற்கொள்வதற்கு எவ்விதமான வில்லங்கங்களும் இருத்தல் கூடாது.
- வெளிநாடுகளில் புனித பயணம் மேற்கொள்வதற்கு மருத்துவ மற்றும் உடற்தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- ஏற்கெனவே இத்திட்டத்தின் கீழ் ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொண்டார்கள் மீண்டும் விண்ணப்பிக்கக் கூடாது.
- இப்பயணம் மேற்கொள்வதற்கு ஏற்படும் செலவினத்தில் அரசு வழங்கும் நிதியுதவி ரூ.37,000 /- நீங்கலாக மீதமுள்ள தொகையை செலுத்த ஒப்புதல் அளிக்க வேண்டும்.
- ஒரு குடும்பத்தில் விண்ணப்பதாரரையும் சேர்த்து அதிகபட்சம் 4 நபர்கள் பயணம் மேற்கொள்ளலாம். இதில் 2 வயது நிறைவடைந்த 2 குழந்தைகளும் இருக்கலாம். இப்பயணத்தில் 70 வயது நிறைவடைந்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிப்பதுடன், அவருக்கு துணையாக அவர் விரும்பும் ஒரு நபரை மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டும் பட்சத்தில் அவருடன் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

## கிறித்தவ தேவாலயங்களை புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

கிறித்தவ தேவாலயங்களை புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம் 2016-17ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

- இத்திட்டத்தில் தேவாலயம் பதிவு செய்யப்பட்டு சொந்தக்கட்டடத்தில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் இருக்க வேண்டும்.
- தேவாலயங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் தேவாலய கட்டடத்தின் வயது ஆகியவற்றை கருத்திற்கொண்டு நிதி உதவிகள் வழங்கப்படும். உச்சபட்சமாக ரூ.3.00 இலட்சம் வரை அரசு நிதி உதவி வழங்கப்படுகிறது.
- தேவாலயம் சீரமைப்பு பணிக்காக வெளிநாட்டிலிருந்து எவ்வித நிதி உதவியும் பெற்றிருத்தல் கூடாது.
- தேவாலயத்தின் பழுதுகளை மாவட்ட ஆட்சித்தலைவரால் அமைக்கப்பட்ட குழுவினரால் ஸ்தல ஆய்வுக்குப் பின் அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடம், கட்டடத்தின் ஸ்திரத்தன்மை, பழுதுகள் மதிப்பீடு செய்து திட்டமதிப்பீடு மற்றும் கட்டடத்தின் வயது ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிதி உதவி கோரி துறைத் தலைவருக்கு பரிந்துரை செய்யப்படும்.
- மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையை பரிசீலித்து நிதி உதவிகள் ஒப்பளித்து இரு தவணைகளாக (75:25) என்ற விகிதத்தில் நிதி,தேவாலயங்களின் வங்கிக் கணக்கில் வழங்கப்படும்.

- இத்திட்டத்திற்கு கீழ் 2020-2021 ஆம் நிதி ஆண்டில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**மறுவாழ்வு நிதியுதவி வழங்குதல்**

இனக்கலவரங்களால் பொருளாதார மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சிறுபான்மையின சமுதாயத்தை சார்ந்தவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்களுக்கு மறுவாழ்வு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

- இனக்கலவரங்களால் உடல் உழைப்பு செய்ய இயலாத வகையில் ஊனமுற்றிருப்பவராக / பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவராக அல்லது இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பெருங்குற்றங்களாக கருதப்படும் எந்தவொரு செயலிலும் ஈடுபடாதவராகவும், முதன்முறையாக சிறு குற்றத்திற்காக சிறை தண்டனை அனுபவித்து மீண்டவராக இருத்தல் வேண்டும். தொடர்புடைய நன்னடத்தை அலுவலரின் சான்று பெற்றிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டவராய் இருப்பின் மாவட்ட பொது மருத்துவமனை மருத்துவரிடம் பரிசோதித்து அதற்கான சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பாக வட்டாட்சியரிடமிருந்து பொருள் இழப்பீட்டுச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்திய தண்டனைச்சட்டம் (Indian Penal Code) விதிகளின் பல்வேறு பிரிவுகளின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள சிறு குற்றங்கள் மற்றும் தண்டனைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**வருமான வரம்பு** : விண்ணப்பதாரர் ஆண்டு வருமானம், கிராமப்புறங்களில் வசிப்போருக்கு ரூபாய் 40,000 /- மிகாமலும், நகர்ப்புறங்களில் வசிப்போருக்கு ரூபாய் 60,000 /- மிகாமலும் இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு ரூ. 10,000 /- வரை சிறுவணிகம் தொடங்குவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

**கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைத்தல்**

இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்கள் கோரிக்கையின் அடிப்படையில், கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு 2020-21 ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டுத் திட்டம் (பிரதம மந்திரியின் ஜன் விகாஸ் கார்யக்ரம்) :**

பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் திட்டம் சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக (ம) [பொருளாதார நிலையை உயர்த்துவதையும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை வழங்குவதிலும் மற்றும் ஏற்றத்தாழ்வினை குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஒன்றிய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் கண்டறியப்பட்டுள்ள பின்வரும் 4 ஊராட்சிகள் (ம) 18 நகர்ப்புறங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**ஊராட்சிகள்**

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சியின் பெயர் |
|---|---|---|
| 1. | நீலகிரி | கூடலூர் |
| 2. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி |
| 3. | இராமநாதபுரம் | திருவாடானை |
| 4. | இராமநாதபுரம் | மண்டபம் |

**நகர்ப்புறங்கள்**

| வ.எண் | மாவட்டம் | வ.எண் | நகர்ப்புறத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | வேலூர் | 1. | வேலூர் (மாநகராட்சி) |
| | | 2. | பேர்ண்ாம்பட்டு (நகராட்சி) |
| 2. | இராணிப்பேட்டை | 3. | மேல்விஷாரம் (நகராட்சி) |
| 3. | திருப்பத்தூர் | 4. | ஆம்பூர் (நகராட்சி) |
| | | 5. | வாணியம்பாடி (நகராட்சி) |
| 4. | திண்டுக்கல் | 6. | திண்டுக்கல் (நகராட்சி) |
| 5. | கரூர் | 7. | பள்ளப்பட்டி (பேரூராட்சி) |
| 6. | நாகப்பட்டினம் | 8. | நாகப்பட்டினம் (நகராட்சி) |
| 7. | இராமநாதபுரம் | 9. | கீழக்கரை (நகராட்சி) |
| 8. | தூத்துக்குடி | 10. | தூத்துக்குடி (மாநகராட்சி) |
| | | 11. | காயல் பட்டினம் (நகராட்சி) |
| 9. | தென்காசி | 12. | கடையநல்லூர் (நகராட்சி) |
| | | 13. | தென்காசி (நகராட்சி) |
| 10. | திருநெல்வேலி | 14. | திருநெல்வேலி (மாநகராட்சி) |
| 11. | கன்னியாகுமரி | 15. | கொல்லங்கோடு (பேரூராட்சி) |
| | | 16. | நாகர்கோயில் (மாநகராட்சி) |
| 12. | கோயமுத்தூர் | 17. | குறிச்சி (மாநகராட்சி) |
| | | 18. | குனியமுத்தூர் (மாநகராட்சி) |

இத்திட்டத்தின் கீழ் சமுதாயகூடம் அமைத்தல், உண்டு உறைவிடப்பள்ளி, திறன்மிகு வகுப்பறை (smart class), அரசு தொழிற் பயிற்சி நிலையம் / தொழில் நுட்ப கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசு பள்ளிகளுக்கு கட்டடங்கள், பல்வகை தொழிற் நுட்ப கல்லூரிகள், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்தல், ஒன்றிய மற்றும் மாநில அரசின் பல்கலைக்கழகங்களில் மாணவர் விடுதிகள் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கீகரித்துள்ள மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன் கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை சிறுபான்மையினர் அதிகம் வாழும் இடங்களில் ஏற்படுத்திதருதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றது.

**மேலும் விவரங்கள் தேவைப்படின் கீழ்க்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்:-**

| அலுவலர் மற்றும் முகவரி | தொலைபேசி மற்றும் நிகரி எண் | மின்னஞ்சல் / இணையதளம் |
|---|---|---|
| இயக்குனர்<br>சிறுபான்மையினர்<br>நலத்துறை, கலச மஹால்,<br>முதல் தளம், சேப்பாக்கம்,<br>சென்னை – 600005. | அலுவலகம் 044-28520033, 28523544<br>நிகரி 044-28544545 | dirmw.tn@gov.in<br>www.bcmbcmw.tn.gov.in |

**தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் :-**

| அலுவலர் | பதவி | முகவரி | தொலைபேசி எண் | நிகரி எண் |
|---|---|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் | சிறுபான்மையினர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர் | சிறுபான்மையினர் நல இயக்கம், கலச மஹால், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை – 600005. | 044-28543117 | 044-28544545 |
| மேல் முறையீட்டு அலுவலர் | துணை இயக்குநர், சிறுபான்மையினர் நலம் | சிறுபான்மையினர் நல இயக்கம், கலச மஹால், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை – 600005. | 044-28515050 | 044-28544545 |

இத்துறையின் மூலம் செய்லபடுத்தப்படும் மேற்கண்ட திட்டங்கள் குறித்து விண்ணப்பிக்க தொடர்பு கொள்ள வேண்டிய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் குறித்த விவரம் அட்டவணை III–ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாட்டில் வாழும் **மத வழி மற்றும் மொழி வழி சிறுபான்மையினரின்** உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 2010 (தமிழ்நாடு சட்டம், 21/2010) தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக 01.08.2010 முதல் இயங்கி வருகிறது.

இந்த ஆணையம், சிறுபான்மையினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள், செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களை தெரிவித்தல், மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான வழிவகைகளை அரசுக்கு பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

இவ்வாணையத்தின் **தலைவராக திரு S. பீட்டர் அல்போன்ஸ்** அவர்கள் 28.06.2021 அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளார், இவ்வாணையத்திற்கு Dr. மஸ்தான் அவர்கள் துணைத் தலைவராகவும், 8 உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் பணிகள் பின்வருமாறு:

1. சிறுபான்மை இனத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் மற்றும் நெறிமுறைகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பது குறித்து ஆராய்ந்து மறு மதிப்பீடு செய்தல்.
2. இது போன்ற நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களில் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செவ்வனே செயல்படுத்தப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரும் பொருட்டு, சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது அமைப்புகளுக்கு தேவையான பரிந்துரைகளை அனுப்பி வைத்தல்.
3. தமிழ்நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் நலனுக்கென எடுக்கப்பட்டுள்ள அரசின் கொள்கை முடிவுகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் செயல்பாடு குறித்த ஆய்வு மேற்கொள்ளுதல்.
4. சிறுபான்மையினருக்கெதிராக பாதகமான செயல்பாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு ஆராய்ச்சிகள், ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தேவைப்படும் ஆலோசனைகளை அரசுக்கு அறிவித்தல்.
5. சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து அரசுக்கு உரிய கருத்துகளைத் தெரிவித்தல்.
6. மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை தொடர்ந்து நிலைநாட்டுவதற்கும், மேம்படுத்துவதற்கும் தக்க வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல்.

### மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் மற்றும் முகவரி

உறுப்பினர் – செயலர்,
தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்,
735, அண்ணா சாலை,
எல்.எல்.ஏ. கட்டிடம் 3–வது தளம், சென்னை – 600 002.
தொலைபேசி – 044–28510303
நிகரி எண் – 044–28515255
மின்னஞ்சல் : secretary55@ymail.com

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் தகவல்கள் பெற விண்ணப்பிக்கப்பட வேண்டிய அதிகாரிகளின் விவரங்கள்

| அலுவலர் | பதவி | அலுவலக முகவரி | தொலைபேசி எண் | தொலைநகல் எண் |
|---|---|---|---|---|
| பொதுத்தகவல் அலுவலர் | செயலர் | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், 735, அண்ணா சாலை, எல்.எல்.ஏ. கட்டிடம் 3–வது தளம், சென்னை – 600 002. | 044–28510303 | 044–28515255 |
| மேல்முறையீட்டு அலுவலர் | உறுப்பினர் செயலர் | | | |

## தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்:

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தமிழ்நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் மற்றும் ஜெயின் ஆகியோர்கள் பயன் பெறும் வகையில் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956ன் கீழ் 31.08.1999–ல் பதிவு செய்யப்பட்டது. சிறுபான்மையினர்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுதலுக்கான செயல்பாடுகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதே தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பிரதான குறிக்கோள் ஆகும்.

புதுதில்லியில் உள்ள தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்தின் மாநில முகவராக இக்கழகம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கீழ்க்கண்டவாறு தனிநபர் காலக் கடன், விராசாத் கடன் (கைவினை கலைஞர் கடன்), சிறுகடன் மற்றும் கல்விக்கடன் வழங்கப்படுகிறது.

| திட்டங்களின் பெயர் | தகுதிகள் | விண்ணப்பிக்க / அணுக வேண்டிய அலுவலர்கள் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| **I. தனி நபர் கடன் திட்டம்**<br>தனி நபர் கடன் திட்டத்தின் ரூ.30.00 இலட்சம் வரையிலான திட்டங்களுக்கு தனி நபர்களுக்கு சுயமாக தொழில் / வியாபாரம் செய்ய / கறவை மாடுகள் / ஆட்டோ வாங்க கடன் வழங்கப்படுகிறது.<br>**திட்டம் - I**<br>இத்திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு ரூ.20.00 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது<br>**வட்டிவிகிதம்**<br>ரூ.20.00 இலட்சம் வரை – ஆண்டொன்றுக்கு 6% | விண்ணப்பதாரர் மதவழி சிறுபான்மையினரான இனத்தவரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள், ஜெயினர்கள் ஆகியோர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும் .<br>**திட்டம் - I**<br>ஆண்டு வருமானம் கிராமப் புறங்களில் ரூ.98,000 /–க்கும், நகர்ப்புறங்களில் ரூ.1,20,000 /–க்கும் மிகாது இருத்தல் வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br>(அல்லது)<br>மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்<br>(அல்லது)<br>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி. |

| | | |
|---|---|---|
| **திட்டம்-II**<br>இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சம் ரூ.30.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>**வட்டிவிகிதம்**<br>ஆண் பயனாளிகளுக்கு – ஆண்டொன்றுக்கு 8%<br>பெண் பயனாளிகளுக்கு – ஆண்டொன்றுக்கு 6%<br>**நிபந்தனைகள்:**<br>ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் வழங்கப்படும் கடன் தொகையில் முதலில் 50% கடன் வழங்கப்படும். மீதமுள்ள 50% கடன் தொகை முன்பு வழங்கப்பட்ட கடன் தொகை முழுமையாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யப்பட்ட பின்பு விடுவிக்கப்படும்.<br>**கடன் பங்குத் தொகை விவரம் பின்வருமாறு:**<br>தேசியகழகத்தின் பங்கு – 90%<br>டாம்கோவின் பங்கு – 5%<br>பயனடைவோரின் பங்கு – 5% | **திட்டம் - II**<br>திட்டம் – I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000 /– வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு)<br>**பொதுவான தகுதிகள் வயதுவரம்பு:-**<br>18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டும் கடன் வழங்கப்படும்.<br>**சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:-**<br>1. பள்ளிமாற்றுச் சான்றிதழ் / சாதிசான்றிதழ் / ஜெயின் சிறுபான்மையினர் மதச்சான்றிதழ்.<br>2. வருமானசான்றிதழ்.<br>3. உணவுபங்கீடு அட்டை அல்லது இருப்பிட சான்றிதழ்.<br>4. திட்ட அறிக்கை.<br>5. வங்கிகள் கோரும் தேவையான ஆவணங்கள்.<br>6. ஆதார் அட்டை கடன் தொகை 60 மாத தவணைகளில் திரும்ப செலுத்தப்பட வேண்டும். தவணை தவறிய கடன்களுக்கு 5 விழுக்காடு அபராதவட்டி கூடுதலாக இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் கடனை தாமதமாக திருப்பிச் செலுத்தினால் வட்டி விகிதத்துடன் விதிக்கப்படும். | |
| **II. விராசத் - கைவினை கலைஞர் கடன் திட்டம்**<br>விராசத் திட்டம் கடனின் கீழ் மூலதனம் மற்றும் நிலையான மூலதனம் தேவை. அதன் அடிப்படையில் கொண்டு விராசத் கைவினை கலைஞர் கடன் திட்டம் ரூ.10.00 இலட்சம் வரை கைவினை கலைஞர்களுக்கு கடன்கள் வழங்கப்படுகிறது. | **பொதுவான தகுதிகள் வயதுவரம்பு:-**<br>18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டும் கடன் வழங்கப்படும். | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br>(அல்லது)<br>மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்<br>(அல்லது) |

| | | |
|---|---|---|
| **வட்டிவிகிதம்**<br>ஆண் பயனாளிகளுக்கு – ஆண்டொன்றுக்கு 5%<br>பெண் பயனாளிகளுக்கு – ஆண்டொன்றுக்கு 4%<br>**நிபந்தனைகள்**<br>ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் வழங்கப்படும் கடன் தொகையில் முதலில் 50% கடன் வழங்கப்படும். மீதமுள்ள 50% கடன் தொகை முன்பு வழங்கப்பட்ட கடன் தொகை முழுமையாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யப்பட்ட பின்பு விடுவிக்கப்படும்.<br>**கடன் பங்குத் தொகை விவரம் பின்வருமாறு:**<br>தேசியகழகத்தின் பங்கு – 90%<br>டாம்கோவின் பங்கு – 5%<br>பயனடைவோரின் பங்கு – 5% | சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:–<br>1. பள்ளிமாற்றுச் சான்றிதழ் / சாதிசான்றிதழ் / ஜெயின் சிறுபான்மையினர் மதச்சான்றிதழ்.<br>2. வருமானசான்றிதழ்.<br>3. உணவுபங்கீடு அட்டை அல்லது இருப்பிட சான்றிதழ்.<br>4. திட்ட அறிக்கை.<br>5. வங்கிகள் கோரும் தேவையான ஆவணங்கள்.<br>6. ஆதார் அட்டை.<br>கடன் தொகை 60 மாத தவணைகளில் திரும்ப செலுத்தப்பட வேண்டும்.<br>தவணை தவறிய கடன்களுக்கு 5 விழுக்காடு அபராதவட்டி கூடுதலாக இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் கடனை தாமதமாக திருப்பிச் செலுத்தினால் வட்டி விகிதத்துடன் விதிக்கப்படும். | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி. |
| **III. சிறுகடன்**<br>சிறுகடன் திட்டத்தின் கீழ் சிறுகடன் சிறுபான்மை சுய உதவிக் குழுக்களின் அங்கத்தினர்களுக்கு (ஆண் / பெண்) ஜவுளி வியாபாரம், காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, பலகாரம், ஊறுகாய் (ம) அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களது பொருளாதாரத்தை உயர்த்திட சிறு வணிகக் கடன் வழங்கப்படுகிறது.<br>**திட்டம் - I**<br>இத்திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.100,000 /– வரை 7% வட்டியில் சிறுபான்மையின சுய உதவிக் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் கடனாக வழங்கப்படுகிறது. | சுய உதவிக் குழுவில் உறுப்பினர்கள் அதிகபட்சமாக 20 நபர்களும், குறைந்தபட்சமாக 10 நபர்களும் இருத்தல் வேண்டும். இதில் 60% சிறுபான்மையினரும், 40% பிவ / மி.பி.வ / சீ.ம / ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இருக்கலாம். மேலும், அந்தக் குழு கூட்டுறவு வங்கியில் குறைந்தது ஆறு மதம் சேமித்தல் மற்றும் கடன் அளித்தால் பணியில் தொடர்ந்து நன்றாக செயல்பட்டு இருக்க வேண்டும்.<br>**திட்டம் - I**<br>ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ. 98,000 /– க்கும் நகர்ப் புறங்களில் ரூ.120,000 /–க்கும் மிகாது இருத்தல் வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br>(அல்லது)<br>மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்<br>(அல்லது)<br>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி. |

| | | |
|---|---|---|
| **திட்டம் - II**<br>இத்திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.150,000 /– வரை ஆண்களுக்கு ஆண்டிற்கு 10% வட்டியிலும் மற்றும் பெண்களுக்கு 8% வட்டியிலும் கடன் வழங்கப்படுகிறது.<br><br>**கடன் பங்குத் தொகைவிவரம் பின்வருமாறு:**<br>தேசியகழகத்தின் பங்கு – 90%, டாம்கோவின் பங்கு – 5%, பயனடைவோரின் பங்கு – 5% | **திட்டம் - II**<br>திட்டம் – I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.800,000 /– வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) இக்கடன் தொகை 36 மாதத் தவணைகளில் திரும்ப செலுத்தப்பட வேண்டும். தவணை தவறிய கடன்களுக்கு 5 விழுக்காடு அபராதவட்டி கூடுதலாக இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் கடனை தாமதமாக திருப்பிச் செலுத்தினால் வட்டி விகிதத்துடன் விதிக்கப்படும். | |
| **IV. கல்விக்கடன்**<br>சிறுபான்மை மாணவ / மாணவியர் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் தொழிற்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையினர் மாணவ மாணவியர்களுக்கு கல்விக் கடனுதவிகள் வழங்கப்படுகிறது.<br><br>**திட்டம் - I**<br>இந்தியாவில் கல்வி பயில கல்விக் கடன் ஆண்டுதோறும் ரூ.4.00 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>மேலும், வெளி நாடுகளில் தொழிற்கல்வி பயில ஆண்டிற்கு ரூ. 6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>வட்டி விகிதம் – ஆண்டொன்றுக்கு 3% | விண்ணப்பதாரர் சிறுபான்மையினர் இனத்தவரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள், ஜெயினர்கள் ஆகியோர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும் .<br><br>**திட்டம் - I**<br>ஆண்டு வருமானம் கிராமப் புறங்களில் ரூ.98,000 /–க்கும், நகர்ப்புறங்களில் ரூ.1,20,000 /–க்கும் மிகாது இருத்தல் வேண்டும்.<br><br>**திட்டம் - II**<br>திட்டம் – I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000 /– வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு)<br><br>**வயது வரம்பு:-**<br>வயது வரம்பு 16–32க்குள் இருக்கவேண்டும்.<br>ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டும் கடன் வழங்கப்படும். | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br>(அல்லது)<br>மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்<br>(அல்லது)<br>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி. |

| | | |
|---|---|---|
| திட்டம் – II<br>இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ.4.00 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br><br>மேலும், வெளி நாடுகளில் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ. 6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br><br>வட்டிவிகிதம் ஆண்டிற்கு<br>ஆண் பயனாளிகளுக்கு – ஆண்டொன்றுக்கு 8%<br>பெண் பயனாளிகளுக்கு – ஆண்டொன்றுக்கு 5%<br>மேற்படி கல்விக் கடனில், சேர்க்கை கட்டணம் / பயிற்றுவிப்பு கட்டணம், புத்தகம், எழுது பொருள் மற்றும் படிப்புக்குத் தேவையான உபகரணங்கள், தேர்வுக் கட்டணம், விடுதி மற்றும் உணவுக் கட்டணம் (விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மட்டும்) ஆகியவை அடங்கும்.<br><br>கல்விக் கடன் புதுப்பித்தல்:–<br>கல்விக் கடன் பெற்ற பின்னர் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மாணவ / மாணவியர் பருவ தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருப்பின் புதுப்பித்தல் கல்விக் கடன் வழங்கப்படும். | விண்ணப்பிப்பதற்கான ஆவணங்கள்:<br>1. சாதிசான்றிதழ் / பள்ளிமாற்றுச் சான்றிதழ் நகல் / ஜெயின் சிறுபான்மையினர் மதச்சான்றிதழ்.<br>2. வருமான சான்றிதழ் நகல்.<br>3. இருப்பிட சான்றிதழ் நகல்.<br>4. உண்மைச் சான்றிதழ் (Bonafide Certificate) அசல்<br>5. கல்விக் கட்டணங்கள் செலுத்திய இரசீது – அசல் (Original)<br>6. மதிப்பெண் சான்றிதழ் நகல்.<br>7. வங்கி கோரும் இதர ஆவணங்கள்<br><br>கடன் தொகையினை திருப்பிச் செலுத்தும் காலவரம்பு:<br><br>கல்வி பருவகாலம் முடிந்த தேதியிலிருந்து அடுத்து 6–வது மாதத்திலிருந்து அல்லது பணியில் அமர்ந்த தேதியிலிருந்து இதில் எது முந்தையதோ அந்த தேதியிலிருந்து அசல் மற்றும் வட்டித்தொகை ஆகியவை 60 மாதத் தவணைகளில் வசூலிக்கப்படும்.<br><br>அபராதவட்டி:<br>கடன் தவணைத் தொகை செலுத்தத் தவறினால் 5% அபராதவட்டியுடன் அசல் (ம) வட்டித் தொகை ஆகியவற்றை மாணவ / மாணவியர் / பெற்றோர் / பாதுகாவலர்களிடம் வசூலிக்கப்படும். புதுப்பித்தல் கல்விக்கடன் விண்ணப்பத்துடன் தேர்ச்சி பெற்ற மதிப்பெண் சான்றிதழை கல்விநிலைய முதல்வர் / துறைத்தலைவரின் (HOD) கையொப்பம் பெற்று விண்ணப்பத்துடன் வங்கியில் தவறாது சமர்ப்பிக்க வேண்டும். | |

## குறிப்பு:

1. விண்ணப்பப் படிவங்கள் கட்டணமின்றி மேலே, கலம் (3)–ல் குறிப்பிட்டுள்ள அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களுடன் மேலே, கலம் (3)–ல் குறிப்பிட்டுள்ள அலுவலகங்களில் அளிக்கலாம்.

### திறன் வளர்ப்பு பயிற்சி (Skill Development Training)"Kaushal Se Kushalta"

சிறுபான்மையின இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சிகளின் மூலம் சிறுபான்மையின இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு மற்றும் வெளி நிறுவனங்களில் பணிவாய்ப்புகள் பெற வாய்ப்புள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, பயனாளிகளது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.600,000 /-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் / தொடர்புடைய துறை திறன் கவுன்சில் / மாநில திறன் மேம்பாட்டுக் கழகம் / தொழில்நுட்ப கல்வி இயக்கம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் மூலமாக குறைந்தபட்சம் 200 மணி நேரம் முதல் 250 மணி நேரம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் தேர்வு செய்யப்படும்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

**மேலாண்மை இயக்குநர்,**
தமிழ்நாடு சிறுபான்மையினர்பொருளாதார மேம்பாட்டுக்கழகம்,
கலச மகால் பாரம்பரிய கட்டடம்
முதல் மாடி, சென்னை – 600 005.
தொலைபேசி : 044-28514846
நிகரி : 044-28515450
மின்னஞ்சல் : tamco@tn.gov.in

### தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் தகவல்கள் பெற விண்ணப்பிக்கப்பட வேண்டிய அதிகாரிகளின் விவரங்கள்

| அலுவலர் | பதவி | அலுவலக முகவரி | தொலைபேசி எண் | நிகரி எண் |
|---|---|---|---|---|
| பொதுத்தகவல் அலுவலர் | மேலாளர் (கடன் மற்றும் திட்டம்) | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் கலச மகால் பாரம்பரிய கட்டடம் முதல் மாடி, சென்னை – 600 005. | 044-28515531 | 044-28515450 |
| முறையீட்டு அலுவலர் | மேலாண்மை இயக்குநர் | | 044-28514846 | 044-28515450 |

## தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

வக்ஃப் சட்டம், 1954 தமிழ்நாட்டில் 15.01.1955ல் அமலபடுத்தப்பட்டது. முதல் வாரியம் 18.01.1958ல் அமைக்கப்பட்டது. 1995-ம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மத்திய சட்டம், 43/1995), 01.01.1996 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. வாரியம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. 12 உறுப்பினர்களை கொண்ட வாரியம் 19.09.2020 முதல் திருத்தி அமைக்கப்பட்டது. இவ்வாரிய உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். தற்போது தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு புதிய உறுப்பினர்கள் 13.07.2021 முதல் நியமிக்கப்பட்டுள்ளனர். திரு M. அப்துல் ரகுமான் அவர்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் தலைவராக உறுப்பினர்களால் தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.

**பணியமைப்பு**

தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. முதன்மை செயல் அலுவலர் தலைமை நிர்வாகியாவார். சிறந்த நிர்வாக வசதிக்காக மாநிலத்தில்

சென்னை, பூவிருந்தவல்லி, வேலூர், பண்ருட்டி, சேலம், கோயமுத்தூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் 11 சரக அலுவலகங்கள் வக்ஃப் கண்காணிப்பாளர்கள் தலைமையில் செயல்படுகிறது. மேலும், வக்ஃப் ஆய்வாளர்கள் 38 மாவட்டங்களில் பணிபுரிகின்றனர்.

## தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் பணிகள்

வக்ஃப் வாரியத்தின் பலவகைப்பட்ட பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஒவ்வொரு வக்ஃபின் தோற்றம், வருவாய், நோக்கம் , பயனாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் அடங்கிய பதிவு (ரிகார்டு) பேணுதல்.
2. வக்ஃப்சொத்துகளும் அதன் வருமானமும் எந்த நோக்கத்திற்காக வக்ஃப் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக செயல்படுத்தப்படுகிறதா என்று உறுதி செய்தல்.
3. வக்ஃப் நிர்வாகத்திற்காக கட்டளையிடுதல்.
4. வக்ஃப்களின் நிர்வாகத்திற்காக புதிய திட்டம் தீட்டிக் கொடுத்தல்.
5. வக்ஃப்களின் கணக்கை தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் முத்தவல்லிகள் சமர்ப்பிக்கும் பட்ஜெட்டை ஆய்வு செய்து அங்கீகரித்தல்.
6. வக்ஃப் சட்டப்படி முத்தவல்லிகளை நியமனம் செய்தல் மற்றும் நீக்குதல்.
7. இழந்த வக்ஃப் சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்தல்.
8. வக்ஃப் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துதல்.
9. வக்ஃப் 1995 (மத்திய சட்டம், 43/195) மற்றும் விதிமுறைகளின்படி வக்ஃப் சொத்துக்கள் குத்தகை விடுவதற்கு அனுமதி வழங்குதல்,
10. வக்ஃப் நிதியை நிர்மானித்தல்.
11. வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தமாக வாரியத்திற்கு அவ்வப்போது தேவைப்படும் தகவல்களை முதவல்லிகளிடம் கேட்டல்.
12. வக்ஃப் சொத்துக்கள், கணக்குகள் ரிகார்டுகள், வக்ஃப் நாமாக்கள் மற்றும் பத்திரங்களை ஆய்வு செய்தல்.
13. வக்ஃப் சொத்தின் தன்மை, பரப்பளவு ஆகியவற்றை ஆராய்ந்து முடிவு செய்தல் மற்றும் தேவைப்படும் போது வக்ஃப் சொத்துக்களை அளவை செய்தல்.
14. வக்ஃப்களைக் கட்டுப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

இது நீங்கலாக அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் நலிவுற்ற வக்ஃப் நிறுவனங்களின் கட்டடங்களைப் பழுது பார்ப்பதற்கும், பெரிய அளவிலான பள்ளிவாசல் மற்றும் தர்காக்களை பராமரிப்பதற்கும் மானியம் வழங்குதல், உலமாக்கள் ஓய்வூதியம் வழங்குதல் போன்ற பணிகளில் வாரியம் ஈடுபட்டு வருகிறது. மேலும், 1986 ஆம் ஆண்டு முஸ்லிம் பெண்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படி விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற உத்தரவின்படி ஜீவனாம்சம் வழங்குதல் போன்ற பணிகளிலும் வாரியம் ஈடுபட்டு வருகிறது. வாரியத்தின் மேற்பார்வையில் மதுரையில் எம். எஸ்.எஸ்.வக்ஃப் வாரிய கல்லூரி இயங்கி வருகிறது.

தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஆளுகையின் கீழ் 7,452 வக்ஃப்கள் உள்ளன. அதில் வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டவை 2,814 வக்ஃப்கள் ஆகும், பதிவு செய்யப்படாதது 4,638 வக்ஃப்களும் ஆகும்.

## நிர்வாக மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு, வக்ஃப் நிறுவனங்களால் செலுத்தப்படும் சகாயத் தொகை வாரியத்தின் மொத்த செலவிற்கு போதுமானதாக இல்லாததால், தமிழ்நாடு அரசு வக்ஃப் வாரியத்திற்கு ஆண்டுதோறும் நிர்வாக மானியம் வழங்குகிறது. தமிழ்நாடு அரசு நிர்வாக மானியத்தை 2019–2020 ஆண்டு முதல் ரூ.2 கோடியிலிருந்து ரூ.2.5 கோடியாக உயர்த்தியுள்ளது.

## வக்ஃப் சொத்துக்களை நில அளவை செய்தல்

வக்ஃப் சட்டம், 1995–இன் படி வக்ஃப் சொத்துக்களைசர்வே செய்வதற்காக நில அளவை ஆணையரை, வக்ஃப் நில அளவை ஆணையராக அரசு நியமனம் செய்தது. மாவட்ட வருவாய் அதிகாரிகள் கூடுதல் வக்ஃப் நில அளவை ஆணையராக நியமனம் செய்யப்பட்டார்கள்.

அரசு உத்தரவுப் படி மாவட்ட வாரியாக வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள், 1954–ம் ஆண்டு வக்ஃப் சட்டப்படி தயாரிக்கப்பட்ட வாரிய [பதிவேடுகளில் இருந்து எடுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. வாரியம் அளித்த வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள் மாவட்ட வருவாய் அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு பின்னர் நில அளவை ஆணையரால் 27 மாவட்டங்களில் நில அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள மாவட்டங்களில் நில அளவை பணிகள் நடைபெற்று வருகின்றன.

## தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம்

வக்ஃப்கள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக, வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 83–ன்படி மாவட்ட நீதிபதியை தலைவராகவும், மாவட்ட வருவாய் அலுவலர் அளவில் ஒரு உறுப்பினரும் மற்றும் முஸ்லிம் தனிநபர் சட்டத்தில் புலமை பெற்ற வழக்கறிஞர் ஒருவரை மற்றொரு உறுப்பினராகவும் கொண்டு 06.08.2018 முதல் எண்.5, காமராஜர் சாலை, சென்னை–5–ல் தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் செயல்பட்டு வருகிறது.

முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம், 1986 நடைமுறைப்படுத்துதல்
வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 77–இன்படி, முஸ்லிம் பெண்களுக்கு (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம், 198 பிரிவு 4(2)–ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் பராமரிப்பு தொகை வக்ஃப் வாரிய நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும். இவ்வகைக்கு ரூ.67,800 /– வாரியத்திற்கு செலவினம் ஏற்படுகிறது.

## காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்

தமிழ்நாட்டில் பணியாற்றும் மாவட்ட காஜிகளுக்கு 01.03.2016–ம் ஆண்டு முதல் மாதந்தோறும் ரூ.20,000 /– மதிப்பூதியம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃப் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் ஆளுகையின் கீழ் இயங்கும் வக்ஃப் நிறுவனங்களின் வக்ஃப் சொத்துக்கள் தனி நபர்களால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் போது வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 54–ன் படியும் மற்றும் தமிழ்நாடு பொதுவளாக (முறைகேடான ஆக்கிரமிப்பினை அகற்றுதல்) சட்டம், 1975–ன்படி (Tamil Nadu Public Premises (Eviction of Unauthorized occupants) Act, 1975) அச்சொத்துக்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் தனி நபர்கள் வக்ஃப் சொத்துக்களை சட்ட விரோதமாக விற்பனை மற்றும் பரிவர்த்தனை செய்வதை தடுத்திட தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு பதிவு சட்டம், 1908 பிரிவு 22(A)–ன்படி ஆட்சேபணை கடிதங்கள் வழங்கப்பட்டு வக்ஃப் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**வக்ஃப் வாரியத்தால் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்**
**உலமா ஓய்வூதிய (தமிழ்நாடு) திட்டம், 1981**

| திட்டத்தின் பெயர் | உலமா ஓய்வூதிய (தமிழ்நாடு) திட்டம், 1981 |
|---|---|
| திட்டத்தின் படி ஒதுக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை | 2,600 |
| பயன்பெறுவோர் எண்ணிக்கை | 1,284 |
| ஓய்வூதியமாக வழங்கப்படும் தொகை | ரூ.3,000 /– மாதம் ஒன்றுக்கு |
| ஓய்வூதியம் வழங்கப்படுவதற்கான தகுதிகள் | விண்ணப்பதாரர்<br>1. உலமாவாக இருக்க வேண்டும்<br>2. வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட (அல்லது) அளவை செய்யப்பட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்ட வக்ஃப் நிறுவனத்தில் குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் பேஷ் இமாமாக அல்லது மோதினார் (அல்லது) அரபி ஆசிரியராக அல்லது முஜாவராக பணி புரிந்திருக்க வேண்டும்.<br>3. 60 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.<br>4. மாத வருமானம் ரூ.1000 /–க்குள் இருக்க வேண்டும்.<br>5. ஊனமுற்றோருக்கு 60 வயதுக்கு பதிலாக 50 வயது மற்றும் 20 ஆண்டு பணிக்கு பதிலாக 10 ஆண்டுப் பணி என விதிகளில் தளர்வு |
| யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை – 600 001 |

**பள்ளிவாசல் மற்றும் தர்காக்களை பெரிய அளவில் புனரமைக்க நிதி உதவி வழங்கும் திட்டம்.**

| | |
|---|---|
| நிதி ஒதுக்கீடு | ரூ.5 கோடி |
| யாருக்கு மனுச் செய்ய வேண்டும் | முதன்மை செயல் அலுவலர்,<br>தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,<br>சென்னை – 600 001. |
| முகவரி | எண்.1, ஜாபர் சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர்,<br>சென்னை – 600 001. |
| தொலைபேசி எண்கள் | 044–25232222 / 044–25232255 |
| மின்னஞ்சல் | tnwb@tn.gov.in<br>tnwakfboard.tech@gmail.com |

## தொகுப்பு நிதி - வக்ஃப் நிறுவனங்களில் பழுது பார்ப்பு மற்றும் சீரமைப்பதற்கு

வக்ஃப் நிறுவனங்களில் சிறு அளவில் ஏற்படும் பழுது மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.3 கோடியில் தொகுப்பு (Corpus Fund) நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியிலிருந்து பெறப்படும் வருமானத்தை தேவையுள்ள வக்ஃப் நிறுவனங்களுக்கு தகுதியின் அடிப்படையில் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| i. வழங்கப்படும் அதிகபட்ச தொகை | ரூ. 3 முதல் ரூ. 5 இலட்சம் |
| ii. நிதி கையிருப்பு | ரூ. 36இலட்சம் |
| iii. பயன் பெரும் வக்ஃப்களின் எண்ணிக்கை | 10 வக்ஃப் நிறுவனங்கள் |
| iv. யாருக்கு மனுச் செய்ய வேண்டும் | முதன்மை செயல் அலுவலர்,<br>தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,<br>சென்னை – 600 001. |
| v. முகவரி | எண்.1, ஜாபர் சிராங் தெரு,<br>வள்ளல் சீதக்காதி நகர்,<br>சென்னை – 600 001. |
| vi. தொலைபேசி எண்கள் | 044-25232222<br>044-25232255 |
| vii. மின்னஞ்சல் | tnwb@tn.gov.in<br>tnwakfboard.tech@gmail.com |

## தமிழ்நாடு வக்ஃப் வாரிய த்தின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய வக்ஃப் கழக திட்டங்கள்

### (i) சஹாரி வக்ஃப் சம்பத்தி விகாஸ் யோஜனா திட்டம் (வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம்)

| | |
|---|---|
| 1. கடன் வழங்கும் நிறுவனம் | மத்திய வக்ஃப் கழகம், புது டெல்லி |
| 2. வழங்கப்படும் அதிகபட்ச கடன் தொகை | ரூ. 2 கோடி அல்லது திட்டமதிப்பீட்டில் 75% எது குறைவானதோ |
| 3. யாருக்கு மனுச் செய்ய வேண்டும் | செயலாளர், மத்திய வக்ஃப் கழகம், புது டெல்லி தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மை செயல் அலுவலர் வழியாக |

### (ii) குவாமி வக்ஃப் போர்டு தரக்கியத்தி திட்டம்

மாநில வக்ஃப் வாரியங்களின் செயல்பாடுகளை வலிமைப்படுத்தும் விதமாக வக்ஃப் வாரிய பணிகளில் திறன் மேம்பாட்டினை கொண்டுவர புதுடெல்லி, மத்திய வக்ஃப் கழகத்தால் "குவாமி வக்ஃப் போர்டு தரக்கியத்தி திட்டம்" தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கணினி உதவி புரோகிராமர், சட்ட அலுவலர்கள், கணக்காளர், நில அளவையாளர்கள், சரக வக்ஃப் அலுவலர் ஆகியோர்களை நியமிக்க வேண்டியும், வக்ஃப்

சொத்துக்களை GIS முறையில் கண்டறியும் பணிகளை மேற்கொள்ளவும், மையப்படுத்தப்பட்ட கணினி வசதிகளை ஏற்படுத்தவும், வக்ஃப் முத்தவல்லிகளின் பணிகள் மற்றும் ஒன்றிய அரசால் வழங்கப்படும் திட்டங்களின் வாயிலாக வக்ஃப் சொத்துக்களில் அபிவிருத்தி மேற்கொண்டு வக்ஃபின் வருவாய் பெருக்கும் வழிவகைகளுக்குண்டான பயிற்சி முகாம்களை முத்தவல்லிகளுக்கு நடத்திடவும் இவ்வகையான செயல்பாடுகளுக்கு 2019–2020–ஆம் ஆண்டிற்கு ரூ.1.02 கோடியும் மற்றும் 2020–2021 ஆண்டிற்கு ரூ.86 இலட்சமும் மானியமாக வழங்கப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பணியாளர்கள் நியமனம் செய்தும், வக்ஃப் சொத்துக்களின் ஆவணங்களை 100% கணிணிமயமாக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது. மேலும் 13,000 வக்ஃப் சொத்துக்கள் GIS முறையில் கண்டறியும் பணி மத்திய வக்ஃப் கழக இணையதளம் www.wamsi.nic.in–ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

### தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் (NAWADCO)

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்ய தேசிய சிறுபான்மை நல அமைச்சகத்தால், மத்திய வக்ஃப் கழகத்துடன் இணைந்து தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் தகுதியான வக்ஃப் சொத்துக்களை வணிக ரீதியாக மேம்படுத்துவதற்கு, தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் (NAWADCO) நிதி உதவி வழங்கி வருகிறது. இதன் மூலம் பெறப்படும் வருவாயினை வக்ஃப் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விகித்தாச்சார அடிப்படையில் தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தொடர்புடைய வக்ஃப் நிறுவனம் ஆகியன குறிப்பிட்ட கால அளவு வரை பிரித்து கொள்ள வழி வகை உள்ளது.

### மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் மற்றும் முகவரி

| | |
|---|---|
| முதன்மை செயல் அலுவலர்<br>தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,<br>எண்.1, ஜாபர் சிராங் தெரு,<br>வள்ளல் சீதக்காதி நகர்,<br>சென்னை – 600 001. | தொலைபேசி: 044–2523 2222, 2523 2255<br>நிகரி: 044–2524 8888<br>இணையதள முகவரி: www.tnwakfboard.org<br>மின்னஞ்சல்: tnwakfboard@gmail.com |

### தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் தகவல்கள் பெற விண்ணப்பிக்கப்பட வேண்டிய அதிகாரிகளின் விவரங்கள்

| அலுவலர் | பதவி | அலுவலக முகவரி | தொலைபேசி எண் | தொலைநகல் எண் |
|---|---|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் | கண்காணிப்பாளர் | தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,<br>எண்.1, ஜாபர் சிராங் தெரு,<br>வள்ளல் சீதக்காதி நகர்,<br>சென்னை – 600 001. | 044–2523 2222 | 044–2524 8888 |
| மேல்முறையீட்டு அலுவலர் | உதவி செயலாளர்–2 | தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,<br>எண்.1, ஜாபர் சிராங் தெரு,<br>வள்ளல் சீதக்காதி நகர்,<br>சென்னை – 600 001. | 044–2523 2222 | 044–2524 8888 |

### தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய வக்ஃப் கழக திட்டங்கள்

**சரக அலுவலகங்கள் - சென்னை சரகம் (சென்னை)**

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | எண்.139, டாக்டர் பெசன்ட் சாலை, ஐஸ் ஹவுஸ்,<br>திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. | 9499937429<br>9499937430 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | எண்.139, டாக்டர் பெசன்ட் சாலை, ஐஸ் ஹவுஸ், திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. | 9499937416 |

**பூவிருந்தவல்லி சரகம் (காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கற்பட்டு)**

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | பெரிய பள்ளிவாசல் வளாகம்<br>பூவிருந்தவல்லி, சென்னை. | 9499937428 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | பெரிய பள்ளிவாசல் வளாகம்<br>பூவிருந்தவல்லி, சென்னை. | 9499937420 |

**வேலூர் சரகம் (வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை)**

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | எண். 8, மசூதி வளாகம், ஆரணிசாலை, சாய்நாதபுரம், வேலூர்–632 001 | 9499937440 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | எண். 8, மசூதி வளாகம், ஆரணிசாலை, சாய்நாதபுரம், வேலூர்–632 001 | 9499937426 |

**கடலூர் சரகம் (கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் விழுப்புரம்)**

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | ஹஜ்ரத் நூர் முஹம்மத்ஷா<br>அவுலியா தர்கா, எண். 521, காந்திசாலை, பண்ருட்டி, கடலூர்–607 106. | 9499937427 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | ஹஜ்ரத் நூர் முஹம்மத்ஷா<br>அவுலியா தர்கா, எண். 521, காந்திசாலை, பண்ருட்டி, கடலூர்–607 106. | 9499937418 |

**திருச்சி சரகம் (திருச்சி, பெரம்பலூர். அரியலூர் மற்றும் புதுக்கோட்டை)**

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | எண்.8/124, 2–ம் தளம், காயிதேமில்லத் சாலை, பாலக்கரை, திருச்சி – 620 008. | 9499937437 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | எண்.8/124, 2–ம் தளம், காயிதேமில்லத் சாலை, பாலக்கரை, திருச்சி – 620 008. | 9499937425 |

### சேலம் சரகம் (சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி)

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | எண்.4A & 5A முதல் தளம், திப்புசுல்தான் மார்க்கெட், முதல் அக்ராஹாரம், சேலம் – 636 001. | 9499937435 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | எண்.4A & 5A முதல் தளம், திப்புசுல்தான் மார்க்கெட், முதல் அக்ராஹாரம், சேலம் – 636 001. | 9499937422 |

### மதுரை சரகம் (மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல்)

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | எண்.1, டவுன் ஹால் சாலை, மசூதி கட்டிடம் 2–ம் தளம், மதுரை – 626 001. | 9499937433 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | எண்.1, டவுன் ஹால் சாலை, மசூதி கட்டிடம் 2–ம் தளம், மதுரை – 626 001. | 9499937419 |

### தஞ்சாவூர் சரகம் (தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம்)

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | எண்.27, நீதி நகர், ஜும்மா மசூதி எதிரில், கோர்ட் சாலை, தஞ்சாவூர் – 613 001. | 9499937436 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | எண்.27, நீதி நகர், ஜும்மா மசூதி எதிரில், கோர்ட் சாலை, தஞ்சாவூர் – 613 001. | 9499937423 |

### கோயம்புத்தூர் சரகம் (கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி)

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | எண்.14–15, மசூதி வளாகம், அவினாசி சாலை, உப்பிலிபாளையம், கோயம்புத்தூர் – 640 108. | 9499937432<br>9499937438 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | எண்.14–15, மசூதி வளாகம், அவினாசி சாலை, உப்பிலிபாளையம், கோயம்புத்தூர் – 640 108. | 9499937417 |

### இராமநாதபுரம் சரகம் (இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் சிவகங்கை)

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | எண்.159/3, மற்றும் 4, தெற்பசயனம் சாலை, வெளிப்பட்டிணம், இராமாநாதபுரம் – 623 504. | 9499937434 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | எண்.159/3, மற்றும் 4, தெற்பசயனம் சாலை, வெளிப்பட்டிணம், இராமாநாதபுரம் – 623 504. | 9499937421 |

## திருநெல்வேலி சரகம் (திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி)

| பதவி | அலுவலக முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட மாவட்ட வக்ஃப் ஆய்வாளர் (பொ.த) | எண்.51/80, காதர் அவுலியா தர்கா பள்ளிவாசல் (KAP காம்ப்ளக்ஸ்), குலவணிகர்புரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி–627 002 | 9499937437 |
| சரக கண்காளிப்பாளர் (மேல்முறையீட்டு அலுவலர்) | எண்.51/80, காதர் அவுலியா தர்கா பள்ளிவாசல் (KAP காம்ப்ளக்ஸ்), குலவணிகர்புரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி–627 002 | 9499937424 |

## தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு 1958–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஹஜ் குழு சட்டம், 2002–ஐ (மத்திய சட்டம், எண்.35/2002) இயற்றிய பின்னர், ஹஜ் பயணம் சிறப்புடன் அமைய அதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்திய ஹஜ் குழு மற்றும் புதுடெல்லி, சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் செய்வதற்கும் மற்றும் ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் மூன்று ஆண்டு காலத்திற்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, மாநில அரசால் அமைக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவானது, அலுவல் சார் உறுப்பினராக செயலாளர் மற்றும் செயல் அலுவலருடன் சேர்த்து 12 உறுப்பினர்களை கொண்டு 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் திருத்தி அமைக்கப்பட்டது.

### விண்ணப்பிக்கும் முறை

ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் காலம் தொடங்குவதற்கு முன்னர், வரவிருக்கின்ற ஹஜ் பயணம் குறித்த பல்வேறு நேர்வுகளை மும்பையிலுள்ள இந்திய ஹஜ் குழு, புதுடெல்லியுள்ள சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகத்துடன் ஆலோசித்து முடிவு செய்யும். மும்பையிலுள்ள இந்திய ஹஜ் குழுவின் அறிவுரைகளின் அடிப்படையில், ஒவ்வொராண்டும்ம் ஹஜ் பயண விண்ணப்பங்களைப் பெறுவதற்கென பத்திரிக்கைச் செய்தி, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவால் வெளியிடப்படுகிறது.

மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதியை, இந்திய ஹஜ் குழு அறிவிக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும், புனித ஹஜ் பயணிகளுக்கான ஒதுக்கீட்டினை அம்மாநிலத்திலுள்ள முஸ்லீம் மக்கள் தொகையின் அடிப்படையில் ஒன்றிய அரசு அளிக்கிறது. மாநிலத்திற்கு அளிக்கப்பட்ட ஒதுக்கீட்டிற்கும் மேலாக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை இருந்தால், வெளிப்படையான (Transparent) முறையில் குலுக்கல் நடத்துவதன் மூலம் புனிதப் பயணிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். ஹஜ் விண்ணப்பப் படிவத்தை www.hajcommittee.gov.in என்ற இணையம் அல்லது "இந்திய ஹஜ் குழு" (Hcol) என்ற ஆண்ட்ராய்டு மொபைல் செயலி மூலமாக online–ல் சமர்ப்பிக்கலாம். ஹஜ் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். கூடுதல் விவரங்களுக்கு ஹஜ் விண்ணப்பதாரர்கள், மும்பை இந்திய ஹஜ் குழுவால் வெளியிடப்பட்ட ஹஜ் பயணத்திற்கான வழிகாட்டுதல்களை இணையதள முகவரி www.hajcommittee.gov.in–ல் காணலாம்.

## குழுவின் பணிகள்:

இக்குழுவின் முக்கிய பணிகள் பின்வருமாறு:-

(i) இந்திய ஹஜ் குழுவின் வழிகாட்டுதலின்படி, ஹஜ் செய்ய விரும்பும் தமிழ்நாட்டிலுள்ள ஹஜ் பயணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுதல்.

(ii) மாநிலத்திற்கான ஒதுக்கீடு அளித்ததன் அடிப்படையில், தேவைப்பட்டால் குறாவின் (குலுக்கல் முறையில்) மூலம் பயணிகளை தேர்வு செய்தல்.

(iii) அவ்வப்போது ஹஜ் புனித பயணிகளுக்கு அறிவுரைகளை வழங்குதல் மற்றும் அவர்களிடமிருந்து பெறப்படும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கு விளக்கங்களை அளித்தல்.

(iv) மக்காவில் புனித பயணிகள் தங்குவதற்கேற்ப கட்டடங்களைத் தேர்வு செய்ய ஒரு பிரதிநிதியை கட்டடத் தேர்வுக் குழுவில் சவூதி அரேபியாவிற்கு அனுப்பி வைத்தல்.

(v) தமிழ்நாட்டைச் சார்ந்த ஹஜ் புனித பயணிகளின் நலனைக் கவனிக்க ஹஜ் தொண்டர்களை தேர்வு செய்து சவூதி அரேபியாவிற்கு அனுப்பி வைத்தல்.

(vi) ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் வழிகாட்டி, ஹஜ் மற்றும் உம்ரா கையேடுகள் ஆகியவற்றை அச்சிட்டு ஹஜ் புனித பயணிகளுக்கு இலவசமாக வழங்குதல்.

(vii) சென்னை-ஜித்தா-மதினா-சென்னை விமானங்களை நேரடியாகவும் வெற்றிகரமாகவும் இயக்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

(viii) ஹாஜிகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து மும்மை இந்திய ஹஜ் குழு மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகார அமைச்சகம் முதலியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு முடிந்த வரையில் தீர்வு காண்பதற்கு உதவுதல்.

(ix) பல்வேறு மாவட்டங்களில் புனிதப் பயணிகளுக்கு புத்தறிவுப் பயிற்சி மற்றும் தடுப்பூசி முகாம்கள் நடத்துதல்.

(x) புனிதப் பயணிகளுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் சென்னையில் தற்காலிக தங்குமிடவசதி செய்து கொடுத்தல் மற்றும் புனிதப் பயணிகள் விமான நிலையம் செல்வதற்கு பேருந்து வசதி அளித்தல்.

(xii) சுங்கம் மற்றும் குடியேற்றம் குறித்த நடைமுறைகளை தீர்க்க ஏற்பாடு செய்தல்.

## ஹஜ் பயணத்திற்கான ஏற்பாடுகள்:

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மமுஸ்லீம் மக்கள் தொகைக்கேற்றவாறு நம் நாட்டிற்கு அளிக்கப்படும் ஒதுக்கீட்டை, ஒன்றிய அரசு பல்வேறு மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கிறது. ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களை புனிதப் பயணிகளிடமிருந்து தமிழ்நாடு மாநில ஹஜ் குழு வரவேற்கிறது. ஒவ்வொரு ஆண்டும், வழங்கப்பட்ட ஒதுக்கீட்டை விட அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. தமிழகத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாவட்ட வாரியாக ககுலுக்கல் நடத்தப்பட்டு, பயணிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக சென்னை விமான நிலையத்திற்கு பதிலாக கொச்சின் விமான நிலையத்தை புறப்பாட்டு தளமாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இந்திய ஹஜ் குழுவின் அறிவுரைகளின்படி, மாநில ஹஜ் குழு தன் பணிகளை மேற்கொள்கிறது. பயணிகளை தெரிவு செய்தல், பயணிகளுக்கான விமானப் பயண அட்டவணையை இறுதி செய்தல், தங்குமிடங்களை ஒதுக்குதல் முதலியவற்றை இந்திய ஹஜ் குழு மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் முடிவு செய்கின்றன.

## மணிலா அரசால் வழங்கப்படும் மானியங்கள் / உதவிகள் நிர்வாக மானியம்

ஒவ்வொரண்டும் மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டு நிர்வாக மானியமாக தமிழ்நாடு அரசு ரூ.50 இலட்சம் வழங்கி வருகிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்துவரி, மின்சார செலவினம். குடிநீர் மற்றும் வடிகால்வரி முதலிய நிர்வாக செலவனிங்களை தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் வழங்கும் மானியத்திலிருந்து ஹஜ் குழு மேற்கொள்கிறது. 2021–2022ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம்

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மானியத் தொகை ரூ.6.00 கோடியிலிருந்து ரூ.10.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2019–2020–ஆம் ஆண்டில் 4,397 ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. கொரோனா (Covid–19) பெருந்தொற்று காரணமாக ஹஜ் 2020 மற்றும் 2021–க்கான பயணத்தை சவூதி அரேபியா அரசு இரத்து செய்துள்ளது.

## ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் உறுப்பினரை அனுப்புவதற்கு மானியத்தை ஒப்பளிப்பு செய்தல்.

ஹஜ் பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், கட்டடங்களைத் தெரிவு செய்ய கட்டடத் தேர்வுக் குழுவில் பிரதிநிதியை அனுப்புவதற்கு உண்டான செலவினத்தை மேற்கொள்ளவும், அரசு தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியங்களை அளிக்கிறது.

## இதர மானியங்கள்

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் உறுப்பினர்கள் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள வருகை புரிவதற்கான பயணப்படி மற்றும் தினப்படிக்கான செலவினத்தை தமிழ்நாடு அரசு ஈடு செய்கிறது. இந்திய ஹஜ் குழு, ஒன்றிய சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சகம் மற்றும் விமானப் போக்குவரத்துஅமைச்சகம் முதலியவற்றால் நடத்தப்படும் அனைத்து இந்திய ஹஜ் மாநாடு மற்றும் ஹஜ் தொடர்பான கூட்டங்களில் ஹஜ் குழு அலுவலர்கள் க;கலந்து கொள்வதற்கான பயணப்படி மற்றும் தினப்படி செலவினத்தையும் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு செய்கிறது. மேலும், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு சீரிய முறையில் செயல்பட தொடரா செலவினங்களில் கணினி வழங்குதல் அல்லது பிற உபகரணங்களை அளிக்கவும் தமிழ்நாடு அரசு மானியங்களை அளிக்கிறது.

## மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் மற்றும் முகவரி:

செயலாளர் மற்றும் செயல் அலுவலர்,
தமிழ்நாடு மணிலா ஹஜ் குழு,
மூன்றாவது மாடி, ரோஸி டவர்,
13, மகாத்மா காந்தி சாலை, (நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை),
சென்னை – 600 034.

| | | |
|---|---|---|
| தொலைபேசி எண் | : | 044–28252519 / 28227617 |
| மின்அஞ்சல் | : | tnshc.chennai@gmail.com |
| இணையதளம் | : | hajjtn.com |

**தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் தகவல்கள் பெற கீழ்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் :-**

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் /<br>நிர்வாக அலுவலர்,<br>தமிழ்நாடு மாநில ஹஜ் குழு,<br>மூன்றாவது மாடி, ரோஸி டவர்,<br>3, மகாத்மா காந்தி சாலை, (நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை),<br>சென்னை–600 034. | மேல் முறையீட்டு அலுவலர் /<br>செயலாளர் மற்றும் செயல் அலுவலர்,<br>தமிழ்நாடு மாநில ஹஜ் குழு,<br>மூன்றாவது மாடி, ரோஸி டவர்,<br>3, மகாத்மா காந்தி சாலை, (நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை),<br>சென்னை–600 034. |

# ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் நலக்கல்வி உதவித் திட்டங்கள்

## PRE - MATRIC SCHOLARSHIP

**பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டங்கள்**

Pre – Matric Scholarship எனப்படும் கல்வி உதவித் தொகை முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் சிறுபான்மை சமுதாய மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுவதாகும்.

**தகுதிகள் :**

**Pre - Matric Scholarship பெற கீழ்க்காணும் நிபந்தனைகள் பூர்த்தி செய்ய வேண்டும்**

1. பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு அனைத்து வகையிலும் கிட்டும் **ஆண்டு வருமானம் ஒரு லட்சம் ரூபாய்க்கு** மிகாமல் இருக்க வேண்டும்.
2. மாணவ / மாணவியர் அரசு பள்ளிக்கூடம் / தனியார் அல்லது கல்வி நிறுவனம் /மாநில அரசு மற்றும் Pre – Matric Scholarship அனுமதி பெற்ற பள்ளிக் கூடங்களில் படிக்க வேண்டும்.
3. ஆண்டுத் தேர்வுகளில் **50 சதவிகிதத்திற்கும் குறையாத மதிப்பெண்கள்** பெறும் மாணவ / மாணவியருக்கு Pre – Matric Scholarship தொடர்ந்து வழங்கப்படும்.
4. இந்த திட்டத்தின் கீழ் பயனடையும் மாணவ / மாணவியர் இதே காரணத்திற்காக **அரசின் வேறு எந்த திட்டத்தில்** வழங்கப்படும் பயனையும் அடைய முடியாது.

**உரிமை யாருக்கு (Entitlement)**

**கல்வி உதவித் தொகை விபரம் :**

**இத்திட்டத்தின் கீழ் பின்வரும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகின்றன**

1) 1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பள்ளி நுழைவு சேர்ப்பு கட்டணமாக ஆண்டுக்கு ரூ.500/– வழங்கப்படும். விடுதிகளில் தங்கி படிப்போருக்கு தினசரி வந்து போய் படிப்போருக்கும் இதே தொகையே வழங்கப்படும்.

2) 6–ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி கற்பித்தல் கட்டணமாக (Tution Fee) விடுதியில் தங்கி படித்தால் மாதம் ரூபாய் 350 வீதம் அதிகபட்சம் ரூபாய் 3500 வழங்கப்படும்.

3) 1–ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை மாணவ பராமரிப்பு செலவுக்காக (Maintenance allowance) ஒவ்வோர் கல்வி ஆண்டிற்கும் உட்பட்ட 10 மாதங்களுக்கு ஒவ்வோர் மாணவ மாணவியருக்கும் மாதம் தோறும் ரூபாய் 100 வழங்கப்படும்.

4) 6ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவ/ மாணவியர்களுக்கு பராமரிப்பு செலவாக மாதந்தோறும் தங்கி பயில்வோருக்கு மாதம் ரூபாய் 600, தினந்தோறும் வந்து போய் படிப்போருக்கு ரூபாய் 100 வழங்கப்படும்.

30% உதவி தொகை மாணவியர்க்கு முன்னுரிமை ஒதுக்கீடு செய்யப்படுகிறது

- Pre–matric கல்வி தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை ஆன்–லைன் (online) மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.
- இதற்கான அறிவிப்பு வழக்கமாக மாநில அரசு / யூனியன் பிரதேசங்களால் ஜூலை மாதம் வெளியிடப்படுகிறது.

- 2021–22 ஆண்டிற்கான அறிவிப்பு ஆகஸ்ட் 18ஆம் நாள் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க கடைசி நாள் நவம்பர் 15 ஆகும்.

வருட வருமானம் குறித்த அறிக்கை கீழ்காணும் முறைப்படி பெற்றோர் / பாதுகாவலர் வருவாய் துறையிடம் Revenue Dept. சான்றிதழ் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். பெற்றோர் / பாதுகாவலர் பணிசெய்வோராக இருந்தால், வேலை கொடுத்தவர்களிடமிருந்து வருமான சான்றிதழ் வாங்கி இணைக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை :**

1 மற்றும் 10–ம் வகுப்பு (ஆன்–லைன் (Online) மூலமாக விண்ணப்பித்தல்)

1 மற்றும் 10–ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் 2015–16 ஆம் ஆண்டு முதல் (www. scholarships.gov.in.) என்ற இணையதள முகவரியில் வடிவமைக்கப்பட்டுள்ள ஆன்–லைன் (Online) விண்ணப்பம் மூலமே விண்ணப்பிக்க வேண்டும். இதரமுறைகளில் விண்ணப்பித்தால் கண்டிப்பாக ஏற்கப்படாது.

மாணவ,மாணவியர் ஆன்–லைன் (Online) மூலம் பதிவு செய்த கல்வி உதவித் தொகை படிவத்தை படியிறக்கம் செய்து அத்துடன் மதிப்பெண் சான்றிதழ், சாதி சான்றிதழ், வருமானச் சான்றிதழ், நிரந்தர (ம) தற்போதைய முகவரிக்கான ஆதாரம். கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது, ஆதார் எண், வங்கிக் கணக்கு எண். (A/c. No.) IFS Code அடங்கிய வங்கி பாஸ் புத்தகத்தின் நகல் ஆகியவற்றின் நகல்களை கல்வி நிலையங்களிலேயே உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

**கல்வி நிலையங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் :**

**அ) 1 முதல் 8-ஆம் வகுப்பு வரையிலான படிப்புகளுக்கான விண்ணப்பங்கள்**

பள்ளி முதல்வர்கள் / தலைமையாசிரியர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து, மேற்கண்ட நிபந்தனைகளின்படி சரியாக உள்ளதென திருப்தியடைந்த பின்னர் புதியது மற்றும் புதுப்பித்தல் இனங்களுக்கான கேட்பு பட்டியல்களை குறிப்பிட்ட படிவத்தில் தயார் செய்து அதற்கான குறுந்தகட்டுடன் (CD) தங்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

**ஆ) 9 முதல் 10 ஆம் வகுப்பு வரை விண்ணப்பங்கள்**

தலைமை ஆசிரியர் / முதல்வர்கள் தத்தம் கல்வி நிலையத்தின் பெயர் www.scholarships.gov.in இணையதளத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். இல்லையெனில், உடன் தொடர்புடைய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களை அணுக வேண்டும்.

தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள்/மாணவ, மாணவியர்கள் ஆன்லைன் மூலம் பதிவு செய்து, அனைத்து இணைப்புகளுடன் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை தணிக்கைக்காக கல்வி நிலையத்தின் பாதுகாப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் ஆன்லைன் வழியே பூர்த்தி செய்யப்பட்ட புதியது / புதுப்பித்த விண்ணப்பப் படிவங்களை நெறிமுறைகளின்படி கூர்ந்தாய்வு செய்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர்களுக்கு ஆன்லைன்வழியேதவறாது அனுப்புதல் வேண்டும். மேலும் மாணவ, மாணவியரின் பரிந்துரை பட்டியலை (Claim Sheet) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் கொடுக்க வேண்டும்.

**வங்கி எண் / IFSC Code மற்றும் பெயர் விவரங்கள் சரியாக அளிக்காத பட்சத்தில் ஒப்புவிக்கப்படும் உதவித்தொகை மாணவ, மாணவியர்களின் வங்கிக் கணக்கில் செலுத்த இயலாத நிலை ஏற்படும்.**

**கால அட்டவணை :**

ஒவ்வொரு கல்வி ஆண்டின் ஆரம்பத்திலும், புதிய புதுப்பித்தல் விண்ணப்பங்களை மாணவ, மாணவியர் கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டிய காலக்கெடு, கல்வி நிலையங்கள், உதவித் தொகைக்கான கேட்புப் பட்டியல்களை (Claim Format) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவல கத்திற்கு அனுப்ப வேண்டிய காலக்கெடு போன்றவற்றை குறிப்பிட்டு விரிவான கால அட்ட வணை பத்திரிகைகளில் சிறுபான்மையினர் நல ஆணையர் அலுவலகம் மூலமாக விளம்பரம் செய்யப்படும். மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக பத்திரிக்கை செய்தி வாயிலாகவும் தெரியப்படுத்தப்படும்.

## பட்டயம், பள்ளி இறுதிப்படிப்பு, பட்டம், பட்ட மேற்படிப்புகளுக்கான கல்வி உதவித்தொகை

# POST MATRIC SCHOLARSHIP

Post – Matric Scholarship எனப்படும் கல்வி உதவித்தொகை சிறுபான்மையினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 11ஆம் வகுப்பு தொடங்கி முனைவர் பட்டம் பெறும் வரை வழங்கப்படுகிறது.

தொழில்நுட்பம் (Technical) மற்றும் தொழில் பயிற்சி (Vocational) பட்டயக் கல்வி பயில்வோருக்கும் இந்தக் கல்வி உதவித்தொகை உண்டு.

**தகுதி :**

**Post - Matric Scholarship**

**கல்வி உதவித்தொகை பெற தகுதியுடையவருக்கான நிபந்தனைகள்:**

1. பெற்றோர் / காப்பாளரின் அனைத்து வகையிலான ஆண்டு வருமானம் ரூபாய் 2 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
2. அரசு பள்ளி/கல்லூரி / பல்கலைக்கழகம்/அங்கீகாரமுடைய அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் / ITI எனப்படும் தொழிற்பயிற்சி கல்வி மையங்கள் 11 மற்றும் 12 வகுப்புகளில் தொழில் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி / ITC எனப்படும் தொழிற்பயிற்சி மையங்கள் (தொழில் பயிற்சிக்கான தேசிய குழுவுடன் இணைக்கப் பட்டிருக்க வேண்டும்) ஆகியவற்றில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இந்த கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.
3. 50 சதவிகிதத்திற்கும் குறையாத மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியருக்கும் முந்தைய கல்வி ஆண்டின் இறுதி தேர்வுக்கு இணையான தகுதி பெறுவோர்க்கும் இந்த கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.
4. இத்திட்டத்தின் கீழ் பயனடையும் மாணவ/மாணவியர் இதே நோக்கத்திற்காக அரசாங்கத்தின் வேறு எந்த திட்டத்தின் கீழும் பயனடைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**கல்வி உதவித்தொகை விபரம் :**

**இத்திட்டத்தின் கீழ் மாணவ / மாணவியருக்கு கீழ்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன:**

1) 11 மற்றும் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவியருக்கு சேர்க்கை மற்றும் கல்வி கட்டணமாக வருடத்திற்கு அதிகபட்சம் ரூபாய் 7,000 வழங்கப்படும். வந்து பயில்வோருக்கும், தங்கி பயில்வோருக்கும் இதே தொகை வழங்கப்படும்.

2) தொழில்மற்றும் தொழில் நுட்ப படிப்புகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்புக்கான பாடம் பயில்வோருக்கு சேர்க்கை மற்றும் கல்வி கட்டணமாக வருடத்திற்கு அதிகபட்சம் ரூபாய் 10,000 வழங்கப்படும். வந்து பயில்வோருக்கும், தங்கி பயில்வோருக்கும் இதே தொகை வழங்கப்படும்.

3) 11 மற்றும் 12ஆம் வகுப்பு தொழில் மற்றும் தொழில் நுட்ப கல்வியில் இதே மட்டத்தில் பயிலும் மாணவ / மாணவியருக்கான பராமரிப்பு செலவுக்கு மாத தொகையாக தங்கி பயில்வோருக்கு ரூபாய் 380, வந்து பயில்வோருக்கு ரூபாய் 320 வழங்கப்படுகிறது.

4) இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பில் தொழில் மற்றும் தொழில் நுட்ப கல்வி பயிலும் மாணவ / மாணவியருக்கு மாதந்தோறும் பராமரிப்பு செலவாக தங்கி பயில்வோருக்கு ரூபாய் 570, வந்து பயில்வோருக்கு ரூபாய் 300 வழங்கப்படுகிறது.

5) இளமுனைவர் (எம்.ஃபில்) மற்றும் முனைவர் (பிஎச்டி) பயில்வோருக்கு தங்கி பயில்வோருக்கு ரூபாய் 1200, வந்து பயில்வோருக்கு ரூபாய் 550 மாதந்தோறும் வழங்கப்படுகிறது. (பல்கலைக்கழகம் மற்றும் இதர அமைப்புகளிடம் உதவித்தொகை பெறாதவர்களாக இருக்க வேண்டும்.

**மாணவியருக்கு 30% உதவி தொகை உள் ஒதுக்கீடாக ஒதுக்கப்படுகிறது.**

- Post-matric Scholarship-க்கு விண்ண ப்பிக்க சிறுபான்மை நலத்துறை அமைச்சகத்தின் www.minorityaffairs.gov.in என்ற வலைதளத்திற்கு செல்ல வேண்டும். இணைய தள விண்ணப்பத்தை www.scholarships.gov.in க்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும்.
- மாணவர்கள் பள்ளி முதல்வர் மற்றும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் அல்லது உங்கள் மாவட்டத்தில் சிறுபான்மையினருக்கான பொறுப்பிலுள்ள அலுவலரை தொடர்பு கொள்ளவும்.
- இதற்கான விளம்பரம் வழக்கமாக மாநில அரசு / யூனியன் அரசுகளால் ஜூலை மாதம் வெளியிடப்படுகின்றன.

**விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள் :**

1) பத்தி 11ல் நிரப்பப்பட்டிருப்பதைப் போன்ற சான்றொப்பமிடப்பட்ட (Attested) கல்வித்தகுதி சான்றிதழ்கள் (புதுப்பிக்கும் விண்ணப்பத்துடன் சான்றிதழ் இணைக்க தேவையில்லை.)

2) நீதித்துறை அல்லாத முத்திரைத்தாளில் வருமானம் குறித்த விபரங்களை வாக்குமூலமாக கொடுக்க வேண்டும். மேலும் வேலை கொடுப்பவரிடமிருந்து வருமானத்திற்கான சான்றிதழ் பெற்று இணைக்க வேண்டும்.

3) நிரந்தர முகவரிக்கான ஆதாரம் (முகவரி மாற்றம் இல்லை யென்றால் புதுப்பிக்கும் விண்ணப்பத்திற்கு முகவரிக்கான ஆதாரம் தேவையில்லை)

**உறுதிமொழி :**

1) மேலே சொன்ன தகவல்கள் அனைத்தும் சரியென உறுதி கூறுகிறேன்.

2) வேறு எந்த வகையிலும் இதே காரணத்திற்கான எந்தவொரு கல்வி உதவித்தொகையும் பெறவில்லை.

3) Merit-cum-means அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கான முறைகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக் கொள்கிறேன்.

4) சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஆணையத்திற்கு நான் கொடுக்கும் தகவல்கள் பொய்யானவைகள் என தெரியவந்து அது உண்மையென நிருபிக்கப்படும் பட்சத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட கல்வி உதவித்தொகையை ரத்து செய்யவும் எனக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த கல்வி தொகைகள் அனைத்தையும் நான் திருப்பிக் கொடுக்கவும் அல்லது என்னிடம் திரும்ப பெறவும் சட்டப்படியான நடவடிக்கைக்கும் எந்தவொரு சூழ்நிலையிலும் ஆளாவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன்.

## தகுதி மற்றும் பொருளாதார (Merit-Cum- Means) அடிப்படையில் தொழிற் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி உதவித்தொகை :

தகுதி மற்றும் பொருளாதார அடிப்படையிலான கல்வி உதவித்தொகை சிறுபான்மை சமூகத்தை சார்ந்த மாணவ / மாணவியர்கள், தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்வியில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளுக்காக வழங்கப்படுகிறது. தகுதி பெற்ற கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிக்க வேண்டும்.

### தகுதி :

தகுதி மற்றும் பொருளாதார அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெற தேவையான தகுதிகள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றது.

1) பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் அனைத்து வழிகளிலும் ரூபாய் இரண்டரை இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

2) மாணவர்கள் மேல்நிலை பட்டப்படிப்புகளில் **50 சதவீதத் திற்கும் குறையாமல் மதிப்பெண்கள்** பெற்றிருக்க வேண்டும்.

### கல்வி உதவித்தொகை விபரம் :

இத்திட்டத்தின் மாணவ / மாணவியருக்கு கீழ்வரும் கல்வி உதவித்தொகை உதவிகள் வழங்கப்படும்.

1. பராமரிப்பு செலவுக்கு உதவித்தொகையாக தங்கி பயில்வோருக்கு ரூபாய் 10,000, வந்து பயில்வோருக்கு ரூபாய் 5,000 ஒரு வருடத்திற்கு (10 மாதத்திற்கு மட்டும்) வழங்கப்படுகிறது.
2. இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினர் அமைச்சகம் பட்டிய லிட்ட 85 கல்வி நிறுவனங்களுக்கு, செலவு செய்த தொகை முழுவதும் திருப்பிக் கொடுக்கப்படும். மற்ற கல்வி நிறுவனங்களில் படிப்பவர்களுக்கு வருடத்திற்கு ரூபாய் 25,000/– ரூபாய் அல்லது அசல் தொகை வழங்கப்படும். தங்கி பயில்வோருக்கும், வந்து பயில்வோ ருக்கும் வழங்கப்படும். 30% உதவித்தொகை மாணவிகளுக்கு உள் ஒதுக்கீடு செய்யப்படும்.

- Merit–cum–means கல்வி உதவித்தொகை பெற www.scholarships.gov.in National Scholarship Portal (NSP) என்ற இணைய தளத்தில் விண்ணப்பிக்கலாம்.
- இதற்கான விளம்பரத்தை வழக்கமாக சம்பந்தப்பட்ட மாநில அரசு வெளியிடும்.

### விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள் :

1) பத்தி 11ல் நிரப்பப்பட்டிருப்பதைப் போன்ற சான்றொப்ப மிடப்பட்ட (Attested) கல்வித்தகுதி சான்றிதழ்கள் (புதுப்பிக்கும் விண்ணப்பத்துடன் சான்றிதழ் இணைக்க தேவையில்லை.)

2) நீதித்துறை அல்லாத முத்திரைத்தாளில் வருமானம் குறித்த விபரங்களை வாக்குமூலமாக கொடுக்க வேண்டும். மேலும் வேலை கொடுப்பவரிடமிருந்து வருமானத்திற்கான சான்றிதழ் பெற்று இணைக்க வேண்டும்.

3) நிரந்தர முகவரிக்கான ஆதாரம் (முகவரி மாற்றம் இல்லையென்றால் புதுப்பிக்கும் விண்ணப்பத்திற்கு முகவரிக்கான ஆதாரம் தேவையில்லை)

4) ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ஆதார் அட்டை எண், வங்கிக் கணக்கு, IFCS Code, ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

### உறுதிமொழி :

1) மேலே சொன்ன தகவல்கள் அனைத்தும் சரியென உறுதி கூறுகிறேன்.

2) வேறு எந்த வகையிலும் இதே காரணத்திற்கான எந்தவொரு கல்வி உதவித்தொகையும் பெறவில்லை.

3) Merit–cum–means அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கான முறைகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக் கொள்கிறேன்.

4) சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஆணையத்திற்கு நான் கொடுக்கும் தகவல்கள் பொய்யானவைகள் என தெரியவந்து அது உண்மையென நிருபிக்கப்படும் பட்சத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட கல்வி உதவித்தொகையை ரத்து செய்யவும் எனக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த கல்வி தொகைகள் அனைத்தையும் நான் திருப்பிக் கொடுக்கவும் அல்லது என்னிடம் திரும்ப பெறவும் சட்டப்படியான நடவடிக்கைக்கும் எந்தவொரு சூழ்நிலையிலும் ஆளாவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன்.

## தகுதி அளவுகோல் Eligibility Creteria

1) போட்டி தேர்வுகள் அடிப்படையில் அங்கீகாரமுடைய கல்லூரியில் தொழில் / தொழில் நுட்ப படிப்புகளில் சேர்ந்திருக்க வேண்டும்.

2) அங்கீகாரமுடைய கல்லூரிகளில் போட்டித் தேர்வுகள் அல்லாமல் தொழில் / தொழில் நுட்ப படிப்புகளில் சேர்ந்திருப்பவர்களுக்கும் கல்வி உதவித்தொகை பெற தகுதி உண்டு. எவ்வாறு இருப்பினும் மாணவ / மாணவியர் **50 சதவிகிதத்துக்குக் குறையாமல்** மேல்நிலை / பட்டப் படிப்புகளில் **மதிப்பெண்கள்** பெற்றிருக்க வேண்டும். கண்டிப்பாக தகுதியின் அடிப்படையில் மட்டும் தான் இத்திட்டத்தின் கீழ் மாணவ / மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3) இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை பெறுவோர் வேறு வகையான கல்வி உதவித்தொகை / ஊதியம் (Stipend) பெறக் கூடாது.

4) பயனாளி / பெற்றோர் / காப்பாளர் ஆகியோரின் குடும்ப வருமானம் அனைத்து வகையிலும் சேர்த்து ஆண்டுக்கு ரூபாய் 2, 50,000 /த்தை மிகாமல் இருக்க வேண்டும்.

5) ஒரு குறிப்பிட்ட மாநிலம் / யூனியன் பிரதேசம் சார்ந்த ஒரு மாணவர் அந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தின் ஒதுக்கீட்டின் கீழ் அவர் வாழும் இடம் மற்றும் படிப்பை பொருட்படுத்தாமல் கல்வி உதவித்தொகை பெற தகுதி உண்டு.

## விண்ணப்பிக்கும் முறை :

இத்திட்டத்தின் **National Scholarship Portal** என்பதன் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. Online மூலம் தான் அனைத்து மாணவ / மாணவியரும் கண்டிப்பாக விண்ணப்பிக்க வேண்டும். சிறுபான்மையினர் அமைச்சகத்தின் கல்வி உதவித்தொகைக்கான இணையதள முகவரி www.scholarships.gov.in மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

ரூபாய் 50,000–க்கும் மிகாமல் கல்வி உதவித் தொகை பெறுபவர்கள் Online–ல் விண்ணப்பித்த பிறகு விண்ணப்பத்தை பிரிண்ட் எடுத்து அதனை மாணவ / மாணவியர் தொழில் / தொழில்நுட்ப கல்வி பயிலும் கல்வி நிறுவனங்கள் மூலமாக கல்வி நிறுவனங்கள் / கல்லூரிகள் அல்லது சிறுபான்மையினர் நலனுக்காக மாநில அரசு / யூனியன் பிரதேசம் அமைத்துள்ள துறைகளிடம் தாக்கல் செய்ய வேண்டும். மாணவர்கள் அவர்கள் சார்ந்த மாநில அரசு களிடம் தான் விண்ணப்பங்களை கொடுக்க வேண்டும். அவர்கள் பயிலும் கல்வி நிறுவனங்கள் இருக்கும் மாநில அரசுகளிடம் கொடுக்க தேவையில்லை.

## பேகம் ஹஜ்ரத் மகால் தேசிய கல்வி உதவித்தொகை

## (Begum Hajrat Mahal National Scholarship Scheme)

சிறுபான்மையின மாணவிகள் அதிக மதிப்பெண் பெற்று பொருளாதார வசதியின்மையால் கல்வியைத் தொடர முடியாத நிலையைக் களையும் வகையில் உதவித்தொகை வழங்கும் திட்டமாகும்.

## தகுதி :

9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்கள் முந்தைய வகுப்புகளில் **50 சதவிகித மதிப்பெண்கள்** பெற்றிருக்க வேண்டும்.

குடும்ப ஆண்டு வருமானம் **ரூபாய் 2 லட்சத்திற்கு** மிகாமல் இருக்க வேண்டும்..

9 ஆம் வகுப்பு (ம) 10 ஆம் வகுப்பு மாணவியர்களுக்கு ஆண்டுக்கு **ரூ.5000/-** வீதமும், 11 (ம) 12-ம் வகுப்பு மாணவியர்களுக்கு ஆண்டுக்கு **ரூ. 6000 /-** வீதமும் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு https://scholorship-maef.org என்ற இணையதளத்தில் அறியலாம்.

# நய சவேரா இலவச பயிற்சியும் இணைந்த திட்டமும்

சிறுபான்மையினர் சமூகத்தைச் சார்ந்த மாணவ / மாணவிகளுக்கு, அறிவையும் திறமையையும் பெருக்கிக் கொள்வதற்கும் போட்டித்தேர்வுகள் / தேர்வுமுறைகள் மூலமாக அரசு / தனியார் துறைகளில் வேலை வாய்ப்பு பெறும் தகுதியடையவும் புகழ்மிக்க கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கும் உதவும் வகையில் இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவி தொகை வழங்கப்படுகிறது.

## தகுதி :

இத்திட்டத்தின் கீழ் உதவி தொகை பெற கீழ்காணும் அம்சங்கள் அவசியம்

1) குடும்ப வருமானம் அனைத்து வகைகளிலும் சேர்த்து வருடத்திற்கு ரூபாய் 3 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
2) விரும்பிய படிப்புகள் / ஆளெடுப்பு தேர்வுகள் (Recruitment Examinations) ஆகியவற்றிற்கு தகுதி பெற பரிந்துரைக்கப்பட்டதகுதி தேர்வு மதிப்பெண்களில் தேவையான சதவிகிதத்தை பெற வேண்டும்.
3) ஒரு குறிப்பிட்ட மாணவ / மாணவி இத்திட்டத்தின் கீழ் ஒரேயரு முறை கற்பித்தல் (Coaching) செயல்முறை பயிற்சி (Training) பெற முடியும். மாணவ / மாணவியர் போட்டி தேர்வுகளில் பங்கேற்க எண்ணிக்கை தடை இல்லை.
4) Coaching / Training ல் 30 சதவிகிதம் பெண்களுக்கு என உள் ஒதுக்கீடு வழங்கப்படும்.

**உரிமை யாருக்கு (Entitlement)**

இத்திட்டத்தின் கீழ் மாணவ / மாணவியருக்கு கீழ் காணப்படும் உதவிகள் வழங்கப்படுகின்றன

(1) Group – A Services களுக்கு கற்பித்தல் கட்டணம் (Coaching fee) கல்வி நிறுவனம் உறுதி செய்யும் அதிகப்பட்சமான ரூபாய் 2000, வெளியூர் மாணவ / மாணவியருக்கு மாதம் ரூபாய் 3000, உள்ளுர் மாணவ / மாணவியருக்கு மாதம் ரூபாய் 1500 மாதந்தோறும் ஊக்கத்தொகை / உதவித்தொகையாக வழங்கப்படும்.

(2) Group – B Services களுக்கு கல்வி நிறுவனங்களால் இறுதி செய்யப்படும் கற்பித்தல் கட்டணம் அதிகபட்சமான ரூபாய் 2000, வெளியூர் மாணவ /மாணவியருக்கு மாதம் ரூபாய் 3000, உள்ளுர் மாணவ / மாணவியருக்கு மாதம் ரூபாய் 1500 மாதந் தோறும் ஊக்கத்தொகை / உதவித்தொகையாக வழங்கப்படும்.

(3) Group – C Services களுக்கு கல்வி நிறுவனங்களால் இறுதி செய்யப்படும். கற்பித்தல் கட்டணம் அதிகபட்சமான ரூபாய் 1500, வெளியூர் மாணவ / மாணவியருக்கு மாதம் ரூபாய் 3000, உள்ளுர் மாணவ / மாணவியருக்கு மாதம் ரூபாய் 1500 மாதந்தோறும் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

(4) தொழில் / தொழில் நுட்ப கல்விகளுக்கான நுழைவு தேர்வுக்கு கற்பித்தல் கட்டணம் கல்வி நிறுவனங்கள் இறுதி செய்யும் அதிக பட்சமான ரூபாய் 2000, வெளியூர் மாணவ / மாணவியருக்கு மாதம் ரூபாய் 3000, உள்ளூர் மாணவ / மாணவியருக்கு மாதம் ரூபாய் 1500 மாதந்தோறும் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

(5) தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகள் பெற பயிற்சிக் கான கற்பித்தல் கட்டணமாக கல்வி நிறுவனங்கள் முடிவு செய்யும். அதிகபட்சமாக ரூபாய் 2000, வெளியூர் மாணவ / மாணவி யருக்கு மாதம் ரூபாய் 3000, உள்ளூர் மாணவ / மாணவியருக்கு மாதம் ரூபாய் 1500 மாதந்தோறும் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

2013–14ல் இருந்து சிறுபான்மை சமூக மாணவ / மாணவியர் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் அறிவியல் படிப்பில் (இயற்பியல், வேதியல், உயிரியல் மற்றும் / அல்லது கணிதம்) ஆர்வம் கொடுத்து படிப்பதற்காக இத்திட்டத்துடன் புதியதொரு பகுதி இணைக்கப் பட்டிருக்கிறது.

1) இத்திட்டத்தின் புதிய தொகுதி தமிழ்நாடு, பீகார், உத்திரபிரதேசம், அஸ்ஸாம், மேற்கு வங்கம், மகாராஷ்ட்ரம், கர்நாடகா, பஞ்சாப், டெல்லி என 9 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் அமல் படுத்தப்பட்டிருக்கிறது.

2) CBSE, ICSC, கல்விமுறைகள் உள்ளடக்கி அதிகப்படியான மாநிலங்கள் / யூனியன் பகுதிகள் மற்றும் இந்திய அரசு / மாநில அரசு / யூனியன் பிரதேசங்களின் அங்கீகாரம் பெற்ற பிற கல்வி வாரியங்கள் பின்வரும் ஆண்டுகளில் இத்திட்ட வழிகாட்டுதல்கள் படி இணைத்துக் கொள்ளப்படும். மேலும் நிதிகள் பெறவும் இயலும்.

3) தங்கியிருந்து கற்றல் / பயிற்சி எடுத்தல் திட்டத்திற்காக பல்கலைக்கழகம் / கல்வி தலைமை நிறுவனம் மாணவ / மாணவி யர்களுக்கு தனித்தனியாக விடுதி வசதிகளுடன் அதிக எண்ணிக் கையில் அறிவியல் துறை ஆசிரியர்களையும் கொண்டிருக்கும் கல்வி நிறுவனங்கள் / பள்ளிகள் / கல்லூரிகளில் இருந்து தேர்வு குழுவானது கல்வி நிறுவனங்கள் / பள்ளிகள் / கல்லூரிகளை தேர்வு செய்யும்.

4) மாணவ–மாணவியர் தேர்வு, தகுதியின் அடிப்படையில் அமையும். தேர்வாகும் மாணவ / மாணவியர் இத்திட்டத்தின் கீழ் வரும் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

5) தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ / மாணவியருக்கு இந்த தொகுதியின் கீழ் வருடத்திற்கு ரூ. 1,00,000/– நிதி உதவியாக வழங்கப்படும்.

- இத்திட்டத்தின் தகவல்களை சிறுபான்மை நலத்துறை அமைச்சகம் விளம்பரப்படுத்தும். ஒவ்வோர் ஆண்டும் கற்பித்தல் / பயற்சியளித்தல் (Coaching/Training) மையங்களிடமிருந்து பரிந்துரைகள்வரவேற்கப்படும்.இத்திட்டத்தின்கீழ்விண்ணப்பிக்ககற்பித்தல்/பயற்சியளிக்கும் மையங்கள் சிறுபான்மை அமைச்சக இணையதள முகவரியான minorityaffairs.gov.in–க்கு போக வேண்டும்.

- சிறுபான்மை அமைச்சகம் பட்டியலிட்டுள்ள பயிற்சி மையங்களின் தகவல்களை பெறவும் மாணவ மாணவியர்கள் சிறுபான்மை அமைச்சக இணையதள முகவரியான minorityaffairs.gov.in–க்கு போக வேண்டும். அம்மையங்களில் மாணவ / மாணவியர்கள் சேர்ந்து கொள்ளலாம்.

## மௌலான ஆசாத் கல்வி அறக்கட்டளை மூலம் கல்வி நிறுவனங்கள்

**(Moulana Azadh Educational Foundation)**

மத்திய அரசின் நிறுவனமான மௌலானா ஆசாத் கல்வி அறக்கட்டளையின் மூலம் கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளிலுள்ள பள்ளிகள், ஐ.டி.ஐ.,

பாலிடெக்னிக், ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கு நிதி உதவி வழங்குகிறது. அனைத்து கட்டுமானங்கள் மற்றும் விரிவாக்கப் பணிகள், விடுதி கட்டடங்கள் ஆகியவற்றிற்கு கட்டுமானத்தின் தன்மைக்கேற்ப அதிகபட்சம் ரூபாய் 50 இலட்சம் நிதி வழங்கப்படும்.

இந்தத் திட்டத்திற்கு மே மாதம் முதல் செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் www.maef.nic.in. ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

## மத்திய அரசு உயர் பதவிக்கான புத்தெழுச்சி (NAI UDAAN) முதல்கட்ட தேர்வுகளை முடிப்பதற்கான திட்டம்

UPSC, SSC மற்றும் SPSC நடத்தும் தேர்வு முறைகளில் முதல்கட்ட தேர்வுகளை சிறுபான்மை சமூக மாணவ / மாணவியர்கள் முடித்தபின் முதன்மை தேர்வுக்கு தயாராகும் பொருட்டு வழங்கப்படும் நிதியுதவி திட்டம் தான் நயி உதான்.

- சிறுபான்மை சமூகத்தை சார்ந்த மாணவ / மாணவியர்கள் Union Public Service Commission (UPSC), Staff Selection Commission (SSC) State Public Service Commissions (SPSCs) ஆகியன நடத்தும் முதல் கட்ட தேர்வுகளில் (Prelims Examination) வெற்றி பெற்றபின் இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி வழங்குகிறது.
- மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வில் முதல் நிலையில் தேர்ச்சி பெற்றால் ஒரு இலட்சம் ரூபாயும், மாநில பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் அரசிதழ் பதிவு பெற்ற குடிமைப்பணி தேர்வில் முதல் நிலை தேர்ச்சியாளருக்கு ரூபாய் 50,000/–, பணியாளர் தேர்வாணையம் மூலம் பட்டதாரி நிலையில் அரசிதழ் பதிவு பெறாத பணிகளில் முதல்நிலை தேர்ச்சி ரூபாய் 25,000/, மத்திய அரசால் நேரடிப் பரிவர்த்தனை (DBT) மூலம் சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது.

குடும்பத்தில் ஒரு நபருக்கு ஒருமுறை மட்டுமே இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. பிற துறைகளில் இதற்கான உதவித் தொகை பெறவில்லை என்று உறுதி ஆவணம் (Affidavit) கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

www.naiudaan/moma.gov.in. இல் ஆன்லைன் விண்ணப்பிக்க வேண்டும். குடும்ப வருமானம் ரூபாய் எட்டு இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

## பதோ பர்தேஷ் - (Padho Pardesh) வெளிநாடுகளில் பயிலும் சிறுபான்மை சமூக மாணவ / மாணவியருக்கு கல்வி கடன்களில் வட்டி மானியம் வழங்கும் திட்டம்

### 1. அயல்நாட்டில் உயர்கல்வி

சிறுபான்மையின மாணவ / மாணவியர் அயல்நாடுகளில் பட்ட மேற்படிப்பு / ஆராய்ச்சி படிப்பு பயில்வதற்கு கல்விக்கடன் அதிகபட்சம் ரூபாய் 20 இலட்சம் வங்கிகள் (Scheduled Bank) மூலம் அளிப்பதாக கூறப்பட்டுள்ளது. வழங்கும் கடனுக்கான முழு வட்டித் தொகையை மானியமாக மத்திய அரசின் சிறுபான்மை–யின விவகார அமைச்சகத்தின் மூலம் வங்கிகளுக்கு வழங்குகிறது.

குடும்ப வருமானம் ரூபாய் 6 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். வெளிநாட்டு கல்வி நிறுவனத்தில் முதல் ஆண்டு சேர்ந்ததற்கான ஆவணங்களை இணைத்து www.minorityaffairs. gov. in–இல் விண்ணப்பிக்க வேண்டும்.

### 2. நோக்கம் (Objective)

சிறுபான்மை சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய, தகுதி வாய்ந்த மாணவ / மாணவியர்கள் வெளிநாடுகளுக்கு சென்று உயர்கல்வி பெறுவதற்கு வழங்கப்படும் **கடனுக்கு ஆகும் வட்டிக்கு மானியம்** வழங்குவது இத்திட்டத்தின் நோக்கம்.

### 3. எல்லை (Scope)

சிறுபான்மையினருக்கான தேசிய ஆணைய சட்டம் 1992ன் பிரிவு 2(c)ன்படி மத்திய அரசு வரையறுத்த சிறுபான்மை சமூகங்களை சார்ந்த மாணவ மாணவியருக்கு வட்டிக்கு மானியம் அளிக்கும் மத்திய அரசு திட்டம் (Central Sector Scheme).

வெளிநாடுகளில் இருக்கும் முதுகலை மற்றும் ஆராய்ச்சி அளவிலான அங்கீகாரம் பெற்ற கல்விகளில் வெளிநாடுகளில் சென்று படிப்பதற்கு வழங்கப்படும் கல்வி கடன்களின் மீதுள்ள வட்டியை காலம் தாழ்த்தி அடைப்பதற்காக வட்டிக்கு மானியம் என்ற திட்டத்தின் **கீழ் வட்டி மானியம்** வழங்கப்படுகிறது.

### 4. வட்டிக்கு மானியம் பெற நிபந்தனைகள்

### (Conditions for Interest Subsidy)

1) வெளிநாடுகளில் உயர்கல்வி படிப்போர்க்கு மட்டும் இத் திட்டம் பொருந்தும். இந்திய வங்கிகள் கழகத்தின் (Indian Bank's Association) நடைமுறையில் இருக்கும் கல்விக்கடன் திட்டத்துடன் வட்டி மானியம் இணைக்கப்படும்.

   முதுகலை (Masters), இளமுனைவர் (M.Phil), முனைவர் (Ph.D) அளவிலான படிப்புகளில் சேர்ந்துள்ள மாணவ / மாணவியருக்கு மட்டும் என இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2) இத்திட்டத்தின் கீழ் வட்டி மானியம் தகுதியுடைய மாணவ / மாணவியருக்கு ஒரே ஒருமுறை முதுகலை அல்லது முனைவர் படிப்புக்கு மட்டும் வழங்கப்படும். இடையிலேயே படிப்பை நிறுத்திய மாணவ / மாணவியருக்கும், ஒழுக்கம் அல்லது கல்வி அடிப்படையில் கல்வி நிறுவனங்களிலிருந்து வெளியேறிய மாணவ / மாணவியருக்கும் எந்த காரணத்தைக் கொண்டும் வட்டி மானியம் வழங்கப்படாது.

3) வங்கி கடனை திருப்பிச் செலுத்தாத காலத்தில், வட்டியை முன் செலுத்தும் வங்கிகள் வழங்கும் வட்டி விகிதத்தில் உள்ள, ஒரு சதவீத வட்டி குறைப்பின் பலன் மாணவ / மாணவியருக்கு மட வழங்கப்படும்.

4) இத்திட்டத்தின் ஏதேனும் ஒரு நிபந்தனையை மாணவ / மாணவியர் மீறினால் மானியம் உடனடியாக நிறுத்தப்படும்.

5) தவறான தகவல்கள் / சான்றிதழ்கள் கொடுத்து மாணவ / மாணவியர்கள் மானியம் பெற்றிருப்பதை கண்டுபிடித்தால் உடனடியாக மானியம் திரும்பப் பெறப்படும் / ரத்து செய்யப்படும். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட மானியம் கூட்டு வட்டியுடன் வசூலிக் கப்படும். மேலும் சட்டப்படி குற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

6) கடன் நிலுவையில் உள்ள காலத்தில் மாணவ / மாணவியர் இந்திய குடியுரிமையை ரத்து செய்து கொண்டால் இத்திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கு வட்டி மானியம் வழங்கப்படாது.

7) உரிமை அளிக்கப்பட்ட வங்கியானது சிறுபான்மை அமைச்ச கத்திடமிருந்து பெறப்பட்ட நிதி சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் தனியான கணக்கை பராமரித்து வரும். மேலும், இந்த கணக்கும் ஆவணங்களும் அமைச்சகத்தின் அதிகாரிகளால் ஆய்வு செய்து தணிக்கை செய்யப்படும். அல்லது அமைச்சகம் பரிந்துரைக்கும் ஏதேனும் ஒரு நிறுவனம் / மத்திய கணக்கு தணிக்கைத்துறை ஆய்வு செய்து தணிக்கை செய்யும்.

8) பொது நிதிச் சட்டங்கள் (GFR) விதிகளின் படி உரிமம் அளிக்கப்பட்ட வங்கி முந்தைய ஆண்டு நிதிகளை விடுவித்ததற்கான சான்றிதழ்களை அளித்த பிறகு இரண்டாம் ஆண்டுக்கான வட்டி மானியத் தொகை அவ்வங்கிக்கு வழங்கப்படும்.

**தகுதி :**

1) பத்தி 14–ல் குறிப்பிடப்பட்ட படிப்புகளில் வெளிநாடுகளில் முதுகலை இளமுனைவர், முனைவர் படிப்புகளில் மாணவ / மாணவியர் சேர்ந்திருக்க வேண்டும்.

2) மாணவ / மாணவியர் இந்த நோக்கத்திற்காக இந்திய கல்விக் கழகத்தின் (Indian Banks Association) கல்விக் கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற்றிருக்க வேண்டும்.

**வருமான உச்சவரம்பு :**

1) வேலையில் இருக்கும் அல்லது இல்லாமல் இருக்கும் மாணவ/ மாணவியர் அல்லது அவர்களது பெற்றோர் / பாதுகாவலர் ஆகியோரின் ஆண்டு வருமானம் அனைத்து வழிகளிலும் சேர்த்து ரூபாய் 8,00,000/–த்தை தாண்டக் கூடாது.

2) மாநில அரசு / யூனியன் பிரதேசத்தின் தகுதியுள்ள ஆணையத்திடமிருந்து வருமான சான்றிதழ் பெற்று தாக்கல் செய்ய வேண்டும்.

**பரிந்துரைக்கும் குழு :**

1) மாணவியருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

**வட்டிக்கான மானிய விகிதம் :**

1) இத்திட்டத்தின் கீழ் கல்விக் கடன்கள் பெற்றதற்காக மாணவ/ மாணவியர் செலுத்த வேண்டிய வட்டித் தொகையை படிக்கும் காலத்திற்கு (படிக்கும் காலத்துடன் கூடுதலாக ஒருவருடம் அல்லது வேலை கிடைத்த பின்னர் 6 மாதம் இவை இரண்டில் எது முந்துகிறதோ அதை இந்திய அரசு பொறுப்பு ஏற்கும். இந்திய வங்கிகள் கழகத்தின் கல்விக்கடன் திட்டத்தில் இது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

2) படிக்கும் காலம் முடிந்த பிறகு மீதமுள்ள கடனுக்கான வட்டியை சம்பந்தப்பட்ட மாணவ / மாணவியர் கட்ட வேண்டும். தற்போதுள்ள கல்விக் கடன் திட்டத்தின்படி நேரத்திற்கு நேரம் அமல்படுத்தப்படும்.

3) படிப்பு காலம் முடிந்த பிறகு மாணவ / மாணவியர்தான் அசலான தவணைகளையும் வட்டியையும் செலுத்த வேண்டும்.

**செயல்படுத்தும் நிறுவனங்கள் :**

உரிமம் பெற்ற வங்கியானது சிறுபான்மை நலத்துறை அமைச்சகத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி இத்திட்டத்தினை செயல்படுத்தும்.

**நிர்வாகச் செலவுகள் :**

1) இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் ஆண்டு நிதியிலிருந்து 3 சதவிகிதத்திற்கும் மிகாத தொகை நிர்வாகம் மற்றும் அதை சார்ந்த செலவுக்காக ஒதுக்கப்படும். கணிணி, அதன் பாகங்கள் உள்ளிட்ட அலுவலக உபகரணங்கள், விளம்பரங்கள் மற்றும் இதர வகைகளுக்கு அமைச்சகம் செலவிடும்.

2) சிறுபான்மை நலத்துறை அமைச்சகம் அனுமதி அளிக்கும் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் / அமைப்புகள் மூலம் இத்திட்டத் தினை கண்காணிக்கவும், கணக்கு பார்க்கவும் இந்த 3 சதவிகித நிதியிலிருந்து தான் செலவிடப்படும்.

**கற்போம் பொருள் ஈட்டுவோம் (Seekho Aur Kamao) :**

சிறுபான்மையின இளைஞர்களின் திறன் அறிவை மேம்படுத்தும் வகையில் அவர்களின் கல்வித் தகுதியை அடிப்படையாகக் கொண்டு சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் மத்திய அரசால் தெறிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சினை அளிப்பதாகும்.

**தகுதி :**

வயது வரம்பு 14 முதல் 35 வரையுள்ள சிறுபான்மை பிரிவைச் சார்ந்த ஆண்கள் (ம) பெண்கள் விண்ணப்பிக்கலாம். குறைந்த பட்சம் 5-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**விபரங்களுக்கு www.minorityoffairs.gov.in. தெரிந்துகொள்ளலாம்.**

**புதிய வெளிச்சம் (NAI ROSHINI) :**

இத்திட்டத்தின் நோக்கம் சிறுபான்மையின பெண்களுக்கு தன்னம்பிக்கை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல்,அப்பகுதியில் வசிக்கும் பிற சமூக மக்களிடையே கருத்து பரிமாற்றத்தை ஊக்கப்படுத்தும் விதமாகவும் அரசு பொது அலுவலகங்கள், வங்கிகளில் தன்னம்பிக்கை யுடனும், பொது அறிவுடனும் அணுகுவதற்கு ஏற்ற பயிற்சி¬யினை மைய அரசால் தேர்வு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படும். இத்திட்டம் தலைமைத்துவம், சுகாதாரம், தூய்மை பாரதம், நிதி அமைப்பு வாழ்க்கைத்திறன், டிஜிட்டல் முறை கல்வியறிவு, ஆலோசனை போன்ற இப்பயிற்சிககளை உள்ளடக்கியதாகும்.

**தகுதி :** குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 2.5 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். வயது வரம்பு 18 முதல் 35 வரை இருத்தல் வேண்டும்.

**உதவித் தொகை :** உறைவிடப்பள்ளியில் பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித் தொகை பிரதி மாதம் ரூபாய் 150/- ம் உறைவிடப்பள்ளியின்றி பயிற்சி பெறுபவர்களுக்கு ரூபாய் 100/- வீதமும் வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் மைய அரசால் தெரிவு செய்யப்படும் தொண்டு நிறுவனங்கள் மூலம் இப்பயிற்சிகள் வழங்கப்படும். விபரங்களுக்கு www.nairoshni/moma.gov.in தெரிந்துகொள்ளலாம்.

சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களில் உள்கட்மைப்பு வசதிகளை மேம்படுத்தும் (IDMI)

கல்வியில் பின்தங்கிய சிறுபான்மை மாணவியரின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வண்ணம் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உள்கட்டமைப்பு வசதிகளான வகுப்புறை, அறிவியல் கூடம், கணினி, அறை, நூலகம், கழிப்பறை, குடிநீர் வசதிகள், விடுதிகள் மற்றும் இதர அத்தியாவசிய தேவைகளை மேம்படுத்தும் திட்ட மதிப்பீட்டு தொகையில் 75 சதவிகிதம் மட்டும் அல்லது அதிகபட்சம் ரூபாய் 50 லட்சம் இதில் எது

குறைந்ததோ அத்தொகை சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

**உதவிப் பெறுவதற்கான தகுதிகள் :**

சிறுபான்மை கல்வி நிறுவனம் என்ற அந்தஸ்தை பெற்றிருக்க வேண்டும்.

அரசு உதவி பெறும் / உதவி பெறாத சிறுபான்மையினரீன் பள்ளிகள் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் இயங்கி மாணவர்கள் சேர்க்கை தொடர்ந்து நடைபெற்றிருக்க வேண்டும்.

விபரங்களுக்கு www.mhrd.gov.in தெரிந்துகொள்ளலாம்.

## சிறுபான்மையினர் பகுதிகள் மேம்பாட்டு திட்டம் :
## Pradhan Mantri Jan Vikas Karyakram

சிறுபான்மையின சமூகத்தினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் குடிநீர் வசதி, சாலை வசதிகள், கழிவறை வசதி, கான்கிரீட் வீடுகள் அமைத்தல், மின்சார வசதி ஏற்படுத்துதல் போன்ற அடிப்படை வசதிகள், திறன் வளர்ப்பு பயிற்சிகள் பின்தங்கிய சிறுபான்மையினர் வசிக்கும் பகுதிகளில் மேம்படுத்தப்படும்.

### தகுதிகள் :

இத்திட்டம் மக்கள் தொகை கணக்கெடுப்பின் (2011) படி அந்தந்த மாவட்டங்களில் சிறுபான்மையினர் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புறங்களில் 25 சத விகிதத்திற்கு குறையாமலும் கிராமப் புறங்களில் 50 சத விகிதத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

இத்திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான குழுவின் கருத்துக்களை மாநில அரசு பரிசீலித்து மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

### எங்கள் பாரம்பரியம் (Hamari Dharohar) :

சிறுபான்மையின சமூகங்களின் உயர்ந்த பாரம்பரிய மற்றும் கலாச்சாரங்களை பாதுகாக்க வேண்டும் என்ற சீரிய நோக்கில் மைய அரசு இத்திட்டத்தை துவக்கியுள்ளது. இத்திட்டத்தில் சிறுபான்மை கழகத்தினரின் இலக்கியங்கள் மற்றும் கலாச்சார ஆவணங்கள், சின்னங்கள் ஆகியவற்றை பேணிப் பாதுகாக்கும் வகையில் ஊக்குவிப்பு நடவடிக்கைகள், ஆராய்ச்சி மற்றும் அதன் வளர்ச்சி ஆகியவற்றை மேற்கொள்வதற்கு மத்திய அரசு 100 சத விகிதம் நிதியுதவி அளித்து செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் மாநில அரசின் தொல்லியல் துறை, சங்க பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்து குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் பாரம்பரிய சின்னங்களை பாதுகாக்கும் முறையில் அனுபவமுள்ள நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றின் மூலம் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். இந்நிறுவனங்களுக்கு மூன்று தவணைகளில் (40:40:20) என்ற விகிதத்தின் அடிப்படையில் நிதியாக விடுவிக்கப்படும். தவிர,

1) சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் முதுகலைப் பட்டப் படிப்பில் 50 சதவிகித மதிப்பெண்கள் பெற்று அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மேற்படி இனங்களில் ஆராய்ச்சி மேற்கொள்பவராக இருத்தல் வேண்டும்.
2) பல்கலைக் கழகங்களில் முழுநேர ஆராய்ச்சி படிப்பு பயிலுவதற்கு சேர்க்கை பெற்றிருத்தல் வேண்டும்.
3) 35 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.
4) விண்ணப்பதாரர்கள் மேற்படி ஆராய்ச்சிகளில் பங்கேற்பவர்களுக்கு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ரூபாய் 25,000 மூன்றாம் ஆண்டிற்கு ரூபாய் 28,000 உதவித் தொகை வழங்கப்படும்.

### மேலும் விபரங்களுக்கு

**மாநில அரசின் திட்டங்கள் : www.bcmbcmw.tn.gov.in_welfschemes.htm**

**ஒன்றிய அரசின் திட்டங்கள் : www.minorityaffairs.gov.in**

### மாவட்டங்கள்

மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், அலுவலகம்.

**தலைமை அலுவலகம் - சிறுபான்மையினர் நல இயக்குநர்,**
கலச மஹால் (பாரம்பரிய கட்டடம்) முதல் தளம்
சேப்பாக்கம், சென்னை – 5
தொலைபேசி எண். 044-28523544
(அனைத்து இ-சேவை மையங்கள்)

## அரசுசாரா அமைப்புகள் மூலம் மானியம் வழங்கும் திட்டம்

### மானிய நன்கொடை வழங்கும் திட்டம் :

கல்வியில் பின்தங்கியுள்ள சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கும் தொடக்கநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளிகள் / இளநிலை கல்லூரிகள் / தொழில்முறை கல்வி / தொழிற்கல்வி பயிற்சி நிலையங்கள் கல்வி நிறுவனங்களுக்கு அடிப்படையான கல்வி கட்டமைப்பு மற்றும் வசதிகளை வழங்கவும் மேம்படுத்தவும் அரசு சாரா அமைப்புகள் மூலமாக சிறுபான்மை விவகார அமைச்சகத்தின் துணை அமைப்பான மௌலானா ஆசாத் கல்வி நிறுவனத்தால் (MAEF) இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### தகுதியுடைய அமைப்புகள் :

1) சங்கங்கள் பதிவுச்சட்டம் / இந்திய அறக்கட்டளை சட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்டு 3 ஆண்டுகளாகி இருக்கும் சங்கங்கள் (Societies) / அறக்கட்டளைகள் (Trust).
2) தனிநபரின் ஆதாயத்திற்காக அல்லது தனிநபர்கள் குடும்பத்திற்காக நடத்தப்படும் சங்கங்கள் / அறக்கட்டளைகள் அல்லது தனி நபர்கள் / குடும்பத்தார் கட்டுப்படுத்தப்படும் சங்கங்கள் / அறக்கட்டளைகளுக்கு தகுதியில்லை.
3) அரசியல் கட்சிகளின் நலனுக்காக இயங்கும் சங்கங்கள் / அறக்கட்டளைகளுக்கு தகுதியில்லை.
4) கட்டுமான விரிவாக்கம் / உறுதிப்படுத்தலுக்கு கொடுக்கப்படும் நிதியின் மூலம் பயனடையும் நிறுவனத்தில் அதிகபட்சமாக (50 சதவிகிதத்திற்கும் மேல்) கல்வியில் பின்தங்கிய சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த மாணவ – மாணவியர் பயில வேண்டும்.

### நிதியுதவி வழங்குவதற்கான காரணங்கள் :

1) பள்ளியின் கட்டுமானம் / விரிவாக்கத்திற்காக
2) அறிவியல் / கணிப்பொறி ஆய்வக உபகரணங்கள் மற்றும் மேசை இருக்கைகள் வாங்குவதற்காக
3) கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் அதிகம் பயிலும் D.Ed., / B.Ed.. கல்லூரியின் கட்டுமானம் / விரிவாக்கத்திற்காக.
4) விடுதி கட்டிடம் கட்டுவதற்காக
5) கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் அதிகம் பயிலும் தொழிற்கல்வி பயிற்சி மையம் / ஐ.டி.ஐ / பாலிடெக்னிக்குகள் கட்டுவதற்கு / விரிவாக்கம் செய்வதற்கு

தகுதிகள் பற்றிய தகவல்கள் அறிய நிதியுதவியை அதிகரிப்பதற்கான விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்ய அரசுசாரா அமைப்புகள் (NGOs) MAEF–¡ www.maef.nic.inஎன்ற வலைதளத்திற்கு செல்லவும். மேலும் விகிணிதி–ன் செயலாளரை 011–23583788 ) 28583783 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**அரசுசாரா அமைப்புகளுக்கான வழிகாட்டுதலும், விண்ணப்ப படிவமும்**

**இத்திட்டத்தின் நோக்கம் :**

கல்வியில் பின்தங்கியுள்ள சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில், தேவையான வசதிகள் இல்லாமல் இருக்கும் தொடக்க நிலை/உயர்நிலை/மேல்நிலை பள்ளிகள் / இளநிலைக் கல்லூரிகள் / தொழில்முறை கல்வி / தொழிற்கல்வி பயிற்சி நிலையங்கள் ஆகிய கல்வி நிறுவனங்களுக்கு தேவைப்படும் அடிப்படையான உள் கட்டமைப்புகள் மற்றும் வசதிகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கம்.

**மானியம் வழங்கப்படுவதற்கான அடிப்படை நோக்கம் :**

* கல்வியில் பின்தங்கியுள்ள சிறுபான்மையினர் சார்ந்த பள்ளிகளின் கட்டுமானம் / விரிவாக்கத்திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பது.
* அறிவியல் /கணினி ஆய்வக உபகரணங்கள் / மேசை மற்றும் இருக்கைகள் வாங்குவதற்கு நிதியுதவி அளிப்பது.
* விடுதி கட்டிடம் கட்டுவதற்காக நிதியுதவி அளிப்பது.

**கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் சார்ந்த D.Ed., / B.Ed.. கல்லூரிகள் கட்டுமானம் / விரிவாக்கத்திற்காக.**

* கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் அதிகம் பயிலும் தொழிற்கல்வி பயிற்சி மையம் / ஐ.டி.ஐ /

**மானியம் பெற தேவையான தகுதிகள் :**

* சங்கங்கள் பதிவுச் சட்டம் / இந்திய அறக்கட்டளை சட்டம் ஆகியவற்றின் கீழ் கடந்த 3 வருடங்களாக சங்கங்கள் / அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
* சங்கங்கள் / அறக்கட்டளைகள் முறையாக தணிக்கை செய்த அறிக்கை வைத்திருக்க வேண்டும். நிதி இறுதி அறிக்கை (Balance Sheet) பற்றுச் சீட்டு (Receipt Payment), வரவு – செலவு (Income & Expenditure) அறிக்கைகள், கடந்த 3 ஆண்டுகளின் சங்கம் மற்றும் அறக்கட்டளையின் கல்வி செயல்பாடுகளை பிரதிபலிக்க வேண்டும்.
* தன்னார்வமாக அவர்களது திட்டங்களை பெருக்குவதற்கு அறிவார்ந்த நபர்களின் பங்களிப்பை பெற சங்கம் / அறக்கட்டளை தகுதியுடையதாக இருக்க வேண்டும்.
* சங்கம் / அறக்கட்டளை எந்த தனி நபருக்காகவும் இயங்கக் கூடாது. தனிநபர்கள் / குடும்பத்தினர் கொண்ட அமைப்பாகவும் இருக்க கூடாது. தனிநபர் அல்லது தனிநபர்கள் / குடும்பத்தினர்கள் கொண்ட அமைப்புகளின் கட்டுப்பாட்டில் இருக்க கூடாது.
* கட்டுமானம்/ விரிவாக்கத்திற்கான நிதியுதவி தேவைப்படும் நிறுவனங்கள் ஒருபொருட்டாக (Existence) மற்றும் State / Central Board / Council / University களால் அங்கீகாரம் பெற்றோ / இணைந்தோ இருக்க வேண்டும்.
* சங்கங்கள் / அறக்கட்டளைகள் அரசியல் கட்சிகளின் நலனுக்காக இயங்க கூடாது.
* சமூக பதட்டங்களை எந்தவகையிலும் தூண்டக் கூடியதாக இருக்க கூடாது.
* கட்டுமானம் / உறுதி படுத்துவதற்கான நிதியுதவி பெறும் நிறுவனங்களில் பயிலும் பெரும்பாலான மாணவ

**- மாணவியர் (50 விழுக்காட்டிற்கும் மேல்) கல்வியில் பின்தங்கிய சமூகத்தவர்களாக இருக்க வேண்டும். / குறிப்பிடப்பட்ட சமூகத்தவர்களாக இருக்க வேண்டும் (Target Group).**

* விடுதிகள் கட்டுவதற்கு நிதியுதவி கோரும் நிறுவனங்கள் குறைந்த பட்சம் 8ம் வகுப்பு வரை அனுமதி பெற்றிருக்க வேண்டும்.
* கட்டுமானத்திற்கு சம்பந்தப்பட்ட நிறுவனம் நகர்புறத்தில் 1000 சதுர அடி பரப்பளவும், கிராம புறத்தில் 1 ஏக்கர் நிலமும் தனது பெயரில் வைத்திருக்க வேண்டும். அல்லது குறிப்பிட்ட திட்டத்திற்கு 30 ஆண்டுகளுக்கு குறையாமல் குத்தகை ஒப்பந்தம் போட்டிருக்க வேண்டும்.
* திட்டத்தின் மொத்த செலவில் 10 சதவிகிதத்தை அரசு சாரா அமைப்பின் பங்காக முதலீடு செய்ய சங்கம் / அறக்கட்டளை தயாராக இருக்க வேண்டும்.
* MAEF–ன் உதவியோடு கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது சங்கம்/ அறக்கட்டளை கடன் பெறக் கூடாது.
* MAEF–ன் உதவியோடு எந்த நிலத்தின் மீது கட்டிடம் கட்டப் பட்டிருக்கிறதோ அந்த நிலத்தின் மீதும் கடன் வாங்க கூடாது. இருப்பினும் கடன் பெற தேவை ஏற்படின் முன் அனுமதியை பெற வேண்டும்.

**திட்டத்தை தாக்கல் செய்வதற்கான வழிகாட்டுதல்கள் :**

* இத்திட்டத்தின் கீழ் உதவி தேடும் சங்கம் / அறக்கட்டளை Annexure II–ல் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் காரணங்களுக்காக மட்டும் விண்ணப்பிக்கலாம்.
* பின்தங்கிய பகுதிகள், குறிப்பாக, கல்வியில் பின்தங்கியவர் களுக்கே அதிக கவனமும் / முன்னுரிமையும் கொடுக்கப்படும்.
* ஒரு அமைப்புக்கான உதவித்தொகை ரூபாய் 30 லட்சத்தை தாண்டாது. ஒரு நேரத்தில் ஒரே காரணத்திற்காக மட்டுமே நிதியுதவி வழங்கப்படும். தகவல்களுக்கும் உச்ச அளவிற்கும் Annexure –A–ஐ பார்க்கவும்.
* தேவைப்படும் போது இத்திட்டம் மறுபரிசீலனை செய்யப்படும். நிரந்தர பயனாளியாக கருதும்படி எந்தவொரு அமைப்பு / நிறுவனம் வைக்கும் வேண்டுகோள் ஏற்கப்படாது.
* விண்ணப்பத்தை தபால் மூலம் அமைப்புக்கு (MAEF) அனுப்பி வைக்கலாம். அல்லது வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நேரடியாக வந்து விண்ணப்பம் கொடுக்கலாம். வருந்தோறும் மே 1ஆம் தேதி முதல் செப்டம்பர் 30ம் தேதி வரை விண்ணப்பிக்க முடியும். முழுமை
* Annexure–ல் கொடுக்கப்பட்டிருக்கும் சரிபார்ப்பு பட்டியலை (Check list) கவனமாக பூர்த்தி செய்ய வேண்டும். ஒவ்வோர் ஆவணத்திலும் பக்க எண்களை சரியாக குறிப்பிட வேண்டும். எந்தவொரு கட்டத்தையும் நிரப்பாமல் விடக்கூடாது. ஒவ்வொரு பக்கத்திலும் கையப்பமிட வேண்டும்.
* ஒரு நேரத்தில் ஒரே ஒரு திட்டத்திற்குத் தான் நிதியுதவி தரப்படும்.
* விண்ணப்பத்துடன் இணைக்கப்படும் ஆவணம்/இணைப்புத் தாள் ஒவ்வொன்றும் முதல்தர கெஜட்டட் ஆபிசர் (Gazzette Officer) அல்லது நோட்டரி பப்ளிக் (Notary Public) ஆல் சான்றளிக்க / சான்றொப்பமிடப் பட்டிருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட சங்கம் / அறக்கட்டளை அதிகாரிகள் கொடுக்கும் சான்றொப்பம் (attestation) ஏற்றுக்கொள்ளப்படாது.
* மாணவ / மாணவியர்களுக்கான தங்கும் விடுதிகள் கட்டுவதற்கான விண்ணப்பங்களாக இருந்தால், அந்நிறுவனத்தில் விடுதி கட்ட தேவை இருப்பதற்கான காரணம் குறித்து எழுத வேண்டும். இருப்பினும், விடுதி கட்டிடம் கட்டும் திட்டத்தை முடிவு செய்யும் போது ஏற்கனவே விடுதிகள் இயங்கி கொண்டிருக்கும் கல்வி நிறுவனத்திற்கே முன்னுரிமை தரப்படும்.

### இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கான வழிமுறைகள் :

இத்திட்டத்திற்கான விண்ணப்பத்தை அமைப்பின் (MAEF) அதிகாரிகள் ஆய்வு செய்வார்கள். அதில் குறைபாடுகள் காணப்பட்டால் சம்பந்தப்பட்ட அமைப்பு / கல்விநிறுவனத்திற்கு பதிவு தபால் மூலம் தெரிவிக்கப்படும்.

– திட்டம் முழுவதும் ஆய்விற்கு உட்படுத்தப்படும். இந்த ஆய்வை மாநில அரசின் அதிகாரிகள் / அமைப்பின் உறுப்பினர்கள் அல்லது இதற்கான வேலைகளை அமைப்பு யாரிடம் ஒப்படைத்திருக்கிறதோ அந்த நபர்கள் திட்டம் முழுவதையும் ஆய்வு செய்வார்கள். ஆய்வின் அறிக்கைகள் மீது முடிவெடுப்பதற்கான அமைப்பின் துணைக்குழு / நிர்வாகக்குழு (Sub–committee / Governing Body) முன்பு வைக்கப்படும். இதன் முடிவுகள் சம்பந்தப்பட்ட அமைப்பு / நிறுவனத்திற்கு தெரிவிக்கப்படும்.

## தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (தமிழ்நாடு அரசு நிறுவனம்)

தமிழ்நாட்டில் சிறுபான்மையினர்களாக கருதப்படும் கிருத்தவர்கள், இசுலாமியர்கள், சீக்கியர்கள், புத்தமத்தினர் மற்றும் பார்சியர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வகையில் வியாபாரம் மற்றும் தொழில்கள் செய்வதற்கு பல்வேறு கடன் உதவி திட்டங்களை தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தி வருகின்றது.

இக்கழகம் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகத்துடன் இணைந்து கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

### தனிநபர் கடன் திட்டம் - 1

### கடனுதவி பெறுவதற்கான பொதுவான தகுதிகள் :

1) பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் நகர்புறத்தில் வசிப்பவராக இருப்பின் ரூபாய் 1 லட்சத்து 3 ஆயிரத்திற்கு மேற்படாமலும், கிராம புறத்தில் வசிப்பவராக இருப்பின் ரூபாய் 83,000/– க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
2) விண்ணப்பதாரர் 18 வயது நிறைவு செய்து இருத்தல் வேண்டும்.
3) ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் வியாபாரம் தொழில் தொடங்கவும் மற்றும் ஏற்கனவே செய்து வரும் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் கடன் அளிக்கப்படுகிறது.

### கடன் தொகையின் அளவு :

நபர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூபாய் 30 லட்சம் கடனுதவி வழங்கப் படும். ரூபாய் 5 லட்சத்திற்கு மேல் வழங்கப்படும் கடன் தொகையில் முதலில் வழங்கப்பட்ட 50 சதவிகித கடன் தொகை முழுமையாக உபயோகிக்கப்பட்டதா என்பதை சரிபார்த்த பின் மீதி தொகை விடுவிக்கப்படும்.

### தனிநபர் கடன் திட்டம் - 2

### கடன் உதவி பெறுவதற்கான தகுதிகள்
### வருமான வரம்பு

பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூபாய் 6 லட்ச த்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

1) சில்லறை வியாபாரம் மற்றும் வியாபார அபிவிருத்தி கடனுதவி.
2) கைவினைஞர் மற்றும் மரபு வழிச்சார்ந்த தொழில்கள் மற்றும் அபிவிருத்தி கடனுதவி.
3) தொழில் மற்றும் தொழில் சேவை நிலையங்கள்.

4) இலகுரக போக்குவரத்து வாகன கடன்.

5) விவசாயம் தொடர்பான தொழில்கள்.

**கடன் வழங்கும் முறை :**

விண்ணப்பங்கள் கூட்டுறவு வங்கியின் விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்பட்டு உரிய பரிந்துரையுடன் டாம்கோ–வில் பெறப்பட்டு தகுதி இருப்பின் கடன் தொகை சம்பந்தப்பட்ட வங்கி மூலமாக வழங்கப்படும்.

**நிதியுதவி பங்கு தொகை மற்றும் வட்டி விகிதம் :**

தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் பங்கு 90 சதவிகிதம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு 5 சதவிகிதம் பயனாளியின் பங்கு 5 சதவிகிதம் வட்டி விகிதம் ஆண்டிற்கு 6 சதவிகிதம்

கடன் தொகையினை திரும்பச் செலுத்தும் கால வரம்பு கடன் தொகை வட்டியுடன் அதிகபட்சம் 60 மாத சம தவணை களில் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு உரிய தேதியில் செலுத்திட வேண்டும்.

**கடன் தவணை உரிமை காலம் : 6 மாதம்**
**பயன்பாட்டு காலம்**
**மூன்று மாதத்திற்குள் தொழில் தொடங்க வேண்டும்**

**அபராத வட்டி**

கடன் தவணைத் தொகை செலுத்த தவறினால் 5% அபராத வட்டி பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும்.

விண்ணப்பிப்பதற்கான ஆவணங்கள் :

1. ஆதார் அட்டை நகல்
2. சாதிச்சான்றிதழ் நகல் / பள்ளி மாற்றுச்சான்றிதழ் நகல்
3. வருமான சான்றிதழ் நகல்
4. இருப்பிட சான்றிதழ் நகல்
5. Bonafide Certicate அசல் நகல்
6. கல்விக் கட்டணங்கள் செலுத்தி இரசீது / செலான் (Original)
7. மதிப்பெண் சான்றிதழ் நகல்
8. வங்கி கோரும் இதர இனங்கள்

**கல்விக்கடன் திட்டம் 1**

சிறுபான்மையினர் மாணவ – மாணவியர்கள் அரசால் அங்கீ கரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை/முதுகலை தொழிற் கல்வி / தொழிற்நுட்பக்கல்வி (ம) குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி படிப்பு (Short Term High Skill Development Courses) பயில் பவர்களுக்கு கல்விக்கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தில் பின்வரும் இனங்களுக்காக
கடன் அளிக்கப்படுகிறது தகுதியான கட்டணங்கள்:

1. சேர்க்கை கட்டணம் / பயிற்றுவிப்பு கட்டணம்
2. புத்தகம், எழுதுபொருள் மற்றும் படிப்புக்கு தேவையான உபகரணங்கள்
3. தேர்வு கட்டணம்
4. விடுதி மற்றும் உணவு கட்டணம் (விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மட்டும்).

**கடனுதவி விபரங்கள் :**

குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி படிப்பு (ஒரு வருடம்) ரூபாய் 3 இலட்சம்

தொழிற்கல்வி / தொழில் நுட்பக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகள் (அதிகபட்சம் 5 வருடம்) வருடத்திற்கு ரூபாய் 3 லட்சம் வீதம் அதிகபட்சம் ரூபாய் 15 லட்சம் வரை

முதுகலை தொழிற்கல்வி / தொழில் நுட்பக் கல்வி படிப்புகள் (அதிகபட்சம் 3 வருடம்) வருடத்திற்கு ரூபாய் 3 லட்சம் வீதம் அதிகபட்சம் ரூபாய் 9 லட்சம் வரை

வெளிநாடுகளில் தொழிற்கல்வி / தொழில் நுட்பக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகள் (அதிகபட்சம் 5 வருடம் ) வருடத்திற்கு ரூபாய் 4 லட்சம் வீதம் அதிகபட்சம் ரூபாய் 20 லட்சம் வரை

வட்டி விகிதம் ஆண்டிற்கு 3 சதவிகிதம்

**கல்விக்கடன் திட்டம் 2**

சிறுபான்மையினர் மாணவ – மாணவியர்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை / முதுகலை தொழிற்கல்வி / தொழிற்நுட்பக்கல்வி (ம) குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி படிப்பு (Sort Term Hight Skill Development Courses) பயில்பவர்களுக்கு கல்விக்கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தில் பின்வரும் இனங்களுக்காக கடன் அளிக்கப்படுகிறது
தகுதியான கட்டணங்கள்

1. சேர்க்கை கட்டணம் / பயிற்றுவிப்பு கட்டணம்
2. புத்தகம், எழுதுபொருள் மற்றும் படிப்புக்கு தேவையான உபகரணங்கள்
3. தேர்வு கட்டணம்
4. விடுதி மற்றும் உணவு கட்டணம் (விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மட்டும்).

**கடனுக்கு உத்தரவாதம்**

அரசு / பொதுத்துறை நிறுவனங்கள் / வங்கிகள் / தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஒரு தனிநபர் உத்தரவாதம் (ஜாமீன்) அல்லது வங்கி கோரும் ஆவணம்.

**கடனுதவி விபரங்கள் :**

குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி படிப்பு (ஒரு வருடம்) ரூபாய் 3 லட்சம்

தொழிற்கல்வி / தொழில் நுட்பக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகள் (அதிகபட்சம் 5 வருடம்) வருடத்திற்கு ரூபாய் 4 லட்சம் வீதம் அதிகபட்சம் ரூபாய் 20 லட்சம் வரை

முதுகலை தொழிற்கல்வி / தொழில் நுட்பக் கல்வி படிப்புகள் (அதிகபட்சம் 3 வருடம்) வருடத்திற்கு ரூபாய் 3 லட்சம் வீதம் அதிகபட்சம் ரூபாய் 15 லட்சம் வரை

வெளிநாடுகளில் தொழிற்கல்வி / தொழில் நுட்பக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகள் (அதிகபட்சம் 5 வருடம் ) வருடத்திற்கு ரூபாய் 6 லட்சம் வீதம் அதிகபட்சம் ரூபாய் 30 லட்சம் வரை

வட்டி விகிதம் ஆண் பயனாளிகளுக்கு ஆண்டிற்கு 8 சதவிகிதம்
வட்டி விகிதம் ஆண் பயனாளிகளுக்கு ஆண்டிற்கு 5 சதவிகிதம்

**கடன் தொகையினை திரும்பச் செலுத்தும் கால வரம்பு**

கல்வி பருவக்காலம் முடிந்த தேதியிலிருந்து, அடுத்த 6 வது மாதத்திலிருந்து அல்லது பணியில் அமர்ந்த தேதியிலிருந்து இதில் எது முந்தையதோ அந்த தேதியிலிருந்து அசல் மற்றும் வட்டி தொகை 60 மாதம் வசூலிக்கப்படும்.

### அபராத வட்டி

கடன் தவணைத்தொகை செலுத்த தவறினால் 5 சதவிகித அபராத வட்டி மாணவ / மாணவியர் / பெற்றோர் / பாதுகாவலர்களிடம் வசூலிக்கப்படும்.

### விண்ணப்பிப்பதற்கான ஆவணங்கள் :

1. ஆதார் அட்டை நகல்
2. சாதிச்சான்றிதழ் நகல் / பள்ளி மாற்றுச்சான்றிதழ் நகல்
3. வருமான சான்றிதழ் நகல்
4. இருப்பிடச் சான்றிதழ் நகல்
5. உண்மைச் சான்றிதழ் (Bonafide Certicate) அசல் நகல்
6. கல்விக் கட்டணங்கள் செலுத்தி இரசீது / செலான் (Original)
7. மதிப்பெண் சான்றிதழ் நகல்
8. வங்கி கோரும் இதர இனங்கள்

### கல்விக்கடன் புதுப்பித்தல்

ஒவ்வொரு ஆண்டும் மாணவ – மாணவியர் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கான மதிப்பெண் சான்றிதழ் வங்கியில் தவறாது சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு :** மேற்படி அனைத்து ஆவணங்களின் நகல்கள் கல்வி நிலையங்களின் முதல்வரின் கையப்பம் (Attestation) அவசியம் பெற்று, தவறாது விண்ணப்பத்துடன் வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும்.

### கறவை மாடுகள் கடனுதவி

கறவை மாடுகள் வாங்கிட ஆவின் நிறுவனத்தின் மூலமாக கடனுதவி பின் வருமாறு அளிக்கப்படுகிறது.

கடன் விபரம் கறவை மாட்டுக்கான கடன் தொகை கலப்பின முர்ரா எருது

ஒரு கறவை மாடு வாங்கிடரூபாய் 25 ஆயிரம் ரூபாய் 35 ஆயிரம்

இரண்டு கறவை மாடுகள் வாங்கிட ரூபாய் 50 ஆயிரம் ரூபாய் 70 ஆயிரம்

1. வட்டி விகிதம் ஆண்டிற்கு 6 சதவிகிதம்
2. கடன் தொகை வட்டியுடன் திரும்ப செலுத்தும் காலம் அதிக பட்சம் 36 மாதங்கள் ஆகும்.

### ஆட்டோ வாங்க கடன்

இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினர்களுக்கு சுயதொழில் தொடங்கிட தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆட்டோ வழங்கப்படுகிறது. இக்கடன் தனிநபர் கடன் விதிமுறைகளின் அடிப்படையில் தாய்கோ வங்கி மூலம் அளிக்கப்படுகிறது.

### நிபந்தனைகள் :

1) விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் ஆட்டோ தொழில் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு பங்கு மூலதனமாக ரூபாய் 800 அச்சங்கத்திற்கு அளிக்க வேண்டும்.
2) பயனாளிகள் ஒவ்வொருவரும் இரண்டு ஆட்டோ ஓட்டும் நபர்களின் பிணையம் மற்றும் சொத்து ஜாமீன் அளிக்க வேண்டும். சொத்து ஜாமீன் அளிக்க இயலாதவர்கள், கூடுதலாக குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவரின் பிணையம் மற்றும் ஆட்டோ கடன் தொகையில் 10 சதவிகிதம் தாய்கோ வங்கியில் வைப்பு நிதியாக செலுத்த வேண்டும். இதற்கு வட்டி உண்டு. தவணை தவறினால் வைப்பு நிதி ஈடுகட்டப்படும்.

3) ஆட்டோ கடன் தொகையில் 5 சதவிகிதத் தொகையை பயனாளிகள் பங்குத் தொகையாக செலுத்த வேண்டும்.

4) ஆட்டோ தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர் மற்றும் பயனாளிகளிடமிருந்து பிரதி மாதம் தவணைத் தொகையை வசூலித்து தாய்கோ வங்கியில் தவணை தொகையில் தவறாது செலுத்த வேண்டும்.

5) நான்கு வருடத்திற்கு தொடர்பு வைப்பு நிதியாக பிரதி மாதம் ரூபாய் 500 கட்ட வேண்டும்.

6) ஆட்டோ தொழில் கூட்டுறவு சங்கம், தொழில் மற்றும் வணிகத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும்.

7) கடன் (அசல் மற்றும் வட்டி) தொகை திரும்ப செலுத்தும் காலம் அதிகபட்சம் 4 வருடங்கள் (48 மாதங்கள்).

8) வட்டி விகிதம் ஆண்டிற்கு 6 சதவிகிதம்

## சிறுகடன் திட்டம்-1

சிறுபான்மை மக்கள் சுய உதவிக் குழுக்களை அமைத்து தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ சிறு வியாபாரம் / சிறு தொழில் செய்து தங்களது வருமானத்தை பெருக்கி வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ஆண்டிற்கு 7 சதம் என்ற குறைந்த வட்டியில் சிறுகடன் நபர் ஒருவருக்கு ரூபாய் 1 லட்சத்திற்கு மிகாமல் வழங்கும் சிறப்புமிகு திட்டம் டாம்கோ கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிதியுதவி அளிக்கப்படும் சிறுதொழில்கள் / சிறு வியாபாரங்கள்

காய்கனி கடை, மீன் வியாபாரம், பூ வியாபாரம், பலகாரக்கடை, தையல் கடை, கைத்தொழில்கள், சிறு வணிகம் போன்றவை.

## தகுதிகள்

பயனாளி, சிறுபான்மை சுயஉதவிக் குழுவில் அங்கத்தினராக இருத்தல் வேண்டும். மேலும், அந்த குழு குறைந்தது ஆறு மாதம் சேமித்தல் மற்றும் கடன் அளித்தல் பணியில் தொடர்ந்து நன்றாக செயல்பட்டு இருக்க வேண்டும்.

சிறுபான்மை சுய உதவிக்குழு இக்குழுவில் 60 சசதவிகிதத்தினர் அவசியம் இருத்தல் வேண்டும். எஞ்சியுள்ள 40 சதவிகிதம் பிற்பட்டோர் /

## சுயஉதவிக் குழுவின் அங்கத்தினர் எண்ணிக்கை

சுயஉதவிக் குழுவில் அதிக பட்சமாக 20 அங்கத்தினர்களும் குறைந்தபட்சமாக 10 அங்கத்தினர்களும் இருத்தல் வேண்டும். பெண்கள் / ஆண்கள் சிறுபான்மையினர் குழுக்களுக்கு சிறுகடன் வழங்கப்படும். இவற்றில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அதிகபட்ச சிறுகடன் மற்றும் வட்டி விகிதம் சிறுபான்மை சுயஉதவிக் குழுவில் இருக்கும் உறுப்பினர்களுக்கு அதிகபட்சமாக கடன் தொகை ரூபாய் 1 லட்சத்திற்கு ஆண்டிற்கு 7 சதவிகித வட்டி விகிதத்தில் அளிக்கப்படும்.

## சிறுகடன் திட்டம் - 2

சிறுபான்மை மக்கள் சுய உதவி குழுக்களை அமைத்து தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ சிறு வியாபாரம் / சிறு தொழில் செய்து தங்களது வருமானத்தை பெருக்கி வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ஆண்டிற்கு பெண்களுக்கு 8 சதவிகிதம், ஆண்களுக்கு 10 சதவிகிதம் என்ற குறைந்த வட்டியில் சிறுகடன் நபர் ஒருவருக்கு ரூபாய் 1 லட்சத்து 50 ஆயிரத்துக்கு மிகாமல் வழங்கும் சிறப்புமிகு திட்டம் டாம்கோ கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிதியுதவி அளிக்கப்படும் சிறுதொழில்கள் / சிறு வியாபாரங்கள்

காய்கனி கடை, மீன் வியாபாரம், பூ வியாபாரம், பலகாரக்கடை, தையல் கடை, கைத்தொழில்கள், சிறு வணிகம் போன்றவை.

**தகுதிகள் :**

பயனாளி, சிறுபான்மை சுயஉதவிக் குழுவில் அங்கத்தினராக இருத்தல் வேண்டும். மேலும், அந்த குழு குறைந்தது ஆறு மாதம் சேமித்தல் மற்றும் கடன் அளித்தல் பணியில் தொடர்ந்து நன்றாக செயல்பட்டு இருக்க வேண்டும்.

**சிறுபான்மை சுய உதவிக்குழு**

இக்குழுவில் 60 சதவிகிதத்தினர் அவசியம் இருத்தல் வேண்டும். எஞ்சியுள்ள 40 சதவீதம் பிற்பட்டோர் / ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / ஊனமுற்றோர் இடம் பெறலாம்.

**சுயஉதவிக் குழுவின் அங்கத்தினர் எண்ணிக்கை**

சுயஉதவிக் குழுவில் அதிக பட்சமாக 20 அங்கத்தினர்களும் குறைந்தபட்சமாக 10 அங்கத்தினர்களும் இருத்தல் வேண்டும். பெண்கள் / ஆண்கள் சிறுபான்மையினர் குழுக்களுக்கு சிறுகடன் வழங்கப்படும். இவற்றில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**அதிகபட்ச சிறுகடன் மற்றும் வட்டி விகிதம்**

சிறுபான்மை சுய உதவிக் குழுவில் இருக்கும் உறுப்பினர் களுக்கு அதிகபட்சமாக கடன் தொகை ரூபாய் 1 லட்சத்து 50 ஆயிரம்.

வட்டி விகிதம் ஆண் பயனாளிகளுக்கு : 10 சதவிகிதம்
வட்டி விகிதம் பெண் பயனாளிகளுக்கு : 8 சதவிகிதம்

**கடன் தொகையினை திரும்பச் செலுத்தும் கால வரம்பு**

பயனாளி கடன் பெறும் தொகைக்கு ஏற்ப அசல் மற்றும் வட்டி 12 / 24 / 36 மாத தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்.

**அபராத வட்டி**

கடன் தவணைத்தொகை செலுத்த தவறினால் 5 சதவிகித அபராத வட்டி பயனாளியிடமிருந்து வசூலிக்கப்படும்.

**வங்கியில் சேமிப்பு கணக்கு துவங்குதல்**

டாம்கோ நிறுவனம் கடன் உதவிகளை பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கி வருவதால் சுயஉதவிக் குழுக்கள் கூட்டுறவு வங்கியில் சேமிப்பு கணக்கு அவசியம் துவங்கியிருக்க வேண்டும்.

**கடன் வழங்கும் முறை :**

1) சிறுபான்மை சுயஉதவிக் குழுக்கள் பூர்த்தி செய்யப்பட்ட சிறுகடன் விண்ணப்பம் மற்றும் படிவம் அ –வினை கூட்டுறவு வங்கிகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
2) மத்திய கூட்டுறவு வங்கி / நகர கூட்டுறவு வங்கி, சுய உதவிக் குழுக் களின் நிலையான தன்மை, கடனை திருப்பிச் செலுத்தும் திறமை (சிக்ஷீமீபீவீt ஸிணீtவீஸீரீ) போன்றவற்றை உறுதி செய்து, வங்கியின் பரிந்துரையுடன் படிவம் – அ் வினை டாம்கோ நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
3) மேற்படி பரிந்துரையின் அடிப்படையில் நகர கூட்டுறவு வங்கி அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு சிறுகடன் தொகையை டாம்கோ நிறுவனம் வழங்கும்.

### சுய உதவிக் குழு அமைத்தல்

சுயஉதவிக்குழுவை அமைத்திட அந்தந்த மாவட்டத்திலுள்ள மேம்பட்டு திட்ட அலுவலர் அவர்களை அணுக வேண்டும்.

### விண்ணப்பப் படிவம்

மேற்படி கடன் உதவி கோரும் விண்ணப்பப் படிவம் எவ்வித கட்டணமும் இன்றி மாவட்ட மத்திய / நகர கூட்டுறவு வங்கி கிளைகள் மற்றும் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் அலுவலகங்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுலர் அலுவலகங்கள் மற்றும் சென்னையில் மேலே கண்ட முகவரியில் உள்ள டாம்கோ அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது இதற்கான விண்ணப்பப் படிவத்தினை ஒளிப்பட நகல்களில் பூர்த்தி செய்து தேவையான அனைத்து சான்று ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை

மேற்படி கடன் உதவி திட்டங்களுக்கு உரிய விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து அனைத்து சான்று ஆவணங்களுடன் தாங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகங்கள் அல்லது மத்திய மாவட்ட கூட்டுறவு வங்கி கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கிகள் அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களிடம் விண்ணப்பிக்கலாம்.

### மேலும் விபரங்களுக்கு

சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களிடமோ அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட மத்திய / நகர கூட்டுறவு வங்கி கிளைகளிலோ அல்லது

## தமிழக அரசின் சமூக நலத்திட்டங்கள்

### முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் :

* தமிழ்நாட்டிலுள்ள இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த வயது முதிர்ந்த ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட முஸ்லிம் மகளிர் நலனுக்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் அமைக்கப் பட்டுள்ளது.
* சங்கங்கள் திரட்டும் நன்கொடை, நிதி ஆதாரத்திற்கு இணையாக ஒவ்வொரு சங்கத்திற்கும் அதிகபட்சம் ரூ.20 லட்சம் அரசால் இணை மானியம் வழங்கப்படுகிறது.
* இந்த நிதி தொகுப்பிலிருந்து வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் உதவிகள் மற்றும் தேவைக்கேற்ப தையல், பூ வேலைப்பாடுகள், காலணிகள் செய்வது கைவினைப் பொருள்கள் செய்யப் பயிற்சி அளித்தல், சிறு தொழில் துவக்க உதவிடல்
* மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள முஸ்லிம் மகளிருக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து சலுகைகள் / உதவித் தொகைகள் கிடைக்க வழிவகை செய்து அவர்களின் வாழ்வாதாரம் உயரச் செய்தல்.
* சுய உதவிக் குழுக்கள் அமைத்து பயிற்சி அளித்து சிறு வியாபாரம் துவங்க கடனுதவி கோருபவர்களுக்கு டாம்கோ நிறுவனத்தின் மூலம் கடனுதவி வழங்க ஏற்பாடு செய்தல்.

### உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் சமூக, பொருளாதார மற்றும் கல்வி ஆகிய நிலைகளில் முன்னேற்றத்தை அடைவதற்கென உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

> தமிழ்நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் மதரஸாக்களில் பணி புரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷ¨ர்கானாக்கள் மற்றும் முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு தகுதியுடையவராவார்.

> உறுப்பினர் 18 உயது நிறைவு செய்து 60 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.

> பதிவு பெற்ற உறுப்பினருக்கு ஓர் அடையாள அட்டை கட்டணமின்றி வழங்கப்படும்.

> உறுப்பினர் பதிவு செய்து 3 ஆண்டுகள் முடியும் தருவாயில் பதிவை மீண்டும் புதுப்பிக்க வேண்டும்.

**வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் விபரம் :**

> கல்வி உதவித் தொகை (10 ஆம் வகுப்பு முதல் பட்ட மேற்படிப்பு வரை அவரவர் பயிலும் பாடப்பிரி¬விற்கு ஏற்ப) ரூபாய் 1000/– முதல் ரூபாய் 8000 /– வரை

> திருமண உதவித் தொகை – ரூபாய் 2000/–

> மகப்பேறு உதவித் தொகை – ரூபாய் 6000/–

> கண் கண்ணாடி செலவுத் தொகையை ஈடு செய்தல் – ரூபாய்.500 /– (அதிகபட்சம்)

> முதியோர் ஓய்வூதியம் (பிரதிமாதம்) – ரூபாய் 1000 /– (60 வயது மேற்பட்டவருக்கு)

> விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை ரூபாய் 1 லட்சம்.

> விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப – ரூபாய் 10,000 /– முதல் ரூபாய் 1 லட்சம்.

> இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை – ரூபாய் 20,000 –

> ஈமச் சடங்கு செலவிற்கான உதவித் தொகை ரூபாய் 5,000 /–

> இவ்வாரியத்தின் மூலம் நலத்திட்ட உதவிகள் பெறப்படிகள் வேறு வாரியங்களிலிருந்து இதே நலத்திட்ட உதவிகள் பெற இயலாது.

மேலும் விவரங்களுக்கு தங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகவும், விண்ணப்பப்படிவங்கள் www.minorityaffairs.gov.in. / www.bcmbcmw.tn.gov.in_welfschemes.htm என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

**சேவை இல்லங்கள்**

பெண்களின் சமூகப் பாதுகாப்புக்கான பல திட்டங்களும் தமிழக அரசினால் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் முக்கியமானவை சேவை இல்லங்கள். இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்திலேயே ஓமந்தூர் ராமசாமி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியில் இத்திட்டம் தொடங்கப்பட்டு பல மாவட்டங்களிலும் இன்றளவிலும் சேவை இல்லம் எனும் விடுதிகள் திறக்கப்பட்டு வருகின்றன.

கைம்பெண்கள், கணவரால் கைவிடப் பட்டவர்கள், ஆதரவற்ற ஏழைப் பெண்கள் நலனுக்கான கல்வி, தங்குமிடம், தொழிற்கல்வி ஆகியவற்றை இந்த சேவை இல்லங்கள் வழங்குகின்றன. குடும்ப வருமானம் 24 ஆயிரம் ரூபாய்க்குட்பட்டதாகவும் 14 வயது முதல் 45 வயது வரையிலான பெண்களுக்கு இந்த சேவை இல்லங்கள் இடம் தருகின்றன. சேவை இல்லத்தில் தொழில் பயிற்சி பெறும் கைம்பெண்கள் அவர்களுடைய மூன்று குழந்தைகள் வரை பயிற்சிக் காலத்தில் தங்க வைத்துக்கொள்ளலாம். அந்தக் குழந்தைகளில் ஆண் குழந்தை என்றால் 5–ஆம் வகுப்புவரை சேவை இல்லத்தில் தங்கிப் படிக்கலாம். பெண் குழந்தை என்றால் 12¬ஆம் வகுப்பு வரை தங்கிப் படிக்கலாம்.

கைம்பெண்கள் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண் களுக்கு 6-ஆம் வகுப்பு முதல் மேல்நிலை வகுப்பு (+1, +2) வரை கல்வி அளிக்கப்படுவதுடன் தையல், தட்டச்சு, சுருக்கெழுத்து, கணினி, அழகுக்கலை, பட்டு நெசவு ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அரசு இடைநிலை ஆசிரியைப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. இங்கு தங்க அனுமதிக்கப்படும் பெண்கள் அவர்களின் குழந்தைகளுக்கான உணவு, உடை, படுக்கை, மருத்துவம், காலணி, பாடப் புத்தகங்கள், சுற்றுலா ஆகியவை அரசு விதிகள் மற்றும் ஒதுக்கப்படும் நிதிகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இத்தகைய சேவை இல்லங்களில் தங்கிப் படித்த பெண் குழந்தைகளின் தொழிற்கல்விக்காக ஆண்டுக்கு 50ஆயிரம் ரூபாயும், பட்டப் படிப்புக்கு ரூபாய் 30ஆயிரம், பட்டயப் படிப்புக்கு ரூபாய் 30ஆயிரம் வழங்கப்படுகின்றன.

## பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதி

வீடே சிறையாகப் பூட்டப்பட்டிருந்த பெண்கள் கல்வி, வேலை வாய்ப்பு, தலைமைப் பண்பு எனப் பல நிலைகளிலும் இன்று உயர்ந்துள்ளனர். வேலை காரணமாக சொந்த ஊரைவிட்டு தனித்து வரும் பெண்களின் பாதுகாப்பு கருதி பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் நீண்டகாலமாக பல இடங்களிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த பணியாற்றும் பெண்கள் இந்த விடுதிகளில் மூன்றாண்டுகள் வரை தங்கித் தங்கள் பணியிடங்களுக்குச் செல்லலாம்.

கூடுதல் காலம் தங்கவேண்டுமென்றால் அதற்கானத் தேவை, தங்கியிருந்த காலத்தில் நடந்து கொண்டமுறை, விடுதிக் காப்பாளரின் பரிந்துரை இவற்றின் அடிப்படையில் கால நீட்டிப்பு அளிக்கப்படும். மாத வருமானம் சென்னையில் ரூபாய் 25 ஆயிரம் குள்ளாகவும், வெளியூர்களில் ரூபாய் 15 ஆயிரத்திற்குள்ளாகவும் இருக்க வேண்டும். சென்னையில் விடுதி மாதவாடகை ரூபாய் 300. மற்ற மாவட்டங்களில் ரூபாய் 200. உணவு மற்றும் மின்கட்டணம் விகிதாச்சார அடிப்படையில் பகிர்மானம் செய்யப்படும்.

பெண்களுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம். ஏழை மகளிருக்கு வேலைவாய்ப்புகள் அளித்து அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் விதத்தில் பல பயிற்சி மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பனை ஓலை பயிற்சி மையம், தையல் தொழில் பயிற்சி மையம், பாய்முடை தொழில் பயிற்சி மையம், துணி பொம்மை தயாரிப்பு பயிற்சி மையம் உள்ளிட்ட பல பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுபோலவே எழுதுபொருள் மற்றும் தையல் சங்கங்கள், தையல் கூட்டுறவு சங்கங்கள், சாக்பீஸ்-கயிறு தயாரித்தல் சங்கங்கள் எனப் பல சங்கங்கள் 1978-79-ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு பல துறைகளிலும் விரிவடைந்து வருகின்றன.

## மூத்த குடிமக்கள் நலன்

மூத்த குடிமக்களுக்கு அரசு சார்பில் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களுக்கான மருத்துவ சிகிச்சை உள்ளிட்டவற்றிலும் கவனம் செலுத்தப்படுகிறது. ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற மூத்த குடிமக்கள் இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் 2011-12¬ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் தமிழகத்தில் 64 ஒருங்கிணைந்த வளாகங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## தமிழ் வழி பயிலும் மாணவ, மாணவியருக்கு ஊக்கத் தொகை

தமிழ் வழியாகக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிப்பதற்காக தமிழ் வழிக் கல்வி ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 1971-72ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தமிழ் வழிக் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் **ஆண்டுக்கு 400 ரூபாய்** ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

## பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவச படிப்பு திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதால், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு பயில விரும்பும் ஏழை மாணவிகளின் நலனைக் காப்பதற்காகவும் பட்ட **இக்கல்வியாண்டிலிருந்து** இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 24 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

## துப்புரவுத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உதவி

இத்திட்டத்தின் கீழ் துப்புரவுத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அவர்களது சாதி, மதம் மற்றும் வருமான வரம்பினை கணக்கில் கொள்ளாமல் உதவித்தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்காது பயிலும் மாணவ, மாணவியர்க்கு மாதம் ஒன்றிற்கு முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை 40 ரூபாயும், ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை 60 ரூபாயும், ஒன்பதாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பிற்கு 75 ரூபாயும் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு மூன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையில் மாதம் 300 ரூபாயும், ஒன்பதாம் மற்றும் பத்தாம் வகுப்பு படிப்பவர்களுக்கு மாதம் 375 ரூபாயும் வழங்கப்படுகிறது. தனி மானியமாக விடுதியில் தங்காமல் படிக்கும் மாணவ, மாணவியர்க்கு ஆண்டுக்கு 550 ரூபாயும், விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு 600 ரூபாயும் வழங்கப்படுகிறது.

## தமிழ் முதல் மொழிப் பாடம்: மாணவர்களுக்கான கல்வி ஊக்கத் தொகை

திறமை மிக்க மாணவர்கள் மேற்படிப்பைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் அரசு இத்திட்டத்தைக் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்படி மாநில அளவில் தமிழை முதல் மொழிப் பாடமாகப் படித்து பிளஸ் 2 தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அரசு, மெட்ரிகுலேசன், ஆங்கிலோ இந்தியன் பள்ளி மாணவர்களுக்கு அளிக்கப்படும் பரிசுத் தொகை:

முதலிடம் ரூபாய்.15,000/–

இரண்டாமிடம் ரூபாய் 12,000/–

மூன்றாமிடம் ரூபாய் 10,000/–

அதே போன்று, மாநில அளவில் தமிழை முதல் மொழிப் பாடமாக படித்து முதல் மூன்று இடங்களைப் பெறும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு அளிக்கப்படும் பரிசுத்தொகை :

முதலிடம் ரூபாய் 7500/–

இரண்டாமிடம் ரூபாய் 6000/–

மூன்றாமிடம் ரூபாய் 5000/–

மேலும் மேல்நிலைத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று வகை (அரசுப்பள்ளி–1, நிதியுதவி பெறும் பள்ளி–1, ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேசன், சுயநிதி பள்ளி ஆகிய மூன்றும் சேர்ந்து–1) பள்ளி மாணவர்களின் மேற்கல்விக்கான முழுச் செலவையும் அரசே ஏற்கிறது.

மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று வகை (அரசுப்பள்ளி–1, நிதியுதவி பெறும் பள்ளி–1, ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேசன், சுயநிதி பள்ளி ஆகிய மூன்றும் சேர்ந்து–1) பள்ளியில் பத்தாம் வகுப்பு மாணவர்களின் மேற்கல்விக்காக ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

இதுதவிர, மேல்நிலைத் தேர்வில் மாநில அளவில் முதல் 3 இடங்களை பெறும் மாணவர்களின் மேற்கல்விக்கான முழு செலவையும் மாநில அரசே ஏற்கிறது. பாடவரியாக மாநிலத்தில் முதலிடம் பெறும் பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் விகிதத்தில் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

## தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை

தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தமிழக அரசு தொழிலாளர் நலத்துறை மூலம் வழங்கும் கல்வி உதவித் தொகை (ஆண்டுக்கு):

இளங்கலை மருத்துவப் பட்டப்படிப்பு ரூபாய் 2400/-

இளங்கலை பொறியியல் பட்டப் படிப்பு ரூபாய் 2400/-

இளங்கலை சட்டப் பட்டப் படிப்பு ரூபாய் 2400/-

இளங்கலை விவசாயப் பட்டப் படிப்பு ரூபாய் 2400/-

தொழிற் பயிற்சி கல்வி ரூபாய் 1000/-

மேல்நிலைக் கல்வி ரூபாய் 1200 /-

பொறியியல் பட்டயக் கல்வி ரூபாய் 1440/-

மருத்துவ பட்டயக் கல்வி ரூபாய் 1440/-

**கல்வி ஊக்கத் தொகை:**

ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஆயிரம் ரூபாயும், இரண்டாம் மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஐநூறு ரூபாயும் ஊக்கத் தொகையாக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

# சிறுபான்மையினர் மகளிர் உதவும் சங்கங்கள்

நீதி அரசர் சச்சார் கமிட்டி அறிக்கையில் முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மையினரின் சமுதாய அவல நிலையை சுட்டி குறிப்பிட்டு இருந்ததின் அடிப்படையில் 2007-ம் ஆண்டு தமிழகத்தில் அப்போது ஆட்சி பொறுப்பில் இருந்த திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் மூதறிஞர். முத்தமிழ் காவலர் கலைஞர். மு. கருணாநிதி அவர்கள் 1892-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சென்னை மாவட்டத்தில் மட்டும் செயல்பட்டு வந்த முஸ்லிம் மகளிர் உதவும் சங்கத்தை தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தி உத்தரவிட்டார். தற்போது இத்திட்டம் கிறிஸ்துவ மக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில், மாவட்ட மகளிர் திட்ட அலுவலரை துணை தலைவராகவும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை பொருளாளராகவும், அந்தந்த மாவட்டங்களில் முஸ்லிம் சமுதாயத்தில் நன்கு அறியப்பட்ட ஒருவரை கௌரவ செயலாளராகவும், இருவரை இணைகௌரவ செயலாளர்களாவும், மேலும் மூன்று நபர்களை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் நியமித்து ஒன்பது நிர்வாகிகளை கொண்ட சங்கத்தை துவக்கி தமிழ்நாடு சங்க பதிவு சட்டம் 1975-ம் படி பதிவு செய்து நடத்திட அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி அனைத்து மாவட்டங்களிலும் 2007-2008 ஆண்டுகளில் இருந்து இந்த சங்கங்கள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இச்சங்கங்கள் அலுவலகம் அமைத்து கொள்ளவும் தேவையான உபகரணங்கள், தொலைபேசி வசதி மற்றும் பணியாளர் ஏற்படுத்தி கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.100000 விதைத் தொகையாக வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் இச்சங்கங்கள் துவக்கப்பட்டு ஏழை, நலிந்த, ஆதரவற்ற பெண்களுக்கு கீழ்கண்ட உதவிகள் செய்திட அறிவுறுத்தப்பட்டது.

அ. ஆதரவற்ற முஸ்லிம், கிறிஸ்துவ விதவைகள் / மகளிருக்கு உதவி செய்தல் மற்றும் மாதாந்திர உதவித்தொகை வழங்குதல் மற்றும் சங்கத்தின் நிதி நிலைக்கேற்ப வேறுவகையில் உதவி புரிதல்.

ஆ. ஆதரவற்ற முஸ்லிம், கிறிஸ்துவ மகளிர்களுக்கு கைவினைப் பொருள்கள் செய்ய பயிற்சி அளித்தல் மற்றும் சிறு தொழில் துவக்க உதவுதல்.

இ. ஆதரவற்ற முஸ்லிம், கிறிஸ்துவ விதவைகள் மற்றும் வயதானவர்களுக்கு இருப்பிடம் அமைத்து கொடுத்தல்.

ஈ. ஆதரவற்ற முஸ்லிம், கிறிஸ்துவ விதவைகளுக்கு மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடத்தி மருத்துவ உதவிகள் கிடைக்கச் செய்தல்.

உ. தையல், பூ, வேலைபாடுகள் மற்றும் காலணிகள் செய்வது குறித்த பயிற்சிகள் அளித்து ஏழ்மை நிலையில் உள்ள முஸ்லிம், கிறிஸ்துவ மகளிர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படச் செய்தல்.

ஊ. மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள முஸ்லிம், கிறிஸ்துவ மகளிருக்கு மத்திய மற்றும் இதர மாநில அரசுகளிடமிருந்து சலுகைகள் கிடைக்க வழிவகை செய்து அவர்களை அத்துறையில் தேர்ச்சி பெறச் செய்தல்.

எ. வியாபாரம், தொழில் மற்றும் கல்வித்துறையில் முஸ்லிம், கிறிஸ்துவ மகளிர் உறுப்பினர்களுக்கு உதவி செய்து அவர்களை அத்துறையில் தேர்ச்சி பெறச் செய்தல்.

ஏ. சுய உதவிக் குழுக்கள் அமைத்து பயிற்சி அளித்து தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் (TAMCO) பல தரப்பட்ட கடனுதவி வழங்கும் திட்டத்தின் தேவையான பெண்களுக்கு சிறிய வியாபாரம் துவக்கக் கடனுதவி அளித்தல்.

ஐ. பொதுவாக கஷ்டப்படும் முஸ்லிம், கிறிஸ்துவ மகளிர் மற்றும் பெண்களுக்கு சங்கம் தகுதியானவர்கள் என்று நினைத்தால் அவர்களின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக உதவி புரிதல்.

மேலே கண்ட நோக்கங்களுக்காக துவக்கப்படும் இச்சங்கங்கள் அந்தந்த மாவட்டத்தில் பெயரை முதன்மையாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. (உதாரணமாக வேலூர் மாவட்ட முஸ்லிம், கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம்)

இந்த சங்கத்தின் அலுவலகம் மாவட்ட தலைநகரில் மாவட்ட ஆட்சியரின் முடிவுப்படியே அமையும். இச்சங்கம் ஒரு அரசு சாரா நிறுவனமாகவும் (N.G.O) செயல்படும்.

இச்சங்கத்தின் நிர்வாகிகள்:

| | |
|---|---|
| தலைவர் | பதவிவழி மாவட்ட ஆட்சியர் |
| துணைத்தலைவர் | பதவிவழி மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் |
| பொருளாளர் | பதவிவழி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம)<br>சிறுபான்மையினர் நல அலுவலர் |
| கௌரவ செயலாளர் | முஸ்லிம் சமுதாயத்தில் பிரபலமாக அறியப்பட்ட ஒருவரை |
| கௌரவ இணைச் செயலாளர் (1) | கௌரவ செயலாளராகவும், இருவரை கௌரவ இணைச் |
| கௌரவ இணைச் செயலாளர் (2) | செயலாளராகவும், மற்றும் மூவரை நிர்வாகக்குழு உறுப்பினர்களாகவும் முதல் ஒரு வருடத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் நியமிக்கப்படுவர். |
| கௌரவ இணைச் செயலாளர் (3) | பின்பு பொதுக்குழுவால் தேர்வு செய்யப்படுவார்கள் |

## நிர்வாக குழு உறுப்பினர்கள் மூவர்

இச்சங்கத்திற்கு தேசியமாக்கப்பட்ட வங்கிகளில் சேமிப்பு கணக்கு ஆரம்பித்து துணைத்தலைவர், மற்றும் பொருளாளர் இணைந்து வங்கி கணக்கை நிர்வகிக்க வேண்டும். செலவினங்கள் நிர்வாகக்குழு கூட்டத்தின் முடிவுப்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த சங்கம் தன்னார்வலர்கள், கொடையாளிகள், வியாபாரிகள், தொழிலதிபர்கள், வெளிநாடு வாழ் இந்தியர்களிடம் இருந்து நன்கொடை திரட்டும், இந்த சங்கம் திரட்டும் நன்கொடைக்கு இணையாக அரசு 1:2 என்ற விகிதத்தில் இணைமான்யம் வழங்குகிறது. சங்கத்திற்கு 18 வயது நிரம்பிய ஆண், பெண் இருபாலர்களையும் உறுப்பினர்களாக சேர்க்கலாம். உறுப்பினர்கள் மூன்று வகைபடுவர். அவை (1) புரவலர் உறுப்பினர் (PATRON) (2) ஆயுட்கால உறுப்பினர் (LIFEMEMBER) மற்றும் (3) சாதாரண உறுப்பினர் (ORDINARY MEMBER).

இவர்களின் தகுதிகள் புரவலர்\உறுப்பினர் ரூ. 5000 /- கட்டணம் செலுத்த வேண்டும். ஆயுட்கால உறுப்பினராக ரூ. 1000 /- செலுத்த வேண்டும். இவர்கள் விரும்பினால் மேலும் ரூ. 4000 /- செலுத்தி புரவலராக மாற்றிக்கொள்ளலாம். சாதாரண உறுப்பினராக பிரதி வருடம் ரூ. 500 /- சந்தாவாக செலுத்த வேண்டும். சாதாரண உறுப்பினர் செலுத்தும் சந்தா ஒரு வருட காலத்திற்கு மட்டுமானது. பிரதி வருடம் ஏப்ரல் மாதம் சந்தா செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் உறுப்பினர் பட்டியலில் இருந்து அவர்களின் பெயர் நீக்கப்படும்.

சங்கத்தின் நடைமுறைகள், நிர்வாக அமைப்பு, பொருளாதா்ர விஷயங்கள், தேர்தல் நடைமுறை, பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டிய விவரங்கள் அனைத்தும் சங்க விதிகளில் குய்ப்பிடப்பட்டுள்ளது.

இந்த சங்கத்தின் நிர்வாகக்குழு, செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டங்கள் சங்கத்தின் தலைவரான மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையிலும், அவர் இல்லாத போது துணைத்தலைவர், அவர்

இல்லாத போது சங்க பொருளாளர், இவர்கள் இல்லாத போது கௌரவ செயலாளர் தலைமையில் நடத்தப்படவேண்டும். நிர்வாகக்குழு கூட்டம் பிரதி மாதமும், செயற்குழு கூட்டம் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடத்தப்படவேண்டும். பொதுக்குழு கூட்டம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் நடத்தப்பட வேண்டும். பொதுக்குழு கூட்டத்தில் வாக்களிக்கதகுதியான உறுப்பினர்களைக் கொண்டு கௌரவ செயலாளர், இணைச்செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்படுவார்கள். பதவியில் இருக்கும் நிர்வாகிகள் போட்டியிட்டு மீண்டும் தேர்வு செய்யப்படலாம். பதவியில் இருக்கும் நிர்வாகிகள் புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகளிடம் தாமதமின்றி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டும். நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்பாக உறுப்பினர்களுக்கு அறிவிப்பு செய்ய வேண்டும்.

சங்கத்தின் சட்டங்கள் பொதுக்குழுவில், சங்கத்தின் நோக்கங்களையொட்டி மாற்றி அமைக்கப்படலாம். சங்கத்தின் தலைவர், துணைத்தலைவர், பொருளாளர் ஆகியவர்களை பொதுக்குழுவில் மாற்றுவதற்கு இயலாது. பிரதி வருடம் சங்கத்தின் பதிவு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் உரிய ஆவணங்களோடு புதுப்பிக்கப்பட வேண்டும்.



சிறப்பு விருந்தினர்
மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்
திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள்


தலை நிமிர்ந்த
தமிழகம்